# இயேசுவின் மரணத்துக்கான 50 காரணங்கள்

# இயேசுவின் மரணத்துக்கான 50 காரணங்கள்

ஜான் பைப்பர்

# அர்ப்பணம்
## இயேசு கிறிஸ்துவுக்கு...

*அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரால்
புறக்கணிக்கப்பட்டவரும்,
துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்...
நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு,
சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்.
நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு,
நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்;
நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல்
வந்தது;
அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.
நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித்திரிந்து,
அவனவன் தன்தன் வழியிலே போனோம்;
கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல்
விழப்பண்ணினார்.
அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார்,
ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை;
அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்
குட்டியைப்போலவும்,
தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற
ஆட்டைப்போலவும்,
அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்....
ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டு போனார்;
என் ஜனத்தின் மீறுதலினிமித்தம் அவர் வாதிக்கப்பட்டார்....
அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை.
கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி, அவரைப்
பாடுகளுக்குட்படுத்தினார்.*

*தீர்க்கதரிசியாகிய ஏசாயா
அதிகாரம் 53, வசனங்கள் 3-10*

# அட்டவணை


முன்னுரை

கிறிஸ்துவும் துன்புறுத்தல் முகாம்களும் 9

1. கடவுளுடைய கோபாக்கினையை ஏற்றுக்கொள்வதற்காக 18
2. அவருடைய பரலோக தந்தையை மகிழ்விப்பதற்காக 20
3. கீழ்ப்படிதலை கற்றுக்கொண்டு பூரணம் அடைவதற்காக 22
4. மரணத்தில் இருந்து தன்னுடைய சொந்த உயிர்த்தெழுதலை அடைவதற்காக 24
5. கடவுளுடைய அன்பின் செல்வாக்கையும் கிருபையையும் பாவிகளுக்கு காண்பிக்க 26
6. அவருடைய சொந்த அன்பை நமக்கு காண்பிப்பதற்காக 28
7. நமக்கு எதிராக இருந்த நியாயப்பிரமாணத்தின் சட்டபூர்வமான எதிர்பார்ப்புகளை தள்ளுபடி செய்ய 30
8. அநேகரை மீட்கும் பொருளாக மாற 32
9. நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காக 34
10. நாம் நீதிமான்களாக்கப்படுவதற்கான அடிப்படையைக் கொடுப்பதற்காக 36
11. நம்முடைய நீதியாக மாறுகின்ற கீழ்ப்படிதலை நிறைவுசெய்ய 38
12. நம்முடைய ஆக்கினை தீர்ப்பை எடுத்துக்கொள்ள 40
13. இரட்சிப்பின் அடிப்படையில் விருத்தசேதனத்தையும் மற்ற சடங்குகளையும் அழிக்க 42
14. நம்மை விசுவாசத்திற்குள் கொண்டுவரவும் நம்மை விசுவாசமுள்ளவர்களாக வைத்துக்கொள்ளவும் 44
15. நம்மை பரிசுத்தமாகவும், குற்றமற்றவர்களாகவும், பூரணராகவும் மாற்றுவதற்காக 46
16. நமக்கு தெளிந்த மனசாட்சியை கொடுப்பதற்காக 48
17. நமக்கு நன்மையான எல்லா காரியங்களையும் நமக்காக பெற்றுக்கொள்ள 50
18. மனம் மற்றும் உடல்ரீதியான நோய்களில் இருந்து நம்மை குணப்படுத்த 52
19. அவரை நம்புகிற அனைவருக்கும் நித்திய வாழ்வை கொடுப்பதற்காக 54
20. நம்மை தற்போதைய பொல்லாத காலத்தில் இருந்து விடுவிக்க 56
21. கடவுளுடன் நம்மை ஒப்புரவாக்க 58
22. நம்மை கடவுளிடம் கொண்டு வர 60
23. நாம் அவருக்கு சொந்தமானவர்களாக மாறும்படியாக 62
24. நாம் பரிசுத்தமான இடத்திற்குள் தைரியமாக அணுக 64

25. நமக்காக கடவுளை நாம் சந்திக்கும் இடமாக அவர் மாற 66
26. பழைய ஏற்பாட்டு ஆசாரியத்துவத்தை முடிவுக்கு கொண்டுவந்து, நித்திய பிரதான ஆசாரியராக மாற 68
27. பரிதபிக்கக்கூடிய உதவிகரமான ஆசாரியராக மாற 70
28. முன்னோர்களின் வீணான நடத்தையில் இருந்து நம்மை விடுதலையாக்க 72
29. பாவத்தின் அடிமைத்தனத்தில் இருந்து நம்மை விடுவிக்க 74
30. நாம் பாவத்துக்கு செத்து நீதிக்கு பிழைத்து இருப்பதற்காக 76
31. நியாயப்பிரமாணத்திற்கு மரித்து கடவுளுக்காக கனி கொடுக்கும்படியாக 78
32. நாம் நமக்கென்று பிழைத்திருக்காமல் கிறிஸ்துவுக்காக வாழும்படியாக 80
33. நம்முடைய எல்லா பெருமைகளுக்கும் தன் சிலுவையே காரணமாக இருக்க 82
34. அவர்மேல் உள்ள விசுவாசத்தினால் பிழைத்திருக்கச் செய்ய 84
35. திருமணத்திற்கு ஆழமான அர்த்தம் கொடுக்க 86
36. நற்செயல்கள் செய்ய பக்திவைராக்கியம் உள்ளவர்களை உருவாக்க 88
37. தாழ்மையிலும் விலையேறப்பெற்ற அன்பிலும் தம் எடுத்துக்காட்டை நாம் பின்பற்ற அழைப்பதற்காக 90
38. சிலுவையில் அறையப்பட்ட ஒரு சீஷர் குழுவை உருவாக்க 92
39. மரண பயத்தின் அடிமைத்தனத்தில் இருந்து நம்மை விடுவிக்க 94
40. மரித்தவுடன் அவரோடு நாம் இருப்பதற்காக 96
41. மரணத்தில் இருந்து நம்முடைய உயித்தெழுதலை பாதுகாக்க 98
42. அதிகாரிகளையும் ஆட்சியாளர்களையும் அதிகாரம் இழக்கச் செய்ய 100
43. சுவிசேஷத்தில் கடவுளுடைய சக்தியை வெளிப்படுத்துவதற்காக 102
44. வேற்று இனத்தவர்களுக்கு இடையே இருக்கும் பகையை அழிக்க 104
45. ஒவ்வொரு கோத்திரம், மொழி, இனம் மற்றும் நாடுகளில் இருந்து மக்களை மீட்பதற்காக 106
46. உலகம் முழுவதிலும் இருந்து தன் ஆடுகளை ஒன்றுசேர்க்க 108
47. இறுதி தீர்ப்பில் இருந்து நம்மை மீட்க 110
48. அவருடைய சந்தோஷத்தையும் நம்முடைய சந்தோஷத்தையும் பெற்றுக்கொள்ள 112
49. அவர் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட 114
50. மோசமான தீமையும் நன்மைக்காகவே கடவுள் செய்தார் என்பதை காண்பிக்க 116
ஜெபம் 119
வேதாகமப் பதிவுகளின் வரலாற்று நம்பகத்தன்மை குறித்த புத்தகங்கள் 121
குறிப்புகள் 122
தேவனை வாஞ்சித்தல் (Desiring God) ல் இருந்து ஆதாரங்கள் 123

முன்னுரை

# கிறிஸ்துவும் துன்புறுத்தல் முகாம்களும்

✞

இயேசு கிறிஸ்து ஏன் உலகிற்கு வந்து மரித்தார்? இதுவே இருபத்து ஓராம் நூற்றாண்டின் மிக முக்கியமான கேள்வி. இதன் முக்கியத் துவத்தை உணர்ந்துகொள்ள நாம் மனித சிந்தனைகளை தாண்டி யோசிக்க வேண்டும். இயேசுவை யார் கொலைசெய்தார்? என்கிற கேள்விக்கான உச்சகட்ட பதில் : கடவுள் செய்தார் என்பது தான். இது ஒரு தடுமாற்றமளிக்கும் சிந்தனை. இயேசு அவருடைய மகன்! ஆனால் வேதாகமத்தின் ஒட்டுமொத்த செய்தியும் இந்த முடிவுக்கே வழிநடத்துகிறது.

## நன்மைக்காக கடவுள் இதை செய்தார்

கிறிஸ்துவுக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த எபிரேய தீர்க்கதரிசி ஏசாயா இவ்வாறு கூறினார், *"கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார்" (ஏசாயா 53:10).* கிறிஸ்தவர்களின் புதிய ஏற்பாடு இப்படிச் சொல்கிறது, *"(கடவுள்) தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்(தார்)தவர்"(ரோமர் 8:32)."*
*"கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக (கிறிஸ்துவையே) அவரையே ஏற்படுத்தினார்"(ரோமர் 3:26).*

ஆனால் இந்த தெய்வீக செயலுக்கும், இயேசுவைக் கொலை செய்த மனிதர்களுடைய கொடூரமான பாவ செயல்களுக்கும் என்ன தொடர்பு? வேதத்தில் இடம்பெற்று இருக்கும் ஒரு முற்கால ஜெபத்தில் இதற்கான விடை கொடுக்கப்பட்டு இருக்கிறது *"உம்முடைய கரமும் உம்முடைய ஆலோசனையும் முன் குறித்தவைகள் யாவையும் செய்யும்படி, ஏரோதும் பொந்தியுபிலாத்தும், புறஜாதிகளோடும் இஸ்ரவேல் ஜனங்களோடுங்கூட, நீர் அபிஷேகம்பண்ணின உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவுக்கு விரோதமாய், மெய்யாகவே கூட்டங்கூடினார்கள்" (அப்போஸ்தலர் 4:27-28).* இந்த

தெய்வீக திட்டத்தின் நோக்கம் நம்மை திணரவைக்கிறது. ஆனால் இதுவே நம்முடைய இரட்சிப்பிற்கு காரணமாகவும் இருக்கிறது. கடவுள் திட்டமிட்டார், தீயவர்கள் மூலமாக அதை நிறைவேற்றினார். இதை சுருக்கமாக யூத தோராவில் இருந்து ஒரு பகுதி : நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள்; தேவனோ...அதை நன்மையாக முடியப்பண்ணினார். (ஆதியாகமம் 50:20)

நன்மைக்காக கடவுள் அதை செய்ததினால், நாம் மனித காரணங்களை தாண்டி தெய்வீக நோக்கத்தை கவனிக்க வேண்டும். முக்கியத்துவம் வாய்ந்தது இயேசுவின் மரணத்திற்கான காரணம் அல்ல நோக்கமே -அதுவே அர்த்தம் கொடுப்பது. இயேசு தங்கள் பாதையில் குறுக்கிடாமல் இருக்கவேண்டும் என்று மனிதர்கள் நினைத்து இருக்கலாம். ஆனால் உலகிற்கு அது நன்மையாக மாறும்படி கடவுளே அதை வடிவமைக்க முடியும். சொல்லப்போனால், இயேசுவின் மரணத்தில் கடவுளுடைய நோக்கங்கள் என்ன என்பதை நம்மால் உணர்ந்துகொள்ளவே முடியாது. அவற்றில் ஐம்பதை நான் விவரிக்க முயற்சிக்கிறேன். சொல்வதற்கு மேலும் பல எப்போதும் உண்டு. வேதாகமத்தைப் பேச அனுமதிப்பதே என்னுடைய நோக்கம். இங்கே தான் நாம் கடவுளுடைய வார்த்தையை கேட்கமுடியும். இந்த குறிப்புகள், தன்னுடைய மகனுடைய மரணத்தில் கடவுளுடைய மகத்துவமான திட்டத்தை மென்மேலும் அறிந்துகொள்ள, உங்களுக்குள் ஒரு தேடலை உருவாக்கும் என்று நான் நம்புகிறேன்.

## இயேசுவின் மரணம் முற்றிலும் தனித்துவம் வாய்ந்தது

அவர் ரோம சிங்காசனத்திற்கு சொந்தக்காரராக நடித்தார் என்று குற்றம்சாட்டப்பட்டு, தண்டிக்கப்பட்டார். அடுத்த மூன்று நூற்றாண்டு களில் பாடுபடுவதற்கும் அன்புசெலுத்துவதற்கும் ஒரு சக்தியை ஏற்படுத்தியது. அது ரோம சாம்ராஜ்யத்தை மாற்றியது, இந்நாள்வரை உலகை சீரமைத்துக்கொண்டு இருக்கிறது. இயேசுவின் மரணம் ஏன் மிகவும் சக்திவாய்ந்ததாக இருக்கிறது? இதற்கான பதில் இயேசுவின் மரணம் முற்றிலும் தனித்துவம் வாய்ந்தது என்பது தான். மூன்று நாட்களுக்கு பின்பு அவர் உயிர்த்தெழுந்தது, அவருடைய மரணம் சாதித்ததை, உயர்த்திக்காட்டிய கடவுளுடைய செயலாகும்.

அவர் சாதாரண மனிதனை விடவும் மேன்மையானவர் என்பதால் அவருடைய மரணம் தனித்துவம் வாய்ந்தது. அவர் குறைவானவர் அல்ல. ஆதிகால நிசேயா விசுவாசப் பிரமாணம் சொல்வதைப் போல அவர் "மெய் தேவனில் மெய் தேவனானவர்". அவரை அறிந்து, அவர் யார் என்பதை விவரிக்க அவரால் ஊக்கப்படுத்தப்பட்டவர்களுடைய சாட்சி இது. கிறிஸ்துவை "வார்த்தை" என்று குறிப்பிட்ட அப்போஸ்தலராகிய யோவான் இப்படியாக எழுதுகிறார்,".ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது...அந்த வார்த்தை மாம்சமாகி... நமக்குள்ளே வாசம்பண்ணினார்" (யோவான் 1:1-2,14).

அவருடைய பாடுகள் அனைத்திற்கும் அவர் முழுவதும் குற்றமற்றவராக இருந்தார். அவர்மீது சாட்டப்பட்ட குற்றமாகிய தேவதூஷணம் மாத்திரமல்ல, அவர் எந்த பாவமுமே செய்யவில்லை. அவருடைய நெருங்கிய சீஷர்களில் ஒருவர் இவ்வாறு கூறினார், "அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை" (1பேதுரு 2:22). இந்த உண்மையின் அடிப்படையில் அவர் தன்னுடைய சொந்த மரணத்தை முழு அதிகாரத்தோடும் ஏற்றுக்கொண்டார். தன்னுடைய சொந்த மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் குறித்து இயேசு கூறியவற்றில் மிகவும் அதிர்ச்சியூட்டக்கூடியது இதுதான் : "ஒருவனும் அதை(ஜீவனை) என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளமாட்டான்; நானே அதைக் கொடுக்கிறேன், அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரமுண்டு. இந்தக் கட்டளையை என் பிதாவினிடத்தில் பெற்றுக்கொண்டேன் என்றார்" (யோவான் 10:17-18). எந்த மனிதர்கள் இயேசுவை கொலைசெய்தார்கள் என்கிற சர்ச்சை அவசியமற்றது. அவர் மரணத்தை தெரிந்துகொண்டார். அவருடைய பரலோக தந்தை அங்கீகரித்தார். அவர் அதை தழுவிக்கொண்டார்.

## அவருடைய மரணத்தின் நோக்கம் உயிர்த்தெழுதலின் மூலமாக மேன்மை அடைந்தது

அவர் சரியானவர் என்பதை காண்பிக்கவும், அவர் சொன்னதையெல்லாம் உயர்த்திக்காட்டவுமே கடவுள் இயேசுவை மரணத்தில் இருந்து எழுப்பினார். மூன்று நாட்களுக்குப் பிறகு அது சம்பவித்தது.

ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் அவர் உயிர்த்தெழுந்தார். அவர் பரலோகத்திற்கு செல்வதற்கு முன்பு, நாற்பது நாட்கள் அநேக முறை தன்னுடைய சீஷர்கள் முன்பாக தோன்றினார். (அப்போஸ்தலர் 1:3)

அது உண்மையிலேயே சம்பவித்தது என்பதை சீஷர்கள் சற்று தாமதமாகத்தான் நம்பினார்கள். அவர்கள் எளிதில் ஏற்றுக் கொள்கிறவர்கள் அல்ல. அவர்கள் உண்மையான வணிகர்கள். மனிதர்கள் உயிர்த்தெழுவதில்லை என்பதை அறிந்து இருந்தார்கள். அவர் ஒரு பேயல்ல என்பதை நிரூபிக்க மீன் சாப்பிட்டு காட்டினார் இயேசு (லூக்கா 24:39-43). இது ஒரு உயிரடைந்த சடலம் அல்ல. அழிவில்லாத புதிய வாழ்வுக்குள் சென்ற தெய்வ மனிதனுடைய உயிர்த்தெழுதல் இது. ஆதி திருச்சபை இவரை வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவர் என்று கூறினார்கள். கடவுள் அவருக்கு கொடுத்த வேலையை இயேசு நிறைவேற்றினார். அதனால் கடவுள் திருப்தியடைந்தார் என்பதற்கான ஆதாரமே இந்த உயிர்த்தெழுதல். இயேசுவின் மரணம் இந்த உலகத்திற்காக சாதித்தது என்ன என்பதை குறித்ததுதான் இந்த புத்தகம்.

## கிறிஸ்துவின் மரணமும் மரணத்தின் முகாம்களும்

யூதர்களுக்கு எதிரான இன எதிர்ப்பு போராட்டங்களையும், இஸ்லாமியர்களுக்கு எதிரான சிலுவைப்போர் வன்முறைகளையும் கிறிஸ்துவின் மரண சம்பவம் உருவாக்கியுள்ளது என்பது வேதனைக்கு உரியது. கிறிஸ்துவின் ஆவியில் செயல்படாத நம்முடைய முதாதையர்களை குறித்து கிறிஸ்தவர்களாகிய நாங்கள் வெட்கப் படுகிறோம். இந்த வியாதியின் அறிகுறிகள் நம்முடைய மனதில் இருப்பதில் ஆச்சரியமில்லை. உண்மை கிறிஸ்தவம் வன்முறை மூலமாக மதம் முன்னேறிச் செல்வதை எதிர்க்கிறது. இது மேற்கத்திய கலாச்சாரத்தில் இருந்து வித்தியாசமானது, பல கிறிஸ்தவ சபைகளில் காணமுடியாதது. “என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல” என்றும் “என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால்...என் ஊழியக்காரர் போராடியிருப் பார்களே” என்றும் இயேசு கூறினார். (யோவான் 18:36). சிலுவையின் வழி, பாடுகளின் வழி. கிறிஸ்தவர்கள் கொலைசெய்வதற்கு அல்ல, மரிப்பதற்கே அழைக்கப்பட்டு இருக்கிறார்கள். இதன் மூலமாக கிறிஸ்து தங்களை நேசிப்பதை உலகிற்கு அவர்கள் காண்பிக்க வேண்டும்.

உண்மை கிறிஸ்தவர்கள் தாழ்மையோடு நேசிப்பார்கள், தைரியமாக கிறிஸ்துவை போற்றுவார்கள். என்ன நடந்தாலும் இரட்சிக்கப்பட்டு கடவுளிடம் செல்வதற்கான ஒரே வழி கிறிஸ்துவே என கூறுவார்கள். இயேசு "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக் கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினி டத்தில் வரான்" என்றார் (யோவான் 14:6). ஆனால் இது உங்கள் மனதில் மிகவும் தெளிவாக இருக்கட்டும் : அடக்குமுறைகள், படுகொலைகள், சிலுவைப்போர்கள், துன்புறுத்தல் முகாம்கள் ஆகியவற்றின் மூலமாக இழிவுபடுத்துதல், திட்டுதல், ஏளனம் செய்தல் மற்றும் துன்புறுத்தல் செய்தல் ஆகியவை கிறிஸ்தவம் அல்ல. இவை எளிமையாகவும், கடுமையாகவும் கூறினால், இவை இயேசு கிறிஸ்துவுக்கு கீழ்ப்படி யாமல் இருத்தல் ஆகும். அவரை பின்பற்றுகிறவர்கள் என்று கூறிக்கொண்ட பலரைப் போல இல்லாமல் அவர் சிலுவையில் இவ்வாறாக ஜெபித்தார், " பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" (லூக்கா 23:34).

இயேசு கிறிஸ்துவின் மரணமே வரலாற்றின் மிக முக்கியமான நிகழ்வு. இருபத்து ஒன்றாம் நூற்றாண்டின் மிகவும் தீவிரமான அரசியல் மற்றும் தனிப்பட்ட பிரச்சனையும் இதுதான். கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதை நிராகரிப்பது, பேரழிவை நிராகரிப்பதைப் போன்றது. இதை ஏற்றுக்கொள்வது சிலருக்கு மிகவும் கடினமானது. சிலரை பொறுத்தவரை மதரீதியான கரிசனையை திணிப்பதற்கான சதித்திட்டமே இது. ஆனால் ஏற்றுக்கொள்ளாதவர்கள் வரலாற்று கனவு உலகத்தில்தான் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். சொல்லமுடியாத வேதனையை அனுபவித்து இயேசுகிறிஸ்து மரித்தார். யூதர்களும் அப்படித்தான்.

இயேசு கிறிஸ்துவின் பாடுகளையும், யூதமக்களின் பாடுக ளையும் - கல்வாரியையும் துன்புறுத்தல் முகாமைகளையும் (Concentration Camps) இணைத்துப் பேசிய முதல் நபரல்ல நான். இதயத்தை நொறுக்கும், கபடத்தை களைக்கும், வாயை மூடவைக்கும் நைட் (Night-இரவு) என்கிற புத்தகத்தில், ஆஸ்க்விட்ஸ், பூனா மற்றும் பசன்வால்டில் இருந்த துன்புறுத்தல் முகாம்களில் ஒரு இளைஞனாக தன் தந்தையோடு தங்கி இருந்த அனுபவத்தை ஈலீ வீசல் கூறுகிறார். "தெரிந்தெடுத்தல்" பயம் எப்போதுமே இருந்தது-பெலவீனர்களை

கொண்டு சென்று, கொலைசெய்து கொப்பரையில் எரிக்கும் தெரிந்தெடுப்பு அது.

ஒரு முறை-ஒரே ஒரு முறை-வீசல் கல்வாரியையும் அந்த முகாம்களையும் இணைக்கிறார். அகிபா டூமர் என்னும் வயதான ரபீயை குறித்து அவர் சொல்கிறார்.

> தெரிந்தெடுப்பின் பலியாக, அகிபா டூமர் எங்களை பிரிந்தார். சில நாட்களாக, சோர்வான கண்களோடு, தன் பெலவீனத்தை சொன்னார்: "என்னால் இனி செல்ல முடியாது...எல்லாம் முடிந்தது...". அவருடைய மனவலிமையை அதிகரிப்பது சாத்தியமற்றது. நாங்கள் கூறிய எதையும் அவர் கவனிக்கவில்லை. அவருக்கு எல்லாம் முடிந்துவிட்டது, இனியும் அவரால் போராடமுடியாது, அவரிடம் பெலனும் இல்லை, விசுவாசமும் இல்லை என்று திரும்பத்திரும்ப கூறமட்டுமே முடிந்தது. திடீரென அவருடைய கண்கள் இருளடைந்தது, இரண்டு திறந்த காயங்களைத் தவிற வேறு எதுவும் இல்லை, இரண்டு கொடூரமான படுகுழிகள். [1]

பின்பு வீசல் இந்த கோபமூட்டும் கருத்தை ஏற்படுத்துகிறார் : "பரிதாபத்திற்குரிய அகிபா டூமர், கடவுளை அவர் நம்பி இருந்தால், இந்த கல்வாரியில் கடவுளுடைய ஆதாரத்தை பார்த்திருந்தால், அவர் தெரிந்தெடுப்பின் மூலமாக எடுத்துக்கொள்ளப்பட்டு இருக்க மாட்டார்"[2]. ஈலி வீசலுடைய வாயில் நான் எந்த வார்த்தைகளையும் போடமாட்டேன். அவர் என்ன நினைத்தார் என்பது எனக்கு சரியாக புரியவில்லை. ஆனால் அது இந்த கேள்வியை எழுப்புகிறது: இயேசு இறந்த இடமான கல்வாரிக்கும்-துன்புறுத்தல் முகாமுக்கும் இந்த இணைப்பு எதற்காக?

நான் இக்கேள்வியை கேட்கும்போது, அதன் காரணத்தையோ, பழிசொல்வதையோநினைக்கவில்லை. அர்த்தத்தையும் நம்பிக்கையையும் நான் யோசிக்கிறேன். யூதர்களின் பாடு அதற்கான காரணத்தை தேடாமல், இயேசு கிறிஸ்துவின் பாடுகளை யோசிக்க வைப்பதற்கு ஏதாகிலும் வழி இருக்கிறதா? கிறிஸ்துவின் மரணம் ஆஸ்க்விட்ஸ் யூத துன்புறுத்தல் முகாமுக்கு வழிநடத்தியது என்று நினைக்காமல், ஆஸ்க்விட்ஸ் துன்புறுத்தல்கள் கிறிஸ்துவின் மரணத்தை புரிந்துகொள்ளச் செய்யுமா? கல்வாரிக்கும் முகாமுக்குமான

இணைப்பில் உணரமுடியாத புரிந்துகொள்ளுதல் இருக்கிறதா? யூதர்களின் பாடுநிறைந்த அந்த “ஒரு நீண்ட இரவில்”[3] என்ன நடந்தது என்பதை இயேசுவால் மாத்திரமே அறிந்துகொள்ள முடியும். தங்கள் முதாதையைர்கள் அனுபவித்த சிலுவைப் பாடுகளின் வழியாக ஏதாவது ஒரு தலைமுறை யூத மக்கள் கல்வாரியில் கடவுளின் மைந்தன் பட்ட பாடுகளை புரிந்துகொள்ள வாய்ப்பு இருக்கிறது. இதை நான் ஒரு கேள்வியாகவே விட்டுவிடுகிறேன். என்னிடத்தில் பதில் இல்லை.

ஆனால் இதை நான் அறிவேன் : அந்த முகாம்களை கட்டிய “கிறிஸ்தவர்கள்” என்று அழைக்கப்பட்டவர்களுக்கு, கல்வாரிக்கு இயேசு கிறிஸ்துவை அழைத்துச் சென்றது அவருடைய அன்புதான் என்பது தெரியாது. ஒரு கலாச்சாரத்தை காப்பாற்றுவதற்காக கொலைசெய்வதை தெரிந்தெடுக்காமல், உலகை காப்பாற்றுவதற்காக மரணம் அடைந்ததை அவர்கள் அறியார்கள். ஆனால் சில கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள்-உண்மை கிறிஸ்தவர்கள்-இயேசு கிறிஸ்துவின் மரணத்தின் அர்த்தத்தை உணர்ந்து அவருடைய பாடுகளினால் உடைக்கப்பட்டு, மனத் தாழ்மையை அடைந்தார்கள். இந்த சிலராவது யூத மக்களின் பாடுகளை பார்க்க அல்லது குறைந்தபட்சம் புரிந்துகொள்ளவாவது முடியுமா?

கிறிஸ்தவர்கள் இனவெறியர்களாக இருப்பதில் என்ன ஒரு முரண்பாடு ! இயேசுவும் அவரை பின்பற்றியவர்கள் அனைவருமே யூதர்கள். பாலஸ்தீனத்தில் (யூதர்கள் அல்ல) இருந்த அனைத்து குழுக்களை சார்ந்தவர்களுமே அவரை கொலைசெய்வதில் ஈடுபட்டனர், அனைத்து குழுக்களில் இருந்தவர்களும் (யூதர்கள் உட்பட) அதை தடுக்க முயற்சித்தனர். தன்னுடைய மைந்தனின் மரணத்தில் முக்கிய கதாபாத்திரம் வகிப்பவர் கடவுளே. எனவே “இயேசு கிறிஸ்துவின் மரணத்திற்கு காரணமான மனிதர்கள் யார்?” என்கிற கேள்வி முக்கியமானது அல்ல. மாறாக “யூதர்கள், இஸ்லாமியர்கள், புத்தமதத்தவர்கள், இந்துக்கள், எம்மதத்தையும் சாராதவர்கள் உட்பட எல்லா மனிதர்களுக்கும் இயேசுவின் மரணம் கொண்டுவந்தது என்ன?” என்பதே முக்கியத்துவம் வாய்ந்த கேள்வி.

எல்லாவற்றிற்கும் பிறகு மிக முக்கியமான கேள்வி: ஏன்? மரிப்பதற்காக இயேசு ஏன் உலகிற்கு வந்தார்? காரணம் அல்ல நோக்கம் என்ன என்பதற்காகவே ஏன் என்று கேட்கப்படுகிறது. அவருடைய

மரணத்தின் மூலமாக கிறிஸ்து சாதித்தது என்ன? அவர் ஏன் இவ்வளவு பாடுபடவேண்டும்? உலகத்திற்காக கல்வாரியில் நடந்த மகத்துவமான காரியம் என்ன?

இப்புத்தகத்தின் மீதமிருக்கும் பகுதிகள் அதைப்பற்றிதான் பேசுகின்றன. இயேசு ஏன் மரிப்பதற்காக வந்தார் என்பதற்கு புதிய ஏற்பாட்டில் இருந்து ஐம்பது காரணங்களை நான் சேகரித்து இருக்கிறேன். இயேசுவை யார் கொலைசெய்தார்கள் என்கிற கேள்வியைவிட பலமடங்கு முக்கியத்துவம் வாய்ந்த கேள்வி: தன்னுடைய மகனை மரணமடைய அனுப்பியதன் மூலமாக நம்மைப் போன்ற பாவிகளுக்காக கடவுள் சாதித்தது என்ன?

# இயேசுவின் மரணத்துக்கான 50 காரணங்கள்

# 1

# கடவுளுடைய கோபாக்கினையை ஏற்றுக்கொள்வதற்காக

✞

*மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்.*
கலாத்தியர் *3:13*

*தேவன் பொறுமையாயிருந்த முற்காலத்தில் நடந்த பாவங்களைத் தாம் பொறுத்துக்கொண்டதைக்குறித்துத் தம்முடைய நீதியைக் காண்பிக்கும்பொருட்டாகவும், தாம் நீதியுள்ளவரும், இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிறவருமாய் விளங்கும்படி, இக்காலத்திலே தமது நீதியைக் காண்பிக்கும்பொருட்டாகவும், கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினார்.*
*ரோமர் 3:25,26*

*நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்திசெய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது.*
*1 யோவான் 4:10*

கடவுள் நீதியுள்ளவராக இல்லாதிருந்தால், தன்னுடைய மகன் பாடுபட்டு மரணமடைய வேண்டிய அவசியம் இருந்திருக்காது. கடவுள் அன்பானவராக இல்லாதிருந்தால், தன்னுடைய மகன் பாடுபட்டு மரணமடைய அவர் சம்மதித்து இருக்கமாட்டார். ஆனால் கடவுள் நீதியுள்ளவரும் அன்புள்ளவருமாய் இருக்கிறார்.

கடவுளுடைய சட்டம் எதிர்பார்த்தது இதை தான், "நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக" ( உபாகமம் 6:5). ஆனால் நாம் மற்ற காரியங்களை அதிகமாக நேசித்தோம். கடவுளைவிட மற்ற காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவற்றின் அடிப்படையில் செயல்படுவதே பாவம். எனவே வேதம் இப்படி சொல்கிறது, "எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமை யற்றவர்களாகி" (ரோமர் 3:23). நாம் அதிகமாக விரும்புவதை மகிமைப்படுத்துகிறோம். அது நம் கடவுள் அல்ல.

எனவே பாவம் சிறியது அல்ல, ஏனென்றால் அது சிறிய வல்லமை உடையவருக்கு எதிராக செய்யப்படவில்லை. அவமானத்தின் கடுமை அவமானப்பட்டவருடைய சுயமரியாதையை பொறுத்து உயர்வடைகிறது. அண்டசராசரங்களை படைத்தவர் எல்லா மரியாதைக்கும்,

போற்றுதலுக்கும், உண்மைக்கும் தகுதியானவர். எனவே அவரை நேசிக்காமல் இருப்பது அர்ப்பமானது அல்ல-அது ஒரு துரோகம். அது கடவுளுடைய கௌரவத்தை கெடுத்து, மனிதனுடைய மகிழ்ச்சியை அழிக்கிறது.

கடவுள் நீதியுள்ளவராக இருப்பதால், பாதகச்செயல்களை அண்டசராசரத்தின் கம்பளத்தின் கீழ் பெருக்கித் தள்ளிவிடுவதில்லை. அவர்களுக்கு எதிராக ஒரு பரிசுத்த கோபாக்கினையை அவர் உணர்கிறார். அவர்கள் தண்டனைக்குரியவர்கள், அதை அவர் தெளிவுபடுத்துகிறார் : "பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்" ( ரோமர் 6:23). "பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்"( எசேக்கியல் 18:4).

எல்லா பாவத்திற்கு மேலும் ஒரு பரிசுத்த சாபம் தொங்கிக்கொண்டு இருக்கிறது. தண்டிக்காமல் விடுவது அதர்மம். அது கடவுளை அவமானப்படுத்துவதை ஆதரிப்பதாக மாறிவிடும். உண்மைக்கு நடுவே ஒரு பொய் ஆட்சி செய்துவிடும். எனவே கடவுள் இவ்வாறு கூறுகிறார் "நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளை யெல்லாம் செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன்" ( கலாத்தியர் 3:10; உபாகமம் 27:26)

ஆனால் பாவமுள்ள மனிதகுலத்தின் மேல் தொங்கிக்கொண்டு இருக்கிற சாபத்தை கடவுளுடைய அன்பு பொறுத்துக்கொள்வதில்லை. அது எவ்வளவு பரிசுத்தமாக இருந்தாலும் கோபாக்கினையை காண்பிப்பதில் அவர் திருப்தியடைவதில்லை. தன்னுடைய மைந்தனை அனுப்பி தன்னை நம்புகிறவர்களுடைய சாபத்தையும் தன்னுடைய கோபாக்கினையையும் ஏற்றுக்கொள்ளும்படி செய்தார். "கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்" ( கலாத்தியர் 3:13).

எனவே கடவுளை நாம் அவமதிக்காமலும் அவருடைய அன்பை அவமானப்படுத்தாமலும் இருப்போம். நம்முடைய பாவத்தின் கடுமை யை உணராமல், கடவுளுடைய நேசத்தின் அருமையை வியந்து பார்க்கமுடியாது. நமக்கு எதிரான கோபாக்கினையின் தீர்ப்பையும் உணர்ந்துகொள்ளமுடியும். ஆனால் கிருபையினால் நாம் தகுதியற்ற வர்கள் என்பதை அறிந்துகொண்டால், கிறிஸ்துவின் பாடுகளையும் மரணத்தையும் பார்த்து இப்படி கூறுவோம் "நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்மு டைய பாவங்களை நிவிர்த்திசெய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது" (1 யோவான் 4:10).

# அவருடைய பரலோக தந்தையை மகிழ்விப்பதற்காக

✞

*கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார் .*
*ஏசாயா 53:10*

*கிறிஸ்து நமக்காகத் தம்மை தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்(தார்)ததுபோல ...*
*எபேசியர் 5:2*

இயேசு தன்னுடைய கோபம்கொண்ட தகப்பனை தரையில் தள்ளி அவருடைய கையில் இருக்கும் சாட்டையை பிடுங்கிக் கொள்ளவில்லை. மனிதர்களிடத்தில் கருணையோடு இருக்க அவர் பலவந்தம் செய்யவில்லை. கடவுள் பாவிகளிடம் இலகுவாக நடந்துகொள்ள வேண்டும் என்பதற்காக வீராப்பாக தீர்மானிக்கப் பட்டது அல்ல அவருடைய மரணம். இல்லை, இயேசு பாடுபட்டு மரணமடைந்தபோது செய்தவை கடவுளுடைய யோசனையே. கடவுளே பார்வையிட்டு உலகத்தின் வரலாற்றை திட்டமிட்டபோது, உலகம் உண்டாவதற்கு முன்பே உருவாக்கப்பட்ட வியப்பூட்டும் திட்டம் அது. அதனால் தான் வேதம் இவ்வாறு கூறுகின்றது " தம்முடைய தீர்மானத்தின்படியும், ஆதிகாலமுதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும், நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்" ( 2 தீமோத்தேயு 1:9).

முன்பே யூத வேதாகமத்தில் (பழைய ஏற்பாட்டில்) இத்திட்டம் வெளியாக்கப்பட்டது. பாவிகளின் இடத்தை எடுத்துக் கொள்ளப் போகும் மேசியாவின் பாடுகளை ஏசாயா தீர்க்கதரிசி முன்னறிவித்தார். நமக்கு பதிலாக கிறிஸ்து தேவனால் அடிபட் டார் என்று எழுதுகிறார்.

*மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர்*

*காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.6. நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித்திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார் ( ஏசாயா 53:4-6).*

ஆனால் பாவிகளுக்கு பதிலாக கிறிஸ்துவை வைத்ததில் ஆச்சரியம் என்னவெனில், அது கடவுளுடைய யோசனை என்பது தான். பாவிகளை தண்டிக்கவேண்டும் என்கிற கடவுளுடைய திட்டத்தில் அவர் தலையிடவில்லை. அவர் அங்கே இருக்கவேண்டும் என்று கடவுள் திட்டமிட்டு இருந்தார். ஒரு பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசி, "கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார்" என்கிறார். ( ஏசாயா 53:10)

புதிய ஏற்பாட்டின் முரண்பாட்டை இது விவரிக்கிறது. ஒருபுறம், பாவத்தின் காரணமாக கடவுளுடைய கோபாக்கினை ஊற்றப்படுவதே கிறிஸ்துவின் மரணம். ஆனால் மறுபுறம், கிறிஸ்துவின் பாடுகள், தந்தைக்கு கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுத்தல் என்னும் அழகிய செயலாக இருக்கிறது. எனவே கிறிஸ்து சிலுவையில் இருந்து இப்படி கதறினார் "என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்" ( மத்தேயு 27:46). கிறிஸ்துவின் பாடுகள் கடவுளுக்கு சுகந்த வாசனையாக இருந்ததாக வேதம் கூறுகின்றது "கிறிஸ்து நமக்காகத் தம்மை தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்(து)தார்"( எபேசியர் 5:2).

கடவுளின் அன்பின் அற்புத அதிசயத்தை நாம் காண்பதற்காக மரித்தாரே ! அது உணர்ச்சிவசமானது அல்ல. அது எளிதானது அல்ல. நமக்காக கடவுள் முடியாததை செய்தார். தன்னுடைய சொந்த மைந்தனின் மேல் தன்னுடைய கோபாக்கினையை ஊற்றினார். அவருடைய ஒப்புக்கொடுத்தல், கோபாக்கினையை பெற்றுக்கொள்ள அவரை முற்றிலும் தகுதியற்றவராக மாற்றியது. எனினும், அதை பெற்றுக்கொள்ள அவர் தயாராக இருந்தது, கடவுளுடைய பார்வையில் விலைமதிப்பற்றதாக இருந்தது. அந்த கோபாக்கினையை பெற்றுக் கொண்டவர் அளவு கடந்து நேசிக்கப்பட்டார்.

# கீழ்ப்படிதலை கற்றுக்கொண்டு பூரணம் அடைவதற்காக

✞

*அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு...*
எபிரெயர் *5:8*

*ஏனென்றால் தமக்காகவும் தம்மாலேயும் சகலத்தையும் உண்டாக்கினவர், அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டுவந்து சேர்க்கையில் அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துகிறது அவருக்கேற்றதாயிருந்தது* .எபிரெயர் *2:10*

**வே**தத்தில், கிறிஸ்து பாடுகளின் வழியாக "கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார்" என்றும், " பூரணம் அடைந்தார்" என்றும் கூறுகின்ற அதே புத்தகம் அவர் "பாவமில்லாதவராய்" இருக்கிறார் என்றும் கூறுகின்றது. "எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்" ( எபிரெயர் *4:15*).

வேதத்தின் நிலையான போதனை இதுவே. கிறிஸ்து பாவமில்லாதவர். அவர் கடவுளுடைய தெய்வ மைந்தனாக இருந்தபோதிலும், நமக்குள்ள எல்லா சோதனைகளும், விருப்பங்களும், சரீர பெலவீனங்களும் உடைய மனிதனாகவும் அவர் இருந்தார். அவரிடம் பசியும் ( மத்தேயு *21:18*), கோபமும், வருத்தமும் (மாற்கு *3:5*), வலியும் ( மத்தேயு *17:12*) இருந்தன. ஆனாலும் அவருடைய இருதயம் கடவுளோடு பரிபூரண அன்பிலே இருந்தது, அவர் அந்த அன்பிலே நிலையாக செயலாற்றினார்: "அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை" ( *1* பேதுரு *2:22*).

எனவே, "பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு" என்று கூறும்போது, அவர் கீழ்ப்படியாமையில் இருந்து திருந்தினார் என்று அர்த்தமாகாது. ஒவ்வொரு புதிய சோதனையிலும் வலியோடு கீழ்ப்படிவது என்றால் என்ன என்பதை நடைமுறையாக

கற்றுக்கொண்டார். “உபத்திரவங்களினாலே பூரணப்பட்டார்” என்னும் போது, கொஞ்சம் கொஞ்சமாக அவர் தன்னுடைய குறைகளை நீக்கினார் என்று அர்த்தமாகாது. நம்மை மீட்கும்படியாக அவர் படிப்படியாக பூரண நீதியை நிறைவேற்றினார் என்றே பொருள் படும்.

அவருடைய ஞானஸ்நானத்தின்போது அதுவே கூறப்பட்டது. அவர் பாவி என்பதால் அவர் ஞானஸ்நானம் பெறவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. மாறாக அவர் யோவான் ஸ்நானனுக்கு விவரித்தது போல, “எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதா யிருக்கிறது” ( மத்தேயு 3:15)

இதில் கருத்து இதுவே : கடவுளின் மைந்தன் முடிசூட்டப்பட்டு, அவருடைய நீதியை சோதிப்பதற்கான வாழ்க்கையின் எந்த வலியையும், சோதனையையும் அனுபவிக்காமல் நேரடியாக சிலுவைக்கு சென்று இருந்தால், விழுந்துபோன மனிதனை மீட்பதற்கு ஏற்ற இரட்சகராக இருந்திருக்க மாட்டார். அவருடைய பாடுகள் கடவுளுடைய கோபாக்கினையை மாத்திரம் ஏற்றுக்கொள்ளவில்லை. அது அவருடைய உண்மையான மனிதத்தன்மையையும் நிறைவேற்றி நம்மை சகோதர சகோதரிகளே என்று அழைக்கவும் உதவிசெய்தது ( எபிரெயர் 2:17).

# மரணத்தில் இருந்து தன்னுடைய சொந்த உயிர்த்தெழுதலை அடைவதற்காக

✞

*நித்திய உடன்படிக்கையின் இரத்தத்தினாலே ஆடுகளுடைய பெரிய மேய்ப்பரான நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து ஏறிவரப்பண்ணின சமாதானத்தின் தேவன், இயேசு கிறிஸ்துவைக் கொண்டு தமக்குமுன்பாகப் பிரியமானதை உங்களில் நடப்பித்து, நீங்கள் தம்முடைய சித்தத்தின்படிசெய்ய உங்களைச் சகலவித நற்கிரியையிலும் சீர்பொருந்தினவர்களாக்குவாராக.*

எபிரெயர் *13:20,21*

**கி**றிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு முன்பாக மரணம் ஏற்பட்டது என்று சாதாரணமாக கூறிவிடமுடியாது.கிறிஸ்துவின் மரணம் அவருடைய உயிர்த்தெழுதலுக்கு செலுத்தப்பட்ட விலையாக இருந்தது. அதனால் தான் எபிரேயர் *13:20*, கடவுள் அவரை "நித்திய உடன்படிக்கையின் இரத்தத்தினாலே" மரணத்தில் இருந்து ஏறிவரப் பண்ணினார் என்று கூறுகின்றது.

"புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது" என்று அவர் கூறியபடி( மத்தேயு *26:28*). "உடன்படிக்கையின் இரத்தம்" இயேசுவின் இரத்தமாக இருக்கிறது. வேதம் இயேசுவின் இரத்தத்தை குறித்து பேசும்போது, அவருடைய மரணத்தை குறிப்பிடுகிறது. இயேசு இரத்தம் சிந்தினால் மாத்திரம் அது இரட்சிப்பை கொண்டுவந்துவிடாது. மரணம் வரை இரத்தம் சிந்துதலே அவருடைய இரத்தம் சிந்துதலை முக்கித்துவம் வாய்ந்ததாக மாற்றுகிறது.

இயேசுவின் இரத்தம் சிந்துதலுக்கும் அவருடைய உயிர்த்தெழுதலுக்கும் இடையே இருக்கும் உறவு என்ன? அவர் இரத்தம் சிந்திய பிறகு உயிர்த்தெழுந்தார் என்று வேதம் கூறவில்லை, அவர் இரத்தம் சிந்துதலினால் உயிர்த்தெழுந்தார் என்கிறது. கிறிஸ்துவின் மரணம் சாதித்தவை முழு நிறைவையும், பரிபூரணத்தையும் கொடுத்தது. எனவே கிறிஸ்துவின் மரணத்தில் அவருடைய சாதனைக்கு பரிசாகவும் பாராட்டுதலாகவும் உயிர்த்தெழுதல் கொடுக்கப்பட்டது.

இயேசுவின் பாடு மற்றும் மரணத்தினால் தெய்வ கோபாக்கினை திருப்தியடைந்தது. பாவத்துக்கு எதிரான பரிசுத்த சாபம் முழுவதும் நீக்கப்பட்டது. கிறிஸ்துவின் கீழ்ப்படிதல் முழு அளவில் நிறைவேற்றப்பட்டது. மன்னிப்புக்கான கட்டணம் முழுவதும் செலுத்தப்பட்டது. கடவுளுடைய நீதி முழுவதும் உயர்த்தப்பட்டது. மீதமிருந்தது கடவுளுடைய ஆதரவின் வெளிப்படையான அறிவிப்பு மாத்திரமே. இயேசுவை மரணத்தில் இருந்து உயிர்த்தெழச் செய்ததன் மூலமாக அதை அவர் கொடுத்தார்.

"கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்; நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள்" (1 கொரிந்தியர் 15:17) என்று வேதம் கூறும்போது நம்முடைய பாவங்களுக்கு பரிசாக உயிர்த்தெழுதல் கொடுக்கப்பட்டது என்பது பொருளல்ல. இயேசுவின் மரணம் போதிய கட்டணத்தை செலுத்திவிட்டது என்பதை உயிர்த்தெழுதல் நிரூபிக்கிறது என்பதே அதன் அர்த்தம். இயேசு மரணத்தில் இருந்து உயிர்பெறவில்லை என்றால், அவருடைய மரணம் ஒரு தோல்வியாக இருந்திருக்கும். பாவத்தை சுமந்து தீர்த்த சாதனையை கடவுள் பாராட்டாமல், நாம் நம்முடைய பாவத்திலேயே இருந்திருப்போம்.

ஆனால் உண்மையில் "பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார்" ( ரோமர் 6:4). அவருடைய பாடு மற்றும் மரணத்தின் வெற்றி அங்கீகரிக்கப்பட்டது. நம்முடைய நம்பிக்கையை கிறிஸ்துவின்மேல் வைத்திருந்தால், நாம் நம்முடைய பாவத்திலேயே நிலைத்திருக்கவில்லை. ஏனென்றால், "நித்திய உடன்படிக்கையின் இரத்தத்தினாலே", பெரிய மேய்ப்பர் உயிர்த்தெழுந்து, எப்போதும் உயிரோடு இருக்கிறார்.

# 5

# கடவுளுடைய அன்பின் செல்வாக்கையும் கிருபையையும் பாவிகளுக்கு காண்பிக்க

✞

*நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்.*

ரோமர் *5:7-8*

*தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.*

யோவான் *3:16*

*அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே, இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது.*

எபேசியர் *1:7*

**க**டவுளுடைய அன்பின் அளவு இரண்டு காரியங்கள் மூலமாக காண்பிக்கப்படுகிறது. ஒன்று, நம்முடைய பாவத்தின் அபராதத்தில் இருந்து நம்மை காப்பாற்றிய அவருடைய தியாகத்தின் அளவு. இரண்டாவது, அவர் நம்மை காப்பாற்றியபோது நமக்கு இருந்த தகுதியின்மையின் அளவு.

அவருடைய தியாகத்தின் அளவை அவருடைய இந்த வார்த்தைகளில் நாம் கேட்க முடியும் , "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை ... தந்தருளி"( யோவான் 3:16). கிறிஸ்து என்கிற வார்த்தையிலும் நாம் இதை கேட்கலாம். இந்த வார்த்தை "கிறிஸ்தோஸ்" என்னும் கிரேக்க பதத்தை சார்ந்தது. இதை "அபிஷேகிக்கப்பட்ட ஒருவர்" அல்லது "மேசியா" என்றும் அழைப்பார்கள். இது மரியாதைக்கு உரிய வார்த்தை. மேசியா இஸ்ரவேலுக்கு ராஜாவாக இருக்க வேண்டியவர். அவர் ரோமர்களை கைப்பற்றி, இஸ்ரவேலுக்கு சமாதானத்தையும் பாதுகாப்பையும் கொண்டு வருவார். எனவே

பாவிகளை காப்பாற்ற கடவுள் அனுப்பியவர், அவருடைய சொந்த தெய்வ மைந்தன், அவருடைய ஒரே மகன், இஸ்ரவேலின் அபிஷேகிக் கப்பட்ட அரசர், மேலும் அவர் உலகத்திற்கே ராஜா (ஏசாயா 9:6-7).

கிறிஸ்து சகித்துக்கொண்ட கொடூர மரணத்தையும் இதோடு நாம் சேர்த்துக்கொண்டால், தந்தையும் மைந்தனும் செய்த தியாகம் விவரிக்க முடியாத மகத்துவம் வாய்ந்தது என்பது தெளிவாகும். தெய்வீ கத்திற்கும் மனுஷிகத்திற்கும் இடையே இருக்கும் தூரத்தை கணக்கில் கொண்டால் இது அளவிடமுடியாதது. ஆனால் நம்மை காப்பாற்று வதற்காக இந்த தியாகத்தை கடவுள் தெரிந்துகொண்டார்.

நம்முடைய தகுதியின்மையை நாம் கருத்தில்கொண்டால் அவருடைய அன்பின் அளவு இன்னும் அதிகரிக்கும். "நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்" (ரோமர் 5:7-8). நாம் தெய்வீக தண்டனைக்கு பாத்திரவான்கள், தெய்வீக தியாகத்திற்கு அல்ல.

"கடவுள் தவளைகளுக்காக மரிக்கவில்லை. எனவே அவர் மனிதர் களுடைய மதிப்புக்காக பதிலளிக்கிறார்" என்று கூற நான் கேட்டு இருக்கிறேன். இது கிருபையை தலைகீழாக கவிழ்க்கிறது. நாம் தவளைகளை விடவும் மோசமானவர்கள். அவை பாவம் செய்ய வில்லை. தங்களுடைய வாழ்க்கை அர்ப்பமானதாக இருப்பதற்காக அவை ஆர்ப்பாட்டம் செய்து, கடவுளை அவமரியாதையாக நடத்திய தில்லை. கடவுள் தவளைகளுக்காக மரிக்கவேண்டிய அவசியம் இல்லை. அவை பொல்லாதவை அல்ல. நாமே பொல்லாதவர்கள். நம்முடைய கடன் அதிகமாக இருந்ததால், தெய்வீக பலியின் மூலமாகவே அதை செலுத்தமுடியும்.

நமக்காக கடவுள் செய்த தியாகத்திற்கு ஒரே ஒரு விளக்கம் தான் இருக்கிறது. நம்மால் அல்ல "அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின் படியே" ( எபேசியர் 1:7) இது நிகழ்ந்தது. இது முற்றிலும் இலவசம். இது நம்முடைய மதிப்பிற்கு பதிலாக கொடுக்கப்பட்டது அல்ல. இது அவருடைய அளவற்ற மதிப்பின் பெருக்கெடுப்பு. சொல்லப்போனால், இறுதியில் இதுவே தெய்வீக அன்பு : தகுதியற்ற பாவிகளை கண்ணோக்கி, அவருடைய அளவற்ற அழகை பெற்றுக்கொண்டு எப் போதும் மட்டற்ற மகிழ்ச்சியை பெறச்செய்யும் பெரிய விலையை கொடுக்க துடிக்கும் வாஞ்சை.

# அவருடைய சொந்த அன்பை நமக்கு காண்பிப்பதற்காக

✞

*கிறிஸ்து நமக்காகத் தம்மை தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்.*
எபேசியர் 5:2

*கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து...தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்.*
எபேசியர் 5:25-27

*என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமார(ன்)னை ...*
கலாத்தியர் 2:20

**கி**றிஸ்துவின் மரணம் கடவுளுடைய அன்பின் செயல்முறை மாத்திரம் அல்ல(யோவான் 3:16). தங்களுடைய பொக்கிஷமாக அதை பெற்றுக்கொள்கிற அனைவருக்கும் கொடுக்கப்படுகிற கிறிஸ்துவின் சொந்த அன்பின் சிறந்த உணர்ச்சிவெளிப்பாடு. கிறிஸ்தவர்கள் என்பதற்காக அதிகமான பாடுகளை அனுபவித்த முற்கால சாட்சிகள், கிறிஸ்து "என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்"( கலாத்தியர் 2:20) என்கிற உண்மைக்குக் கீழ்ப்பட்டவர்களாக இருந்தார்கள். தன்னையே கொடுத்த இயேசுவின் தியாகத்தை மிகவும் தனிப்பட்ட விதத்தில் எடுத்துக்கொண்டனர். "அவர் என்னை நேசித்தார், எனக்காக தன்னையே கொடுத்தார்" என்றார்கள்.

நிச்சயமாகவே கிறிஸ்துவின் பாடுகளையும் மரணத்தையும் இப்படித் தான் நாம் புரிந்துகொள்ள வேண்டும். அவை எனக்காக செய்யப்பட்டன. தனிப்பட்ட விதமாக என்மீது கிறிஸ்து வைத்திருந்த அன்பினால் அவை செய்யப்பட்டன. பொதுவான பாவம் அல்ல, என்னுடைய பாவமே என்னை கடவுளிடம் இருந்து பிரித்தது. என்னுடைய இருதயக் கடினமும், உணர்வற்ற ஆவியுமே கிறிஸ்துவின் மதிப்பை அர்ப்பமாக்கியது. நான் தொலைந்துபோனேன், அழிந்துகொண்டு இருக்கிறேன். இரட்சிப்பை பொறுத்தவரை, நீதி பெறுவதற்கான எல்லா காரணங்களையும் நான் மீறிவிட்டேன். இனி இரக்கத்திற்காக கெஞ்சுவது மாத்திரமே என்னால் இயலும்.

பின்பு நான் கிறிஸ்து பாடுபடுவதையும் மரிப்பதையும் பார்க்கிறேன். யாருக்காக? "கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்"( எபேசியர் 5:25-27) என்று வேதம் கூறுகிறது. "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற

அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை" (யோவான் 15:13). "மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" ( மத்தேயு 20:28).

"அநேகரில்" நானும் இருக்கிறேனா? "சிநேகிதரில்" ஒருவராக நானும் இருக்கமுடியுமா? "சபை"யில் நானும் இணைந்துகொள்ள முடியுமா? என்று கேட்கிறேன். பின்பு எனக்கு பதில் கேட்டது "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும்...இரட்சிக்கப் படுவீர்கள்" ( அப்போஸ்தலர் 16:31). "கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்"(ரோமர் 10:13). "அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவான்"( அப்போஸ்தலர் 10:43). "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண் டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்" ( யோவான் 1:12). "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும் படிக்கு"( யோவான் 3:16)

என்னுடைய பொக்கிஷமாக கிறிஸ்துவின் அழகையும், பெருந்தன் மையையும் நான் தழுவிக்கொண்டபோது, என் இதயம் அசைந்தது. கிறிஸ்துவின் அன்பு எனக்காக கொடுக்கப்பட்டது என்கிற இந்த மகத்துவமான உண்மை என்னுடைய இதயத்துக்குள் பாய்ந்து ஓடியது. எனவே அந்த முற்கால சாட்சிகளோடு இணைந்து நானும் சொல்கிறேன், "அவர் என்னை நேசித்தார், எனக்காக தன்னையே கொடுத்தார்".

நான் சொல்வதன் அர்த்தம் என்ன? கொடுக்கக்கூடிய மிகப்பெரிய பரிசுக்காக, செலுத்தக்கூடிய மிகப்பெரிய விலையை அவர் செலுத் தினார். அது என்ன? அவருடைய வாழ்க்கையின் முடிவில் அவர் வேண் டிக்கொண்ட பரிசு தான் அது : "பிதாவே, ... நீர் எனக்குத் தந்த என் னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன்" ( யோவான் 17:24). அவருடைய பாடு மற்றும் மரணத் திலே "அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது" (யோவான் 1:14). அவருடைய அன்பு நம்மை சிறைபடுத்துவதற்கு போதுமான காரணத்தை நாம் பார்த்துவிட்டோம். ஆனால் சிறப்பானது இனிதான் வரப்போகிறது. இதை நமக்காக பாதுகாக்க அவர் மரித்தார். அதுவே கிறிஸ்துவின் அன்பு.

# நமக்கு எதிராக இருந்த நியாயப்பிரமாணத்தின் சட்டபூர்வமான எதிர்பார்ப்புகளை தள்ளுபடி செய்ய

*உங்கள் பாவங்களினாலேயும்,...மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடேகூட உயிர்ப்பித்து, அக்கிரமங்களெல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து;*
*நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து ...*
கொலோசெயர் *2:13,14*

நம்முடைய நற்செயல்கள் ஒருநாள் நம்முடைய தீயசெயல்களை நீக்கிவிடும் என்று யோசிப்பது எவ்வளவு மூடத்தனம். அது மூடத்தனம் என்பதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன.

முதலில், அது உண்மை அல்ல. நம்முடைய நற்செயல்களும் குறைபாடுகள் உடையவை. நாம் அவற்றை செய்கின்ற விதத்தில் கடவுளை நாம் கனம் பண்ணுவது இல்லை. கடவுளுடைய உயர்ந்த மதிப்பை தெரியப்படுத்த வேண்டும் என்கிற கண்ணோட்டத்தில் மகிழ்ச்சியோடே அவரை சார்ந்து நாம் நற்செயல்களை செய்கிறோமா? "எல்லாவற்றிலேயும் இயேசுகிறிஸ்துமூலமாய் தேவன் மகிமைப்படும் படியே செய்யும்படியாக அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருக்கும்படியாக" கடவுள் கொடுத்த பெலத்தினாலே மக்களுக்கு சேவைசெய்ய வேண்டும் என்கிற அதிகப்படியான கட்டளையை நாம் நிறைவேற்றுகிறோமா? ( *1* பேதுரு *4:11*).

"விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமே" ( ரோமர் *14:23*) என்கிற கடவுளுடைய வார்த்தைக்கு நாம் என்ன பதில் சொல்லுவோம். நம்மால் எதுவும் சொல்லமுடியாது என்று நான் நினைக்கிறேன். "வாய்கள் யாவும் அடைக்கப்படும்படிக்கும்.....நியாயப்பிரமாணம்.....சொல்லுகிறதென்று அறிந்திருக்கிறோம்" (ரோமர் *3:19*). நாம் எதுவும் சொல்ல மாட்டோம். நம்முடைய நற்செயல்கள் கடவுளுக்கு முன்பாக நம்முடைய தீயசெயல்களை நீக்கிவிடும் என்பது மூடத்தனம். கிறிஸ்துவை

உயர்த்தும் விசுவாசம் இல்லாமல், நம்முடைய செயல்களுக்கு எதிர்ப்பை தவிர வேறு எந்த அர்த்தமும் இருக்காது.

நற்செயல்களில் நம்பிக்கை வைப்பது முடத்தனம் என்பதற்கான இரண்டாவது காரணம், அது கடவுளுடைய இரட்சிக்கும் வழி அல்ல என்பதுதான். நம்முடைய நற்செயல்கள் தீய செயல்களை காட்டிலும் அதிகமாக இருந்தால், நம்முடைய தீய செயல்களின் விளைவுகளால் நாம் இரட்சிப்பை அடைய மாட்டோம். ஏனென்றால் நற்செயல்கள் அதிகமாக இருக்கிறதே. பரலோகத்தில் நம்முடைய "கடன்பத்திரத்தை" சிலுவையில் வைத்து ஆணியடித்துவிட்டதால் நாம் இரட்சிப்பை அடைகிறோம். பாவிகளை அவர்களுடைய செயல்களை எடைபார்த்து இரட்சிப்பதை காட்டிலும் முற்றிலும் வித்தியாசமான வழியை கடவுள் கையாளுகிறார். நம்முடைய செயல்கள் நம்பிக்கை அற்றவை. கிறிஸ்துவின் பாடு மற்றும் மரணத்தில் மாத்திரமே நம்பிக்கை உண்டு.

நம்முடைய பத்திரங்களை தராசிலே நிறுத்துபார்ப்பதால் நமக்கு இரட்சிப்பு கிடைக்காது. நம்முடைய கடன்பத்திரத்தை அழித்தால் மட்டுமே நமக்கு இரட்சிப்பு. நம்முடைய தீய செயல்களின் பதிவுகளோடு (நம்முடைய குறைபாடுகள் நிறைந்த நற்செயல் களையும் சேர்த்து), அவை ஒவ்வொன்றுக்கும் உரிய அபராதங்களையும் கிறுக்கிப்போட வேண்டும், தராசிலே நிறுத்துப்பார்க்கக்கூடாது. இதை நிறைவேற்றவே கிறிஸ்து பாடுபட்டு மரித்தார்.

நம்முடைய செயல்களின் பதிவுகள் "சிலுவையில் வைத்து ஆணி" அடிக்கப்பட்டபோது நம்முடைய கடன் அழிக்கப்பட்டது (கொலோசெயர் *2:13,14*). இந்த குற்றப்படுத்தும் பதிவு எப்படி சிலுவையில் வைத்து ஆணி அடிக்கப்பட்டது? தோல்சுருளில் ஆணி அடிக்கப்படவில்லை, கிறிஸ்துவே சிலுவையில் ஆணி அடிக்கப் பட்டார். எனவே தீய (மற்றும் நல்ல) செயல்களின் குற்றப்படுத்தும் பதிவாக கிறிஸ்துவே மாறினார். இரட்சிப்பை முற்றிலும் வித்தியாசமான கோணத்திற்கு அவர் மாற்றினார். என் ஒரே நம்பிக்கை அவரே. அவரை விசுவாசிப்பதே நான் கடவுளிடம் செல்வதற்கான ஒரே வழி.

# அநேகரை மீட்கும் பொருளாக மாற

✞

*அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக்கொடுக்கவும் வந்தார் .*
*மாற்கு 10:45*

**பா**விகள் காப்பாற்றப்பட சாத்தானுக்கு கட்டணம் செலுத்த வேண்டும் என்று வேதத்தில் ஒரு வசனமும் இல்லை. கிறிஸ்து மரித்தபோது சாத்தானுக்கு கிடைத்தது கட்டணம் அல்ல தோல்வி. "மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கு" கடவுளின் மைந்தன் மனிதன் ஆனார். ( எபிரெயர் 2:14). இதில் பேரம்பேசுதல் எதுவும் இல்லை.

இயேசு "மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக் கவும்" வந்தேன் என்கிற போது, யார் விலையை பெற்றுக் கொள்கிறார்கள் என்பதில் கவனம் செலுத்தப்படவில்லை. பணிவிடை செய்யப்படாமல் பணிவிடை செய்கின்ற தன்னுடைய சுதந்திரத்தினால் தன்னுடைய வாழ்க்கையை கட்டணமாக செலுத்துவதிலே தான் கவனம் செலுத்தப்படுகிறது. அவர் செலுத்தும் கட்டணத்தினால் பயனடைகிற "அநேகர்" மீதும் கவனம் செலுத்தப்படுகின்றது.

யார் அந்த கட்டணத்தை பெற்றுக்கொள்கிறார் என்று கேட்டால், கடவுள் தான் என்றே வேதம் கூறும். "கிறிஸ்து நமக்காகத் தம்மை தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்தார்" என்று வேதம் கூறுகின்றது (எபேசியர் 5:2). கிறிஸ்து "பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத் தார்" ( எபிரெயர் 9:14). நமக்கு பதிலாக வேறு ஒருவர் மரணமடைவதற்கான தேவை ஏற்பட்டதற்கான காரணம், நாம் அனைவரும் பாவம் செய்து தெய்வ மகிமையை இழந்தது தான் ( ரோமர் 3:23). நம்முடைய பாவத்தினால் "உலகத்தார் யாவரும் தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்புக்கு ஏதுவானவர்களானார்கள்"(ரோமர் 3:19). எனவே மீட்கும்பொருளாக கிறிஸ்து தம்மை தாமே கொடுத்ததினால், நாம் கடவுளுடைய தண்டனையில் இருந்து விடுதலை செய்யப்பட்டு இருக்கிறோம் என்று வேதம் கூறுகின்றது. "ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட் பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை"(ரோமர்8:1). விடுதலை

யாக்கப்பட வேண்டிய உச்சகட்ட சிறையிருப்பு, "கடவுளின் நியாயத்தீர்ப்பு" (ரோமர் 2:2; வெளிப்படுத்தல் 14:7).

கடவுளுடைய தண்டைனையில் இருந்து விடுதலை பெறுவதற்கான மீட்பின் விலை கிறிஸ்துவின் வாழ்க்கையே. அவர் வாழ்ந்த வாழ்க்கை மாத்திரமல்ல, மரணத்திலே அவர் விட்டுக்கொடுத்த வாழ்க்கையும் தான். இயேசு அடிக்கடி தன்னுடைய சீஷர்களிடம் " மனுஷகுமாரன் மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுவார் என்றும், அவர்கள் அவரைக் கொன்று போடுவார்கள் என்றும்; கொல்லப்பட்டு, மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்திருப்பார்" என்று சொல்லியிருந்தார் ( மாற்கு 9:31). இயேசு தன்னை "மனுஷகுமாரன்" (நற்செய்தி நூல்களில் அறுபத்து ஐந்து முறைக்கு மேல்) என்று கூறிக்கொள்ள விரும் பியதற்கான காரணம், அதிலே சாகும்தன்மை ஒன்று இருந்தது. மனிதர்கள் மரணம் அடைவார்கள். அதனாலே தான் அவர் மனிதனாக இருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. மனுஷகுமாரன் மாத்திரமே அந்த மீட்கும் விலையை கொடுக்கமுடியும். எனென்றால் மீட்கும் விலை மரணத்தின் மூலமாக கொடுக்கப்பட்ட வாழ்க்கையே.

அந்த விலை அவரிடத்தில் இருந்து பலவந்தமாக வசூலிக்கப் படவில்லை. "ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்ய" வந்தார் என்று கூறுவதன் காரணம் அது தான். நம்முடைய சேவை எதுவும் அவருக்கு தேவை இல்லை. அவர் கொடுப்பவர், வாங்குபவர் அல்ல. "ஒருவனும் அதை (வாழ்வை) என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள் ளமாட்டான்; நானே அதைக் கொடுக்கிறேன்"( யோவான் 10:18). கட்டணம் சுதந்திரமாக செலுத்தப்பட்டது; பலவந்தமாக அல்ல. அது மீண்டும் நம்மை அவருடைய அன்புக்குள் கொண்டு வருகிறது. அவருடைய வாழ்க்கையை விலையாக செலுத்தி நம்மை காப்பாற்ற அவர் சுதந்திரமாக முடிவு எடுத்தார்.

பாவத்தில் இருந்து வெற்றிகரமாக எத்தனை பேரை கிறிஸ்து மீட்டுக்கொண்டார்? "அநேகரை மீட்கும்பொருளாக தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும்" அவர் வந்ததாக கூறினார். இருப்பினும் எல்லோருமே கடவுளுடைய கோபாக்கினையில் இருந்து மீட்டுக்கொள் ளப்பட மாட்டார்கள். ஆனால் அனைவருக்கும் கொடுக்கப்படுகிறது. "தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே"( 1 தீமோத்தேயு 2:5,6). மீட்கும்பொருளாக தன்னையே கொடுத்த கிறிஸ்துவை பற்றிக்கொண்டவர்கள் எவரும் இரட்சிப்பில் இருந்து நிராகரிக்கப்படுவது இல்லை.

# நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காக

✞

*இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது.*
எபேசியர் *1:7*

*இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது.*
மத்தேயு *26:28*

**நா**ம் ஒரு கடனை அல்லது குற்றத்தை அல்லது காயத்தை மன்னிக்கும்போது, நாம் அதை சரிகட்ட கட்டணம் கேட்பதில்லை. அப்படி கேட்பது மன்னிப்புக்கு எதிரானதாக இருக்கும். நாம் இழந்தவற்றிற்கு கட்டணம் செலுத்தப்பட்டு விட்டால், மன்னிப்பிற்கு அவசியம் இல்லை. நாம் அதற்கு உரிமை உள்ளவர்கள் ஆகிவிடு வோம்.

மன்னிப்பு கிருபையினால் வருகிறது. உங்களால் நான் காயப்பட் டால், கிருபை அதை விட்டுவிடும். நான் உங்களிடம் நஷ்ட ஈடு கேட்க மாட்டேன். நான் உங்களை மன்னிப்பேன். ஒருவருக்கு தகுதியற்ற ஒன்றை கிருபை அவருக்கு கொடுக்கிறது. அதனால் தான் மன்னிப்பு என்கிறதற்கான ஆங்கில வார்த்தையில் (Forgive) கொடு (Give) என்கிற வார்த்தை இடம்பெறுகின்றது. மன்னிப்பு என்பது சரிசமமாக வாங்கிக்கொள்வது அல்ல. பெற்றுக் கொள்வதற்கான உரிமையையும் கொடுப்பதுதான் மன்னிப்பு.

நாம் கிறிஸ்துவை நம்பும்போது கடவுள் நமக்கு அதை தான் செய்கிறார் : *"அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவா(ன்)னென்று" (அப்போஸ்தலர் 10:43).* நாம் கிறிஸ்துவை விசுவாசித்தால், கடவுள் நம் பாவங்களை நமக்கு எதிராகவே வைத்திருக்க மாட்டார். வேதத்தில் கடவுளே சொல்லும் சாட்சி இது : *"நான், நானே உன் மீறுதல்களை என் நிமித்தமாகவே குலைத்துப்போடுகிறேன்; உன் பாவங்களை நினையாமலும் இருப்பேன்" (ஏசாயா 43:25). "மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார்" ( சங்கீதம் 103:12).*

ஆனால் இது ஒரு பிரச்சனையை எழுப்புகிறது. மன்னிப்பு மாத்திரம்

போதாது என்பதை நாம் அனைவரும் அறிவோம். கொலை அல்லது பாலியல் பலாத்காரம் போன்ற அதிகமான காயத்திலே நாம் இதை தெளிவாக காண்கிறோம். எல்லா கொலைக்காரரிடமும், பாலியல் பலாத்காரம் செய்கிறவர்கள் அனைவரிடமும் நீதிபதி (அல்லது கடவுள்), "நீ இதற்காக வருந்துகிறாயா?" என்று கேட்க, அவரும் "ஆம்" என்று சொல்ல, "நீதிமன்றம் உன்னை மன்னிக்கிறது நீ போகலாம்" என்று சொல்ல முடியாது. இந்த சமுதாயமும், அண்டசராசரங்களும் அதை தாங்கிக்கொள்ளாது. இப்படிப்பட்ட வழக்குகளில் பாதிக்கப் பட்டவருக்கு மன்னிக்கும் சுபாவம் இருந்தாலும், நீதிமன்றம் நீதி தவறமுடியாது.

கடவுளுடைய தீர்ப்பும் அப்படித் தான். கடவுளுக்கு எதிராக செயல்படுவதால், எல்லா பாவமுமே கடுமையானதுதான் (அதிகாரம் 1 பார்க்க). அவரை நிராகரித்தாலும், கீழ்ப்படியாமல் போனாலும், தெய்வதூஷணம் கூறினாலும் அவருடைய காயப்படுவது அவருடைய மகிமையே. ஒரு குற்றவாளி சமுதாயத்திற்கு கொடுக்கவேண்டிய கடனை ஒரு மனித நீதிபதி தள்ளுபடி செய்வதை காட்டிலும் அதிக எளிதாக நம்மை விடுவிக்க அவர் அனுமதிப்பதில்லை. நம்முடைய பாவத்தினால் கடவுளுடைய மகிமைக்கு ஏற்பட்ட காயத்தை சரிசெய்து அவருடைய மகிமை இன்னும் அதிக பிரகாசமாக ஒளிரச்செய்ய வேண்டும். குற்றவாளிகளாகிய நாம் மன்னித்து விடுவிக்கப்பட வேண்டுமானால் நாம் ஒன்றை செய்ய வேண்டும். நம்முடைய பழைய தெய்வ தூஷணங்கள் மன்னிக்கப்பட்டு இருந்தாலும், நாம் கடவுளை கனப்படுத்துகிறோம் என்பதை செயல்முறையில் வெளிப்படுத்திக் காட்டவேண்டும்.

இதற்காகவே கிறிஸ்து பாடுபட்டு மரித்தார். "இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது" ( எபேசியர் 1:7). மன்னிப்பிற்கு கட்டணமேதும் இல்லை. நம்முடைய விலை உயர்ந்த கீழ்ப்படிதல்கள் அனைத்தும் மன்னிப்பின் கனிகளே, மன்னிப்பிற்கு காரணமான வேர்கள் இல்லை. அதனால் தான் நாம் அதை கிருபை என்கிறோம். ஆனால் இதற்காக இயேசு தன்னுடைய உயிரை விலையாக கொடுத்தார். அதனால் தான் நாம் அதை நீதி என்கிறோம். கடவுள் நம்முடைய பாவங்களை நமக்கு எதிராக வைத்துக்கொள்வதில்லை என்கிற செய்தி எவ்வளவு விலை உயர்ந்தது ! கடவுள் இப்படி செய்வது நீதியாக இருக்கும்படி வழிவகுத்தது கிறிஸ்துவின் இரத்தமே, அந்த கிறிஸ்து எவ்வளவு அழகானவர்!

# 10

# நாம் நீதிமான்களாக்கப்படுவதற்கான அடிப்படையைக் கொடுப்பதற்காக

*இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே.*
ரோமர் 5:9

*இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்.*
ரோமர் 3:24

*மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான் என்று தீர்க்கிறோம்.*
ரோமர் 3:28

கடவுளுக்கு முன்பாக நீதிமான்கள் ஆக்கப்படுவதற்கும், கடவுளுக்கு முன்பாக மன்னிப்பை பெற்றுக்கொள்வதற்கும் வித்தியாசம் இருக்கிறது. ஒரு நீதிமன்றத்தில் நீதிமானாக ஆக்கப்படுவதற்கும் மன்னிக்கப்படுவதற்கும் வித்தியாசம் இருக்கிறது, நான் மன்னிக்கப்படும்போது நான் குற்றவாளி, ஆனால் என்னுடைய குற்றம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்று அர்த்தப்படும். நான் நீதிமான் ஆக்கப்பட்டால், என்னை சோதித்து நான் குற்றம் அற்றவன் என்று கண்டுபிடிக்கப்பட்டேன் என்று அர்த்தப்படும். நான் நீதியுள்ளவன். நான் பாராட்டப்படுகிறவன். "குற்றவாளி அல்ல", என்று நீதிபதி கூறுவார்.

நீதிமான் ஆக்கப்படுவது என்பது ஒரு சட்டபூர்வமான செயல். ஒருவர் நீதிமான் என்று அறிவிக்கப்படுவதே அதன் பொருள். அது ஒரு தீர்ப்பு. நீதியை குறித்த தீர்ப்பு ஒரு நபரை நீதிமான் ஆக்காது. அது அவர் நீதிமான் என்று அறிவிப்பு மாத்திரமே கொடுக்கும். ஒருவர் நீதிமானாக இருப்பதை பொறுத்தே அத்தீர்ப்பு கொடுக்கப்படும். இயேசுவின் போதனையை கேட்டு மக்கள் கடவுள் "நீதிபரர்" என்று அறிக்கையிடும் வேத பகுதியின் மூலமாக நாம் தெளிவாக புரிந்துகொள்ளலாம். (லூக்கா 7:29). இதற்கு அவர்கள் கடவுளை நீதிமான் ஆக்கினார்கள் என்று அர்த்தமல்ல (அவர் முன்பே நீதிபரராக இருந்தார்). அவர் நீதிமான் என்று அவர்கள் அறிக்கையிட்டார்கள் என்றே பொருள்.

நாம் கிறிஸ்துவை நம்பும்போது நமக்குள் ஏற்படும் மனரீதியான மாற்றங்கள் நீதிமான் ஆக்கப்படுவது அல்ல. வேதம் அதை பொதுவாக சுத்திகரிக்கப்படுதல் என்றே குறிப்பிடுகிறது. சுத்திகரிக்கப்படுதல் நல்லவராக மாறுகிற முறைமை. நீதிமான் ஆக்கப்படுவது அந்த

முறைமை அல்ல. அது ஒரு முறைமையே அல்ல. அது ஒரு கணப்பொழுதில் நடந்தேறும் அறிவிப்பு. அது ஒரு தீர்ப்பு : நீதியுள்ளவர், நேர்மையானவர் !

ஒரு மனித நீதிமன்றத்தில் நீதிமானாக்கப்பட செய்ய வேண்டியது சட்டத்தை கடைபிடித்தல். அந்த வழக்கில் நீதிபதிகளின் குழுவும், நீதிபதியும் உங்களை குறித்த உண்மையையே அறிக்கையிடுவார்கள்: நீங்கள் சட்டத்தை கைக்கொண்டீட்கள். அவர்கள் உங்களை தீர்மானிப்பார்கள். ஆனால், கடவுளுடைய நீதிமன்றத்திலே நாம் சட்டத்தை காத்துக்கொள்ளவில்லை. இதை சாதாரணமாகச் சொல்லவேண்டும் என்றால், நாம் நம்பிக்கையற்றவர்கள் எனலாம். "துன்மார்க்கனை நீதிமானாக்குகிறவனும், நீதிமானைக் குற்றவாளியாக்குகிறவனுமாகிய இவ்விருவரும் கர்த்தருக்கு அருவருப்பானவர்கள்"(நீதிமொழிகள் 17:15) என்றும் வேதம் கூறுகிறது. இருப்பினும், அற்புதமாக கிறிஸ்துவின் மூலமாக, கடவுள் "பாவியை நீதிமானாக்குகிறார்" என்றும் வேதம் கூறுகின்றது ( ரோமர் 4:5). அருவருப்பாக தோன்றுகிற ஒரு செயலை கடவுள் செய்கிறார்.

அது ஏன் அருவருப்பாக தோன்றவில்லை? அல்லது வேதம் கூறுகிறபடி "தம்முடைய நீதியைக் காண்பிக்கும்பொருட்டாகவும், தாம் நீதியுள்ளவரும், இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிறவருமாய் விளங்கும்படி" கடவுள் எப்படி இவ்வாறு நடந்துகொள்ளலாம்?( ரோமர் 3:2). இரண்டு காரணங்களினால் அவரை நம்புகிற பாவிகளை நீதிமான் ஆக்குவது அவருக்கு அருவருப்பான காரியம் அல்ல. ஒன்று நம்முடைய தீய செயலின் குற்றம் கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்டுவிட்டது. எனவே, "நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிரு(க்கிறோம்)" (ரோமர் 5:9). என்று வேதம் கூறுகின்றது. ஆனால் அது குற்றத்தை மட்டுமே நீக்குகின்றது. நம்முடைய சட்ட மீறுதல்களை நீக்குவது நாம் சட்டத்தை கைக்கொள்ளுகிறவர்கள் என்று பொருட்படாது. பரீட்சையில் தோல்வியடைந்த பதிவை நீக்குவதும், பரீட்சையில் முதல் மதிப்பெண் வாங்கியதாக அறிக்கையிடுவதும் ஒன்றல்லவே. ஒரு வங்கி என்னுடைய கடன்களை தள்ளுபடி செய்தால், அது நான் பணக்காரன் என்று அறிக்கையிடுவதாக அர்த்தமாகாது. எனவே நம்முடைய பாவங்களை தள்ளுபடி செய்வதும், நாம் நீதிமான்கள் ஆக்கப்படுவதும் ஒன்றல்ல. தள்ளுபடி செய்வது நடைபெற வேண்டும். நீதிமான்கள் ஆக்கப்படுவதற்கு அது அத்தியாவசியமானது. ஆனால் அதில் இன்னும் அதிகம் இருக்கிறது. பாவிகளை நீதிமான்கள் ஆக்குவது கடவுளுக்கு அருவருப்பற்றதாக இருக்க வேறு ஒரு காரணமும் இருக்கிறது. அதை நாம் அடுத்த அதிகாரத்தில் பார்ப்போம்.

# 11

# நம்முடைய நீதியாக மாறுகின்ற கீழ்ப்படிதலை நிறைவுசெய்ய

*அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.*
பிலிப்பியர் *2:8*

*அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்.*
ரோமர் *5:19*

*நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.*
*2* கொரிந்தியர் *5:21*

*நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும்...*
பிலிப்பியர் *3:9*

**எ**ன்னுடைய அநீதியை நீக்குவது மாத்திரம் நீதிமான் ஆக்கப்படுவது கிடையாது. கிறிஸ்துவின் நீதியை எனக்குள் வைப்பதே நீதிமானாக் கப்படுதல். கடவுள் முன்பு பெருமை பாராட்டிக்கொள்கின்ற நீதி என்னிடத்தில் இல்லை. கடவுளுக்கு முன்பாக நான் கூறுவது “நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமா ணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ் துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை” உடையவனாய் இருக்கிறேன் என்பதே( பிலிப்பியர் *3:9*).

இது கிறிஸ்துவின் நீதி. அது எனக்குள் வைக்கப்பட்டு இருக் கிறது. கிறிஸ்து எல்லா நீதியையும் முழுமையாக நிறைவேற்றினார், பின்பு நான் அவரை நம்பியபோது அந்த நீதி என்னுடையது என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. நான் நீதிமானாக கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டேன். கடவுள் கிறிஸ்துவின் பரிபூரண நீதியை பார்த்து, கிறிஸ்துவின் நீதியுடன் நானும் நீதிமான் என்று அறிக்கையிட்டார்.

எனவே பாவிகளை நீதிமானாக்குவது இரண்டு காரணங்களினால் கடவுளுக்கு அருவருப்பாக தோன்றவில்லை (ரோமர் *4:5*). முதலாவது,

கிறிஸ்துவின் மரணம் நம்முடைய அநீதிக்கான கடனை செலுத்தி விட்டது(கடந்த அதிகாரத்தை பார்க்கவும்). இரண்டாவது, கிறிஸ்துவின் கீழ்ப்படிதல் கடவுளின் நீதிமன்றத்தில் நாம் நீதிமான் களாக இருக்க தேவையான நீதியை கொடுத்தது. நித்திய வாழ்விற்குள் நுழைவதற்கு கடவுள் வைத்திருந்த கட்டுபாடு என்னவெனில், நம்முடைய அநீதி நீக்கப்பட்டால் மாத்திரம் போதாது. நம்முடைய பூரண நீதியும் ஏற்படுத்தப்பட்டு இருக்க வேண்டும்.

இரண்டிற்குமே கிறிஸ்துவின் பாடும் மரணமும் தான் அடித்தளம். நம்முடைய அநீதிக்கு தகுந்த பாடுகளையே அவர் பட்டார். "நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங் களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்" *(ஏசாயா 53:5)*. ஆனால் இந்த பாடுகளும் மரணமும் முடிவாகவும், நம்மை நீதிமானாக்க தேவையான கீழ்ப்படிதலை நிறைவேற்றுகிறதாகவும் இருந்தது. அவர் "மரணபரியந் தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்" *( பிலிப்பியர் 2:8)*. அவருடைய மரணம் கீழ்ப்படிதலின் சிகரம். "அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப் படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவரு டைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்" *(ரோமர் 5:19)* என்னும் போது வேதம் இதை தான் கூறுகின்றது.

ஆகையால், நம்முடைய மன்னிப்பிற்கும், நம்முடைய பரிபூரணத்திற்கும் கிறிஸ்துவின் மரணமே அடித்தளமாக இருக்கின்றது. "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" *(2 கொரிந்தியர் 5:21)*. பாவம் அறியாத கிறிஸ்துவை நமக்காக பாவமாக்கினார் என்றால் என்ன? நம்முடைய பாவம் அவருக்குள் வைக்கப்பட்டது, எனவே அவர் நம்முடைய மன்னிப்பாக மாறினார். நாம் (பாவிகள்) கிறிஸ்துவுக்குள் கடவுளுடைய நீதியாகினோம் என்றால் என்ன? கிறிஸ்துவின் நீதியும் நமக்குள் வைக்கப்பட்டது என்று பொருள். இதன் மூலமாக அவர் நமது பரிபூரணம் ஆனார்.

பாடு மற்றும் மரணம் முழுவதிலும் அவருடைய சாதனைக ளுக்காக கிறிஸ்து கனம்பண்ணப்படுவாராக ! நம்முடைய பாவங்களை மன்னிப்பதிலும், நம்முடைய நீதியை கொடுப்பதிலும் செய்யப்பட்ட செயல்களுக்காக அவரை கனம்பண்ணுவோம். அவருடைய பெரிய சாதனைக்காக நாம் அவரை வியந்து, பொக்கிஷமாக பாதுகாத்து அவரை நம்புவோமாக !

# 12

# நம்முடைய ஆக்கினைத் தீர்ப்பை எடுத்துக்கொள்ள

✞

*ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர், நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே.*
ரோமர் *8:34*

**கி**றிஸ்துவின் பாடு மற்றும் மரணத்தின் மகத்துவமான முடிவு இதுவே :"ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை" ( ரோமர் 8:1). "கிறிஸ்துவில்" இருப்பது என்றால் விசுவாசத்தின் மூலமாக அவரோடு உறவில் இருப்பது ஆகும். கிறிஸ்துவின் மேல் உள்ள விசுவாசம் நம்மை அவரோடு ஒன்று இணைக்கிறது, எனவே அவருடைய மரணம் நம்முடைய மரணமாகவும், அவருடைய பூரணம் நம்முடைய பூரணமாகவும் ஆகிறது. கிறிஸ்து நம்முடைய தண்டனையாக மாறுகின்றார் (நாம் அதை அனுபவிக்க வேண்டியது இல்லை) நம்முடைய பூரணமாகவும் மாறுகின்றார் (இதை நம்மால் செய்ய முடியாது).

கடவுளால் நாம் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான காரணமாக விசுவாசம் செயல்படாது. கிறிஸ்துவே அதற்கான காரணம். விசுவாசம் நம்மை கிறிஸ்துவோடு இணைக்கிறது, எனவே அவருடைய நீதி நம்முடைய நீதியாக மாறுகின்றது. "நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லையே. கிறிஸ்துவுக்குள் நீதிமான்களாக்கப்படும்படி நாடுகிற நாமும் பாவிகளாகக் காணப்படுவோமானால், கிறிஸ்து பாவத்திற்குக் காரணரோ? அல்லவே" ( கலாத்தியர் 2:16,17). "விசுவாசத்தால் நீதிமான் ஆக்கப்படுதல்" மற்றும் "கிறிஸ்துவுக்குள் நீதிமான்களாக்கப்படுதல்" இரண்டுமே சமகருத்து உடைய வாக்கியங்கள். விசுவாசத்தினால் நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கிறோம், எனவே நாம் நீதிமான்களாக்கப் படுகிறோம்.

"யாரை ஆக்கினை தீர்க்கப்போகிறார்கள்?" என்கிற கேள்வி கேட்கப்படும்போது பதில் யூகிக்கப்படுகின்றது. யாரும் இல்லை! அதற்கு அடிப்படையாக இருப்பது "கிறிஸ்துவே மரணம் அடைந்தவர்". கிறிஸ்துவின் மரணம் நம்மை ஆக்கினைத் தீர்ப்பில் இருந்து விடுவித்துவிட்டது. கிறிஸ்து மரித்தது எவ்வளவு உறுதியாக இருக்கிறதோ, நாம் ஆக்கினை தீர்ப்பு அடைவதில்லை என்பதும் உறுதியானது தான். கடவுளுடைய நீதிமன்றத்தில் இரண்டு

குற்றவிசாரணைகள் கிடையாது. ஒரே குற்றத்துக்காக நாம் இரண்டு முறை தண்டிக்கப்படுவதில்லை. நாம் அவற்றிற்காக ஆக்கினை தீர்ப்பு அடைவதில்லை. ஆக்கினை தீர்ப்பு என்று ஒன்று இல்லை என்பதால் அல்ல, அது முன்பே நிறைவேற்றப்பட்டுவிட்டது என்பதால் அது மறைந்துபோனது.

ஆனால் உலகத்தினால் ஏற்படுத்தப்படும் ஆக்கினைதீர்ப்பு? "யாரை ஆக்கினை தீர்க்கப்போகிறார்கள்?" என்கிற கேள்விக்கு அது பதிலாக இருக்கிறது அல்லவா. கிறிஸ்தவர்கள் உலகத்தினால் ஆக்கினை தீர்ப்பு அடைவதில்லையா? பல இரத்த சாட்சிகள் இருக்கிறார்கள். இதற்கு பதில் என்னவெனில் யாராலும் நம்மை வெற்றிகரமாக ஆக்கினை தீர்க்க முடியாது. நம்மை குற்றப்படுத்தலாம் ஆனால் அவை ஒன்றும் நிலைக்காது. "தேவன் தெரிந்து கொண் டவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர்" (ரோமர் 8:33). இது வேதம் கேட்கும் இந்த கேள்விக்கு ஒப்பாக இருக்கிறது :"கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ?" (ரோமர் 8:36). இப்படிப்பட்ட காரியங்கள் கிறிஸ்தவர்களுக்கு சம்பவிக்காது என்பது பதிலல்ல. இதற்கு சரியான பதில்: "இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர் களாயிருக்கிறோமே" ( ரோமர் 8:37).

உலகம் தன்னுடைய ஆக்கினை தீர்ப்பை கொண்டுவரும். தங்களுடைய வாளையும் அதற்கு பின்னே அவர்கள் வைத்து இருக்கலாம். ஆனால் மிக உயரிய நீதிமன்றம் நமக்கு சாதகமாக தீர்ப்பு கொடுத்துவிட்டது என்பதை நாம் அறிவோம். "இவைகளைக் குறித்து நாம் என்னசொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?" ( ரோமர் 8:31). வெற்றிகரமாக யாரும் குற்றம்சாட்ட முடியாது. அவர்கள் நம்மை நிராகரித்தால், அவர் நம்மை ஏற்றுக்கொள்வார். அவர்கள் நம்மை வெறுத்தால், அவர் நம்மை நேசிப்பார். அவர்கள் நம்மை சிறையில் அடைத்தால், நம்முடைய ஆவிகளை அவர் விடுதலை செய்வார். அவர்கள் நம்மை துன்பப் படுத்தினால், அக்கினியால் அவர் நம்மை சுத்திகரிப்பார். அவர்கள் நம்மை கொலை செய்தால், அதை பரலோகத்தின் பாதையாக அவர் மாற்றுவார். அவரில் நாம் உயிரோடு இருக்கிறோம். அவருக்குள் ஆக்கினை தீர்ப்பு இல்லை. நாம் மன்னிக்கப்பட்டுவிட்டோம், நாம் நீதிமான்களாக்கப்பட்டோம். " நீதிமான்களோ சிங்கத்தைப்போலே தைரியமாயிருக்கிறார்கள்" ( நீதிமொழிகள் 28:1).

# 13

# இரட்சிப்பின் அடிப்படையில் விருத்தசேதனத்தையும் மற்ற சடங்குகளையும் அழிக்க

*சகோதரரே, இதுவரைக்கும் நான் விருத்தசேதனத்தைப் பிரசங்கிக்கிறவனாயிருந்தால், இதுவரைக்கும் என்னத்திற்குத் துன்பப்படுகிறேன்? அப்படியானால் சிலுவையைப்பற்றி வரும் இடறல் ஒழிந்திருக்குமே.*
கலாத்தியர் 5:11

*மாம்சத்தின்படி நல்வேஷமாய்க் காணப்பட விரும்புகிறவர்கள் எவர்களோ, அவர்கள் தாங்கள் கிறிஸ்துவினுடைய சிலுவையினிமித்தம் துன்பப்படாதபடிக்கே உங்களை விருத்தசேதனம்பண்ணிக்கொள்ளக் கட்டாயம்பண்ணுகிறார்கள்.*
கலாத்தியர் 6:12

ஆதித்திருச்சபையில் விருத்தசேதனம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. கடவுள் ஆதியாகமம் 17:10ல் கட்டளையிட்டதில் இருந்து நீண்ட மரியாதைக்கு உரிய இடத்தை விருத்தசேதனம் பெற்று இருந்தது. கிறிஸ்து ஒரு யூதர். அவருடைய அப்போஸ்தலர்கள் அனைவரும் யூதர்கள். ஆதியில் கிறிஸ்தவர்களாக மாறிய பெருவாரியானவர்கள் யூதர்கள். யூத வேத வாக்கியங்கள் கிறிஸ்தவ சபையின் ஒரு பகுதியாக இருந்தன, இருந்தும் வருகின்றன. கிறிஸ்தவ சபைக்குள் யூத சடங்குகள் நுழை வதில் ஒன்று ஆச்சரியம் இல்லை.

அவர்கள் வந்தார்கள். அவர்களோடு சர்ச்சையும் வந்தது. அந்தியோகியா மற்றும் சிரியா போன்ற யூதரல்லாத பட்டணங்களுக்கு கிறிஸ்துவின் நற்செய்தி சென்றது. வேற்று இனத்தார் கிறிஸ்துவை விசுவாசித்தனர். அப்போது இந்த கேள்வி அவசரம் வாய்ந்ததாக மாறியது : விருத்தசேதனம் போன்ற சடங்குகளோடு நற்செய்தியின் மைய உண்மைக்கு இருக்கும் தொடர்பு என்ன? நீங்கள் அவரை விசுவாசித்தால் உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படும், நீங்கள் கடவுளுக்கு முன்பாக நீதிமான்கள் ஆக்கப்படுவீர்கள் என்கிற கிறிஸ்துவின் நற்செய்தியோடு சடங்குகளுக்கு என்ன தொடர்பு? கடவுள் உங்களுடையவர். உங்களிடம் நித்திய வாழ்வு இருக்கிறது.

வேற்று இன மக்கள் அனைவருக்கும் விசுவாசத்தினால் வரும் மன்னிப்பையும் நீதிமான்கள் ஆக்கப்படுவதையுமே அப்போஸ்தலர்கள் போதித்து வந்தனர். பேதுரு : “அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவானென்று தீர்க்கதரிசிகளெல்லாரும் அவரைக்குறித்தே சாட்சிகொடுக்கிறார்கள்” என்று போதித்தார் (அப்போஸ்தலர் 10:43). பவுல் “ஆதலால் சகோதரரே...மோசேயின் நியாயப்பிரமாணத்தினாலே நீங்கள் எவைகளினின்று விடுதலையாகி நீதிமான்களாக்கப்படக் கூடாதிருந்ததோ, விசுவாசிக்கிறவன் எவனும் அவைகளினின்று இவராலே விடுதலையாகி நீதிமானாக்கப்படுகிறான் என்றும் உங்களுக்குத் தெரிந்திருக்கக்கடவது” என்று போதித்தார் ( அப்போஸ்தலர் 13:38-39).

ஆனால் விருத்தசேதனம்? எருசலேமில் இருந்த சிலர் அது

அவசியம் என்று நினைத்தனர். இந்த சர்ச்சையில் அந்தியோகியா முக்கியத்துவம் பெற்றது. "சிலர் யூதேயாவிலிருந்து வந்து:...விருத்தசேதனமடையாவிட்டால் இரட்சிக்கப்படமாட்டீர்கள் என்று சகோதரருக்குப் போதகம்பண்ணினார்கள்"( அப்போஸ்தலர் 15:1).

*"சிலர் எழுந்து, அவர்களை விருத்தசேதனம்பண்ணுகிறதும் மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளும்படி அவர்களுக்குக் கற்பிக்கிறதும் அவசியம் என்றார்கள். அப்போஸ்தலரும் மூப்பரும் இந்தக் காரியத்தைக் குறித்து ஆலோசனைபண்ணும்படி கூடினார்கள். மிகுந்த தர்க்கம் உண்டானபோது, பேதுரு எழுந்து, அவர்களை நோக்கி: சகோதரரே நீங்கள் அறிந்திருக்கிறபடி புறஜாதியார் என்னுடைய வாயினாலே சுவிசேஷ வசனத்தைக் கேட்டு விசுவாசிக்கும்படி தேவன் அநேக நாட்களுக்கு முன்னே உங்களில் ஒருவனாகிய என்னைத் தெரிந்து கொண்டார்.இருதயங்களை அறிந்திருக்கிற தேவன் நமக்குப் பரிசுத்த ஆவியைத் தந்தருளினதுபோல அவர்களுக்கும் தந்தருளி, அவர்களைக் குறித்துச் சாட்சிகொடுத்தார்; விசுவாசத்தினாலே அவர்கள் இருதயங்களை அவர் சுத்தமாக்கி, நமக்கும் அவர்களுக்கும் யாதொரு வித்தியாசமுமிராதபடி செய்தார்.இப்படியிருக்க, நம்முடைய பிதாக்களாலும் நம்மாலும் சுமக்கக்கூடாதிருந்த நுகத்தடியைச் சீஷர் கழுத்தின்மேல் சுமத்துவதினால், நீங்கள் தேவனைச் சோதிப்பானேன்? கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலே அவர்கள் இரட்சிக்கப்படுகிறது எப்படியோ, அப்படியே நாமும் இரட்சிக்கப்படுவோமென்று நம்பியிருக்கிறோமே என்றான். அப்பொழுது கூடிவந்திருந்த யாவரும் அமர்ந்திருந்து, பர்னபாவும் பவுலும் தங்களைக்கொண்டு தேவன் புறஜாதிகளுக்குள்ளே செய்த அடையாளங்கள் அற்புதங்கள் யாவையும் விவரித்துச் சொல்லக்கேட்டார்கள்" ( அப்போஸ்தலர் 15:5-12)*

அப்போஸ்தலராகிய பவுலைவிட தெளிவாக இந்த பிரச்சனையின் ஆணிவேரை யாரும் பார்க்கவில்லை. கிறிஸ்து பாடுபட்டு மரணமடந்ததே அர்த்தமற்றதாக மாறிக்கொண்டு இருக்கிறது. கிறிஸ்துவை விசுவாசிப்பது மாத்திரம் கடவுளுக்கு முன்பாக நாம் நீதிமான்களாக இருக்க போதுமானதா? அல்லது விருத்தசேதனம் அவசியமா? பதில் தெளிவாக இருந்தது. பவுல் விருத்தசேதனம் தேவை என்று போதித்து இருந்தால், "சிலுவையைப்பற்றி வரும் இடறல் ஒழிந்திருக்குமே" ( கலாத்தியர் 5:11). சடங்குகளுக்கு அடிமைகளாக இருப்பதில் இருந்து சிலுவை விடுதலை கொடுக்கிறது. "நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள்" (கலாத்தியர் 5:1).

# 14

# நம்மை விசுவாசத்திற்குள் கொண்டுவரவும் நம்மை விசுவாசமுள்ளவர்களாக வைத்துக்கொள்ளவும்

✞

*அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: இது அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது.*
மாற்கு 14:24

*நித்திய உடன்படிக்கையை அவர்களோடே பண்ணி, அவர்கள் என்னைவிட்டு அகன்றுபோகாதபடிக்கு, எனக்குப்பயப்படும் பயத்தை அவர்கள் இருதயத்திலே வைத்து...*
எரேமியா 32:40

**வே**தாகமம் ஒரு பழைய உடன்படிக்கையை குறித்தும், புதிய உடன்படிக்கையை குறித்தும் பேசுகின்றது. உடன்படிக்கை என்பது இரண்டு சார்பினர் இடையே பொதுவான தீர்வுகளை உள்ளடக்கிய ஒரு தீவிரமான ஒப்பந்தம் ஆகும். வேதாகமத்தில் கடவுள் மனிதனுடன் செய்துகொள்ளும் உடன்படிக்கைகளை தொடங்குபவர் கடவுளே. அவரே விதிகளை தீர்மானிக்கிறார். அவருடைய சொந்த நோக்கங்களுக்காக அவரால் தீர்வுகள் முடிவுசெய்யப்படுகின்றன.

மோசேயின் சட்டங்களின் மூலமாக இஸ்ரவேலிடம் கடவுள் ஏற்படுத்திய ஒழுங்குமுறை “பழைய உடன்படிக்கை” எனப்படுகிறது. ஆவிக்குரிய மாறுதலை ஏற்படுத்தாமல் இருந்ததே அதன் பெலவீனம். ஆகையால் அவர்கள் அதற்கு கீழ்ப்படியவில்லை, அது வாழ்வு அளிக்கவில்லை. அது கற்களின் மீது எழுத்துக்களை கொண்டு எழுதப்பட்டது, இதயத்தின் மீது ஆவியால் எழுதப்படவில்லை. தீர்க்கதரிசிகள் வித்தியாசமாக இருக்கப்போகிற ஒரு “புதிய உடன்படிக்கை”யை வாக்குதத்தம் செய்தனர். “ அந்த உடன்படிக்கை எழுத்திற்குரியதாயிராமல், ஆவிக்குரியதாயிருக்கிறது; எழுத்து கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது” ( 2 கொரிந்தியர் 3:6).

புதிய உடன்படிக்கை பழைய உடன்படிக்கையை காட்டிலும் மிகவும் சக்திவாய்ந்தது. இயேசுவின் பாடு மற்றும் மரணத்தின் அடித்தளத்தில் அது எழுதப்பட்டது. அவர் “புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்” ( எபிரெயர் 9:15). இயேசு அவருடைய இரத்தம் “அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது” என்றார்( மாற்கு 14:24). அதற்கு இயேசுவின் இரத்தம் புதிய உடன்படிக்கையின் வாக்குதத்தங்களையும்

சக்தியையும் வாங்கிவிட்டது என்று அர்த்தமாகும். அப்படிச் செய்ய கிறிஸ்து மரித்ததினால் அது மிகவும் சக்திவாய்ந்ததாக இருக்கிறது.

அப்படியானால் அவருடைய இரத்தத்தினாலே பாதுகாக்கப்பட்ட அந்த உடன்படிக்கையின் விதிகள் என்னென்ன? ஏரேமியா தீர்க்கதரிசி அவற்றுள் சிலவற்றை விவரிக்கிறார் "புது உடன்படிக்கைபண் ணுவேன்.....பண்ணப்போகிற உடன்படிக்கையாவது; நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, ...நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்" ( எரேமியா 31:31-34). கிறிஸ்துவின் பாடுகளும் மரணமும் அவருடைய மக்களின் உள்ளே மாற்றத்தையும் (அவர்களுடைய இருதயத்திலே எழுதப்பட்ட சட்டம்) அவர்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பையும் உறுதிசெய்கிறது.

இந்த உடன்படிக்கை தோல்வி அடையாமல் இருப்பதை உறுதிசெய்ய, அவருடைய மக்களிடத்தில் நம்பிக்கையை ஏற்படுத் தவும், அவர்கள் உண்மையுள்ளவர்களாய் இருப்பதை காத்துக்கொள் ளவும் கிறிஸ்து முயற்சி எடுக்கிறார். கல்லிலே எழுதாமல் இருதயத்திலே எழுதுவதன் மூலமாக புதிய உடன்படிக்கையின் மக்களை ஏற்படுத்துகிறார். கல்லின்மேல் எழுதப்பட்ட "எழுத்து"க்கு முரண் பாடாக "உயிரை கொடுக்கும் ஆவியை" பற்றி கூறுகிறார் ( 2 கொரிந்தியர் 3:6). "அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப் பட்டீர்கள்" ( எபேசியர் 2:5). கிறிஸ்துவின் மகிமையை காணவும் நம்பவும் உதவுகிற ஆவிக்குரிய வாழ்வு இதுவே. இந்த அற்புதம் புதிய உடன்படிக்கையின் மக்களை உருவாக்குகின்றது. கிறிஸ்து தம்முடைய சொந்த இரத்தத்தினாலே இதை வாங்கியதால் இது உறுதியானதாகவும் நம்பகமானதாகவும் இருக்கிறது.

அந்த அற்புதம் நம்முடைய நம்பிக்கையினால் மாத்திரம் உருவாகவில்லை . நாம் உண்மையுள்ளவர்களாய் இருப்பதை காத்துக் கொள்வதினாலும் அது உருவாகின்றது. "நித்திய உடன்படிக்கையை அவர்களோடே பண்ணி, அவர்கள் என்னைவிட்டு அகன்றுபோகா தபடிக்கு, எனக்குப் பயப்படும் பயத்தை அவர்கள் இருதயத்திலே வைத்து" ( எரேமியா 32:40). கிறிஸ்து மரித்தபோது, தம்முடைய மக்களுக்காக புதிய இருதயத்தை மாத்திரமல்ல புதிய பாதுகாவ லரையும் ஏற்படுத்தினார். கிறிஸ்துவிடம் இருந்து திரும்ப அவர் அனுமதிக்க மாட்டார். அவர்களை அவர் காத்துக்கொள்வார். அவர்கள் விடாமுயற்சி உடையவர்களாய் இருப்பார்கள். உடன்படிக்கையின் இரத்தம் அதை உறுதிசெய்கிறது.

# 15

# நம்மை பரிசுத்தமாகவும், குற்றமற்றவர்களாகவும், பூரணராகவும் மாற்றுவதற்காக

✝

*ஏனெனில் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்.*
எபிரெயர் *10:14*

*முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயுமிருந்த உங்களையும் பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார்.* கொலோசெயர் *1:21*

*ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்தமாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே.*
*1* கொரிந்தியர் *5:7*

**கி**றிஸ்தவ வாழ்க்கையில் மிகப்பெரிய மனவலியை கொடுப்பது, நம்முடைய மாற்றத்தின் தாமதமே. நம்முடைய முழு இதயத்தோடும், நம்முடைய முழு மனதோடும், முழு பெலத்தோடும் கடவுளிடம் அன்பாக இருக்கவேண்டும் என்கிற அழைப்பை நாம் கேட்டுக் கொண்டே இருக்கிறோம் ( மாற்கு 12:30). ஆனால் அன்பு மற்றும் அர்ப்பணிப்பின் முழுமையை அடைய நாம் எழும்புகிறோமா? தினந்தோறும் நான் அப்போஸ்தலராகிய பவுலோடு “நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?” (ரோமர் 7:24) என்று கதறுகிறோம். புதிய தீர்மானங்கள் எடுக்கும்போதும் நாம் பெருமூச்சு விடுகிறோம்: “நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றிலும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடருகிறேன்” ( பிலிப்பியர் 3:12).

இதே வாக்குறுதிதான் சந்தோஷத்தையும் மகிழ்ச்சியையும் அடையவும் திறவுகோல்கள் : “கிறிஸ்து என்னை அவருக்கு சொந்தமாக மாற்றினார்”. என்னுடைய முயற்சிகள் மற்றும் ஏக்கங்கள் அனைத்துமே கிறிஸ்துவுக்குள் இருப்பதற்காக அல்ல (அது முன்பே நடந்துவிட்டது) மாறாக அவருடைய சாயலைப் போலிருக்கிற என்னிடத்தில் இருக்கும் குறைகளை நிறைவு ஆக்குவதே.

நம்முடைய முன்னேற்றப் பாதையின் பூரணமின்மையிலே நாம் முன்பே பரிபூரணம் அடைந்துவிட்டோம் என்று அறிந்துகொள்வதே

கிறிஸ்தவர்கள் மகிழ்ச்சியாகவும் சந்தோஷமாகவும் இருப்பதற்கு உதவும் மிகப்பெரிய ஆதாரம் ஆகும். அது கிறிஸ்துவின் பாடு மற்றும் மரணத்தினால் ஏற்பட்டது. "ஏனெனில் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்" ( எபிரெயர் 10:14). இது அற்புதமானது ! "பரிசுத்தமாக்கப்படுகிறவர்கள்" என்று கூறுகிற அதே வாக்கியத்தில் "பூரணப்படுத்தியிருக்கிறார்" என்றும் அவர் கூறுகின்றார்.

பரிசுத்தம் ஆக்கப்படுகிறார்கள் என்றால் நாம் பூரணமடையாமல் அதற்கான பக்குவப்படுதலிலே இருக்கிறோம் என்று அர்த்தம். நாம் பரிசுத்தமாக மாறிக்கொண்டு இருக்கிறோம், ஆனால் முழுவதும் பரிசுத்தம் அடையவில்லை. இதே மனிதர்கள், குறிப்பாக இவர்களே பூரணப்படுத்தப்பட்டவர்கள். கடவுளுக்கு முன்பாக நம்முடைய பரிபூரணத்திற்கான சான்று, நாம் அனுபவித்த பரிபூரணம் அல்ல, நாம் அனுபவித்துக்கொண்டு இருக்கும் முன்னேற்றமே. இது நமக்கு மகிழ்ச்சியூட்டும் ஊக்கம். நாம் வழியில் சென்றுகொண்டு இருப்பதே நாம் இடத்தை அடைந்துவிட்டோம் என்கிற சான்று நமக்கு ஒரு நற்செய்தி ஆகும்.

வேதாகமம் இதை பழைய மொழிநடையில் மாவு மற்றும் புளிப்பு என்று சித்தரிக்கிறது. இந்த சித்தரிப்பில் புளிப்பு என்பது தீமை. நாம் மாவு. "நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்தமாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே" ( 1 கொரிந்தியர் 5:7) என்று வேதம் கூறுகின்றது. கிறிஸ்தவர்கள் புளிப்பு இல்லாதவர்கள். புளிப்பு இல்லை என்றால் தீமை இல்லை. நாம் பூரணமடைந்துவிட்டோம். இந்த காரணத்திற்காக நம்முடைய "பழைய புளித்தமாவை புறம்பே கழித்துப்போட" வேண்டும். நாம் கிறிஸ்துவுக்குள் புளிப்பு இல்லாதவர்கள் ஆனோம். எனவே நாம் நடைமுறையில் புளிப்பு இல்லாதவர்களாக மாறவேண்டும். நாம் யாராக இருக்கிறோமோ அப்படியே வாழவேண்டும் என்று சொல்லலாம்.

இதற்கெல்லாம் அடிப்படை என்ன? நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே". கிறிஸ்துவின் பாடு நம்முடைய பூரணமடைதலை உறுதி செய்துவிட்டது, இப்போதே அது நிஜமாகி விட்டது. ஆகையால், நாம் பூரணம் அடைவதற்காக அல்ல, பூரணம் அடைந்துவிட்டதால் பாவத்துக்கு எதிராக போராடுகிறோம். நம்முடைய பூரணத்தின் அஸ்திபாரத்தின்மேல் நம்முடைய பூரணமின்மைக்கு எதிராக போராட இயேசுவின் மரணமே முக்கிய காரணம்.

# நமக்கு தெளிந்த மனசாட்சியை கொடுப்பதற்காக

✞

*நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்தக் கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!* எபிரெயர் 9:14

**சி**ல விஷயங்கள் மாறுவதே இல்லை. தீய மனசாட்சி என்பது ஆதாம் ஏவாள் முதல் இருந்துகொண்டே இருக்கிறது. அவர்கள் பாவம் செய்தவுடன் அவர்களுடைய மனசாட்சி அழுக்கானது. அவர்களுடைய குற்ற உணர்வு அழிவுக்கு உரியதாக இருந்தது. அது அவர்களுக்கும் கடவுளுக்கும் இடையே இருந்த உறவை கெடுத்தது, அவர்கள் அவரிடம் இருந்து மறைந்துகொண்டனர். அவர்கள் ஒருவரோடு ஒருவர் கொண்டிருந்த உறவை கெடுத்தது, அவர்கள் பழிபோட்டுக் கொண்டார்கள். அவர்களிடம் இருந்த அமைதியை அது கெடுத்தது. முதல் முறையாக அவர்கள் தங்களையே பார்த்து வெட்கம் அடைந்தார்கள்.

பழைய ஏற்பாடும் முழுவதும் மனசாட்சி ஒரு பிரச்சனையாகவே இருந்தது. ஆனால் மிருக பலி அந்த மனசாட்சியை சுத்தப்படுத்த முடியவில்லை. “செலுத்தப்பட்டுவருகிற காணிக்கைகளும் பலிகளும் ஆராதனை செய்கிறவனுடைய மனச்சாட்சியைப் பூரணப்படுத்தக் கூடாதவைகளாம். இவைகள் சீர்திருந்தல் உண்டாகும் காலம்வரைக்கும் நடந்தேறும்படி கட்டளையிடப்பட்ட போஜன பானங்களும், பலவித ஸ்நானங்களும், சரீரத்திற்கேற்ற சடங்குகளுமேயல்லாமல் வேறல்ல” (எபிரெயர் 9:9-10). கிறிஸ்துவுக்கு நிழல் அடையாளங்களாக இருந்த இந்த மிருக பலிகளை, மாமிசத்தை சுத்திகரிக்க போதுமானதாக கடவுள் எடுத்துக்கொண்டார். அது சரீர அசுத்தத்தை சுத்தப்படுத்தும், மனசாட்சியை அல்ல.

எந்த மிருக இரத்தமும் மனசாட்சியை சுத்தப்படுத்தாது. அவர்களுக்கு அது தெரியும் (ஏசாயா 53 மற்றும் சங்கீதம் 51 பார்க்க). நமக்கு அது தெரியும். எனவே மேன்மையான ஒரு பலியோடு புதிய பிரதான ஆசாரியர் இயேசு கிறிஸ்து வந்தார் : தன்னையே பலியாகத் தந்தார். “நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்தக்கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!” ( எபிரெயர்

9:14). மிருக பலிகள் கடவுளுடைய மைந்தனின் இறுதி பலிக்கும் முன் அடையாளங்களாக இருந்தன. முற்காலத்திலும் பிற்காலத்திலும் இருக்கும் கடவுளுடைய மக்கள் அனைவருடைய பாவங்களையும் நிவிர்த்திசெய்கிறதாக மைந்தனின் மரணம் இருந்தது.

இணையதளம், உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள், உடனடி செய்திகள், அலைபேசிகள் ஆகியவை உடைய அறிவியல் காலமாகிய நவீன காலத்தில் நாம் இருந்தாலும், நம்முடைய அடிப்படை அப்படியே தான் இருக்கிறது : நம்முடைய மனசாட்சி நம்மை குற்றப்படுத்துகிறது. கடவுளிடம் சேருவதற்கு நாம் நல்லவர்களாக உணர்வதில்லை. நம்முடைய மனசாட்சி எவ்வளவும் தெளிவு இல்லாமல் இருந்தாலும், இது உண்மை தான் : நாம் அவரிடம் சேரும் அளவுக்கு நல்லவர்கள் அல்ல.

நம்மை நாமே வெட்டிக் கொண்டாலும், புனித நதியில் நம் பிள்ளைகளை தூக்கி எறிந்தாலும், கோடிக்கணக்கான பணத்தை நன்கொடை செய்தாலும், ஸ்தோத்திர பண்டிகையில் சமையல் செய்தாலும், நூறு வகையான பிராயச்சித்தங்கள் செய்தாலும், நம்மையே காயப்படுத்திகொண்டாலும்; விளைவு மாறவே மாறாது : அந்த அழுக்கு போகாது, மரணம் அச்சுறுத்தும். பிணத்தை தொடுவது அல்லது ஒரு பன்றி இறைச்சியை சாப்பிடுவது போன்ற வெளிப்புறமான காரியங்களினால் நம்முடைய மனசாட்சி தீட்டுப்படாது என்பதை நாம் அறிவோம். ஒரு மனிதனின் இருதயத்தில் இருந்து வருவதே அவரை தீட்டுப்படுத்தும், அவருக்குள் செல்வது அவரை தீட்டுபடுத்தாது என்று இயேசு கூறுகிறார் (மாற்கு 7:15-23). பெருமை, சுய பரிதாபம், மனக்கசப்பு, காமம், பொறாமை, ஆசை, இச்சை, பயம் மற்றும் இவற்றினால் பிறக்கும் செயல்களினால் நாம் தீட்டுபடுகிறோம். அவை அனைத்தும் "உயிரற்ற செயல்கள்". அவற்றில் ஆவிக்குரிய வாழ்வு இல்லை. அவை புதிய வாழ்வில் இருந்து வருவதில்லை; அவை மரணத்தில் இருந்து வருகின்றன, மரணத்திற்கே வழிநடத்துகின்றன. அதனால் தான் அவை நம்முடைய மனசாட்சியிலே நம்பிக்கை அற்றவர்களாக மாற்றுகின்றது.

எல்லா காலங்களை போலவும், இந்த நவீன காலத்திலும் நமக்கு கிடைக்கும் பதில் கிறிஸ்துவின் இரத்தமே. நம்முடைய மனசாட்சி எழுந்து நம்மை குற்றப்படுத்தும் போது நாம் எங்கு செல்வோம்? கிறிஸ்துவிடம். வாழ்விலே மனசாட்சியில் இருந்து நிம்மதியையும், மரணத்திலே அமைதியையும் கொடுக்கிற ஒரே சுத்திகரிப்பு சாதனம் இவ்வுலகத்திலே கிறிஸ்துவின் இரத்தத்தை தவிர வேறு எதுவும் இல்லை.

# நமக்கு நன்மையான எல்லா காரியங்களையும் நமக்காக பெற்றுக்கொள்ள

*தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?* ரோமர் 8:32

இந்த வசனத்தின் கருத்து எனக்கு பிடித்து இருக்கிறது. எனக்கு கருத்துக்கள் பிடிக்கும் என்பதற்காக அல்ல, என்னுடைய தேவைகள் சந்திக்கப்படுவதை நான் விரும்புகிறேன் என்பதனால். ரோமர் 8:32ன் இரண்டு பகுதிகளுக்கும் அருமையான முக்கிய கருத்து தொடர்புகள் இருக்கின்றன. இரண்டாம் பாதி ஒரு கேள்வியாக இருப்பதால் நாம் அதை பார்க்காமல் இருக்கலாம் : அவரோடேகூட மற்ற எல்லாவற் றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி? இந்த கேள்வியை நாம் ஒரு வாக்கியமாக மாற்றினால், நம்மால் அதை பார்க்க முடியும். "தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளுவார்" .

வேறு வகையில் சொல்ல வேண்டும் என்றால், இரண்டு பகுதிகளுக்கும் இருக்கிற தொடர்பு, இரண்டாம் பகுதியை முற்றிலும் உறுதிபடுத்துவதாக இருக்கிறது. கடவுள் மிகவும் கடினமான காரியத்தை செய்தால், தன்னுடைய மகனையே பாடுபடவும் மரிக்கவும் ஒப்புக்கொடுத்தால், அதை விடவும் எளிதான காரியத்தை அவர் செய்வது மிகவும் நிச்சயம். அவரோடு எல்லாவற்றையும் நமக்கு கொடுப்பதே அந்த சுலபமான காரியம். அவருடைய மகனை பலியாக கொடுத்ததைவிட நமக்கு எல்லாவற்றையும் கொடுக்கவேண்டும் என்கிற கடவுளுடைய அர்ப்பணிப்பு இன்னும் அதிகமானது. "நம்மெல்லோருக்காகவும்" அவர் தன்னுடைய மைந்தனை கொடுத்தார். அதை செய்த பிறகு அவர் நமக்கு ஒன்று செய்யவில்லை என்றால் என்னவாகும்? அது கற்பனை செய்ய முடியாததாக இருக்கிறது.

"எல்லாவற்றையும் நமக்கு அருளுவது" என்றால் என்ன? சௌகரியமான வாழ்க்கை அல்ல. நம்முடைய எதிரிகள் இடம் இருந்து பாதுகாப்பும் அல்ல. நான்கு வசனங்களுக்கு பிறகு வேதம் கூறுவதை வைத்து நாம் இதை அறிந்துகொள்ளலாம் : "உமது நிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப்போல எண்ணப் படுகிறோம்" (ரோமர் 8:35). இன்றும் பல கிறிஸ்தவர்கள் இப்படிப்பட்ட பாடுகளை அனுபவிக்கிறார்கள். "கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப்

பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ?" (ரோமர் 8:36) என்று வேதம் கேட்கும்போது, அதற்கு இல்லை என்பது தான் பதில். இப்படிப்பட்ட காரியங்கள் கிறிஸ்தவர்களுக்கு நடக்காது என்பதினால் அல்ல, மாறாக, "இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே" (ரோமர் 8:37).

அப்படியானால் கிறிஸ்துவின் மரணத்தினால் கடவுள் நமக்கு "எல்லாவற்றையும்" கிருபையாக கொடுப்பேன் என்று இருக்கிறாரே அதன் அர்த்தம் என்ன? நமக்கு நன்மையான எல்லா காரியங்களையும் அவர் கொடுப்பார் என்பதே இதன் பொருள். அவருடைய மைந்தனின் சாயலுக்கு ஒப்பாக மாறுவதற்கு தேவையான அனைத்தையும் கொடுப்பார் என்பதே இதன் பொருள் (ரோமர் 8:28,29). நித்திய மகிழ்ச்சியைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான அனைத்தையும் கொடுப்பார்.

இது மற்றொரு வேதாகம வாக்குதத்தத்தை போன்றதாகவே இருக்கிறது : "என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்" (பிலிப்பியர் 4:19). இந்த வாக்குதத்தம் முந்தைய வசனங்களில் தெளிவுபடுத்தப்பட்டு இருக்கின்றது : "தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்; எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட் டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக் கப்பட்டேன்.என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற் றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு" (பிலிப்பியர் 4:12,13).

"எல்லாவற்றையும்" கிறிஸ்துவினாலே நாம் செய்ய முடியும் என்று அவ்வசனம் கூறுகின்றது. ஆனால் "பட்டினி" மற்றும் "குறைவுபடுதல்" ஆகியவையும் இந்த "எல்லாவற்றிலும்" அடங்குகிறது என்பதை கவனியுங்கள். உண்மையான எல்லா தேவைகளையும் கடவுள் சந்திப்பார். தங்களுடைய தேவைகள் சந்திக்கப்படவில்லை என்று பலர் உணரும் போது, பாடுகளின் மத்தியிலும் மகிழ்ச்சியாய் இருக்க திறன் கொடுப்பதும் அதில் அடங்கும். தேவையான உணவு கிடைக்கவில்லை என்று உணரும்போதும், பட்டினியாய் இருக்கிறவர்களுக்கு கிருபையை கொடுக்கும் எல்லா உண்மையான தேவைகளையும் கடவுள் சந்திப்பார். அவருடைய விருப்பத்தை செய்யவும், அவருக்கு மகிமை செலுத்தவும், நித்திய மகிழ்ச்சியை பெற்றுக்கொள்ளவும் எல்லாவற்றையும் கடவுள் கொடுப்பார் என்பதை கிறிஸ்துவின் பாடு மற்றும் மரணம் உறுதிசெய்கிறது.

# மனம் மற்றும் உடல்ரீதியான நோய்களில் இருந்து நம்மை குணப்படுத்த

✞

*நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். ஏசாயா 53:5*

*(அவர்) பிணியாளிகளெல்லாரையும் சொஸ்தமாக்கினார்: அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது. மத்தேயு 8:16,17*

**வி**யாதி என்பது ஒரு நாள் முழுவதுமாக அழிக்கப்படவேண்டும் என்பதற்காக கிறிஸ்து பாடுபட்டு மரித்தார். வியாதியும் மரணமும் உலகத்திற்கு கடவுள் வைத்திருந்த ஆரம்ப திட்டம் அல்ல. படைப்பின் மீது கடவுளுடைய நியாயத்தீர்ப்பாக பாவத்தோடு அவை உலகிற்குள் வந்தன. "அதேனென்றால் சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத் தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக் குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்கிற நம்பிக்கையோ(டு)டே" என்று வேதம் கூறுகின்றது ( ரோமர் 8:20). மனரீதியான தீமையின் கொடூரத்தை காண்பிப்பதற்காக கடவுள் உலகத்தை சரீர வலி என்னும் அடிமைத்தனத்திற்கு உட்படுத்தினார்.

இந்த அடிமைத்தனத்தில் மரணமும் ஒன்று. "ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது" (ரோமர் 5:12). இது எல்லா நோய்களின் கொடூரங்களும் உள் அடங்கும். கிறிஸ்தவர்கள் இதில் விதிவிலக்கு அல்ல : "(சிருஷ்டியுமல்லாமல்) அதுவுமல்லாமல், ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீரமீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம்" ( ரோமர் 8:23).

ஆனால் வியாதியின் கொடூரம் அனைத்தும் தற்காலிகமானது தான். சரீர வேதனை என்பது இல்லாத ஒரு காலத்தை நாம் எதிர்நோக்கி இருக்கிறோம். படைப்பு அழிவுக்கு அடிமையாக இருப்பது நிரந்தரமானது அல்ல. அவருடைய நியாயத்தீர்ப்பின் ஆரம்பத்தில் இருந்தே கடவுள் நம்பிக்கையை எதிர்நோக்கி இருந்தார் என்று வேதம்

கூறுகின்றது. அவருடைய இறுதி நோக்கம் இதுவே : "சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்கிற நம்பிக்கை" ( ரோமர் 8:20).

கிறிஸ்து உலகிற்கு வந்தபோது உலக மீட்பை ஏற்படுத்தும் ஊழியத்தை நிறைவேற்றவே வந்தார். அவருடைய வாழ்நாளில் அநேக மக்களை குணப்படுத்தியதன் மூலமாக தன்னுடைய நோக்கத்தை அடையாளம் காட்டினார். திரளான கூட்டங்கள் கூடி இருந்தபோது "எல்லாரையும் குணமாக்கிய" சமயங்கள் உண்டு ( மத்தேயு 8:16 ; லூக்கா 6:19). உலகத்தின் முடிவில் என்ன நடக்கப்போகிறது என்பதற்கு இது ஒரு உதாரணமாக இருக்கிறது "அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை" ( வெளிப்படுத்தல் 21:4).

வியாதியையும் மரணத்தையும் வெற்றிகொள்ள கிறிஸ்து அவற்றை தன்மீது எடுத்துக்கொண்டு கல்லறைக்கு அவற்றை கொண்டு சென்றார். இயேசு பாடுபட்டு மரித்தபோது வியாதியை கொண்டுவந்த பாவத்தின் மீது கடவுளுடைய நியாயத்தீர்ப்பை இயேசு அனுபவித்தார். இந்த வார்த்தைகளினால் ஏசாயா தீர்க்கதரிசி கிறிஸ்துவின் மரணத்தை விவரிக்கிறார் : "நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்" ( ஏசாயா 53:5). இயேசுவின் முதுகில் பட்ட கொடூரமான அடிகள் நோயற்ற உலகத்தை கொண்டு வந்தது.

கடவுள் மீட்டுகொண்ட படைப்பில் ஒரு நாள் எல்லா வியாதிகளும் அழிக்கப்படும். நமக்கு புதிய சரீரங்கள் கிடைக்கும். மரணத்தை நித்திய வாழ்வு விழுங்கிவிடும் ( 1 கொரிந்தியர் 15:54 ; 2 கொரிந்தியர் 5:4). "ஓநாயும் ஆட்டுக்குட்டியும் ஒருமித்து மேயும்; சிங்கம் மாட்டைப்போல வைக்கோலைத் தின்னும்" (ஏசாயா 65:25). பாவத்தில் இருந்தும் மரணத்தில் இருந்தும், வியாதியில் இருந்தும் நம்மை மீட்பதற்காக அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டிக்கு, கிறிஸ்துவை நேசிக்கிற அனைவரும் நன்றி பாடல்களை பாடுவார்கள்.

# அவரை நம்புகிற அனைவருக்கும் நித்திய வாழ்வை கொடுப்பதற்காக

✞

*தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.* யோவான் 3:16

நம்முடைய மகிழ்ச்சியான தருணங்களில் நாம் மரணம் அடைய விரும்புவது இல்லை. நம்முடைய பாடுகளை நம்மால் தாங்கிக்கொள்ள முடியாதபோது தான் நாம் மரணம் அடைய விரும்புகிறோம். உண்மையில் அந்த சூழ்நிலைகளில் நமக்கு தேவையானது மரணம் அல்ல நிவாரணம். நல்ல நாட்கள் மீண்டும் வரவேண்டும் என்று நாம் விரும்புவோம். நம்மை விட்டு வலி நீங்க வேண்டும் என்று நாம் விரும்புவோம். கல்லறையில் இருந்து நமக்கு பிரியமானவர்கள் மீண்டு வரவேண்டும் என்று நாம் விரும்புவோம். நாம் மகிழ்ச்சியையும் வாழ்வையும் விரும்புகிறோம்.

நன்றாக வாழ்ந்த ஒரு வாழ்க்கையின் முடிவாக நாம் மரணத்தை பார்க்கும்போது நம்மை நாமே ஏமாற்றிக்கொள்கிறோம். அது ஒரு எதிரி. இந்த உலகத்தின் அருமையான இன்பங்களில் இருந்து நம்மை அது துண்டிக்கிறது. தீமைகளில் சிறிதானதாகவே மரணத்திற்கு இனிமையான பெயர்களை நாம் கொடுக்கிறோம். நாம் பாடுபடும்போது நம்மை கொல்கிறவர்கள் கொடுக்கும் கிருபையின் விஷம் நம்முடைய ஏக்கத்தை நிறைவுசெய்வது அல்ல, நம்முடைய நம்பிக்கையை முடித்து வைப்பது. வாழவேண்டும் என்பது மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என்பதுவுமே மனித இதயத்தின் ஏக்கம்.

கடவுள் நம்மை அப்படித்தான் படைத்தார். “காலத்தைப் பற்றிய உணர்வை மனிதருக்கு தந்திருக்கிறார்” ( பிரசங்கி (சபை உரையாளர்) 3:1 பொது மொழிபெயர்ப்பு). நாம் கடவுளுடைய சாயலில் படைக்கப்பட்டு இருக்கிறோம். கடவுள் வாழ்வை விரும்புகிறார், எப்போதும் உயிரோடு இருக்கிறார். நாமும் எப்போதும் உயிர்வாழவே படைக்கப்பட்டு இருக்கிறோம். நாம் வாழ்வோம். நித்திய வாழ்வுக்கு எதிர்சொல் அழிவு அல்ல, நரகம். மற்ற எல்லாரையும் விட இயேசு இதை பற்றி அதிகமாக பேசி இருக்கிறார். கொடுக்கப்படும் நித்திய வாழ்வை நிராகரிப்பதன் விளைவு மறைந்துபோவது அல்ல, கடவுளுடைய கோபாக்கினையின் கொடுமையை அனுபவிப்பது என்று இயேசு

தெளிவுபடுத்தி இருக்கிறார் : "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்" ( யோவான் 3:36).

அது எப்போதும் நிலைத்து நிற்கும். "இவர்கள் நித்திய ஆக்கினை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள்" ( மத்தேயு 25:46) என்று இயேசு கூறினார். கடவுளை பாரபட்சமாகவும் அவமரியாதையாகவும் நடத்திய தீமையின் சொல்ல முடியாத நிஜத்தை இது வெளிப்படுத்துகிறது. எனவே " உன் கண் உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைப் பிடுங்கிப்போடு; நீ இரண்டு கண்ணுடையவனாய், நரக அக்கினியிலே தள்ளப்படுவதைப் பார்க்கிலும், ஒற்றைக்கண்ணனாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும். அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும்" (மாற்கு 9:47,48) என்று இயேசு எச்சரித்தார்.

நித்திய வாழ்வு என்பது வலியும் வேதனையும் கலந்த இவ்வாழ்க்கையின் கூடுதல் இணைப்பு அல்ல. வாழ்வின் மோசமான விளைவாக நரகம் இருப்பதைப் போல, வாழ்வின் சிறந்த விளைவாக "நித்திய வாழ்வு" இருக்கும். அது உயர்வானதும், எல்லா பாவங்களும், எல்லா கவலைகளும் நீங்கிச் செல்கின்ற எப்போதும் அதிகரிக்கிற மகிழ்ச்சி அதிலே இருக்கும். இந்த விழுந்துபோன படைப்பின் எல்லா தீமைகளும், கொடூரங்களும் நீங்கிவிடும். நன்மையானவை அனைத்தும், உண்மையான நீடித்த மகிழ்ச்சியை கொண்டு வருகின்ற அனைத்தும் பாதுகாக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு, அதிகரிக்கப்படும்.

இந்த வாழ்வில் நம்மால் பெற்றுக்கொள்ள முடியாத மகிழ்ச்சியின் பரிமாணங்களை பெற்றுக்கொள்ள ஏற்றவர்களாக நாம் மாற்றப்படுவோம். "தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காதுகேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை" (1 கொரிந்தியர் 2:9). வாழ்க்கையின் ஒவ்வொரு தருணத்திலும், இப்போதும், எப்போதும் அது உண்மையாய் இருக்கிறது. எல்லாவற்றையும் திருப்திசெய்யும் கடவுளின் மகிமையை நாம் காண்போம். "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்" ( யோவான் 17:3). இதற்காகவே கிறிஸ்து மரித்தார். நாம் ஏன் அவரை பொக்கிஷமாக தழுவிக்கொண்டு வாழக்கூடாது?

# 20

# நம்மை தற்போதைய பொல்லாத காலத்தில் இருந்து விடுவிக்க

✞

*இவரே நம் தந்தையாம் கடவுளின் திருவுளத்திற்கேற்ப இன்றைய பொல்லாத காலத்தினின்று நம்மை விடுவிக்குமாறு நம்முடைய பாவங்களின் பொருட்டுத் தம்மையே ஒப்புவித்தார்.*
கலாத்தியர் 1:4 (பொது மொழிபெயர்ப்பு)

**நா**ம் இறக்கும் வரை, அல்லது தன்னுடைய ராஜ்யத்தை ஏற்படுத்த கிறிஸ்து திரும்ப வரும்வரை, நாம் இந்த "பொல்லாத காலத்தில்" வாழவேண்டும். ஆகையால் "இன்றைய பொல்லாத காலத்தினின்று நம்மை விடுவிக்குமாறு" கிறிஸ்து தம்மையே ஒப்புக்கொடுத்தார் என்று வேதம் கூறுகின்றது. அவர் நம்மை உலகில் இருந்து எடுத்துக்கொள்வார் என்று கூறவில்லை, ஆனால் அதில் இருக்கும் தீய சக்திகள் இடம் இருந்து விடுவிப்பார் என்றே கூறுகின்றது. இயேசு நமக்காக இவ்வாறாக ஜெபித்தார் : "நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்" ( யோவான் 17:15).

ஏமாற்றவும் அழிக்கவும் சாத்தானுக்கு அதிகாரம் கொடுக்கப் பட்ட காலமே இந்த "பொல்லாத காலம்" . இதனால் தான் இந்த "தீமை" யில் இருந்து நம்மை காக்கும்படி கிறிஸ்து வேண்டிக்கொள்கிறார். " உலகமுழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிற(து)" என்று வேதம் கூறுகின்றது ( 1 யோவான் 5:19). இந்த "தீமை" "இப்பிரபஞ்சத்தின் தேவன்" என்று அழைக்கப்படுகின்றது. அவனுடைய முக்கிய குறிக் கோள் மக்களை உண்மைக்கு குருடர் களாக்குவது தான். "தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத் தின் ஒளி அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமா யிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக் கினான்" (2 கொரிந்தியர் 4:4).

நம்முடைய இருள் அடைந்த ஆவிக்குரிய நிலையில் இருந்து எழும்பும் வரை நாம் இந்த "பொல்லாத கால"த்தோடும் அதன் ஆட்சியாளனோடும் இசைந்து இருப்போம். "அவைகளில் நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப் படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவின் ஆவிக்கேற்றபடியாகவும் நடந் துகொண்டீர்கள்" (எபேசியர் 2:2). இதை நாம் அறிந்துகொள்ளாமல் பிசாசின் அடிமைகளாக இருந்தோம். சுதந்திரம் போல தோன்றியது

உண்மையில் அடிமைத்தனம். இருபத்து ஓராம் நூற்றாண்டின் சிற்றின்பங்கள், களிப்புகள் மற்றும் தீயபழக்கங்களுக்கு நேரடியாக வேதம் இதை கூறுகின்றது : "தாங்களே கேட்டுக்கு அடிமைகளாயிருந்தும், அவர்களுக்குச் சுயாதீனத்தை வாக்குத்தத்தம் பண்ணுகிறார்கள்; எதினால் ஒருவன் ஜெயிக்கப்பட்டிருக்கிறானோ அதற்கு அவன் அடிமைப்பட்டிருக்கிறானே" (2 பேதுரு 2:19).

வேதத்தின் சுதந்திர முழக்கம் இதுவே, "நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத் தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்" (ரோமர் 12:2). இன்னும் முப்பது ஆண்டுகளில் சுதந்திரத்தின் முத்திரைகள், அழியாத சமுதாய வடுக்களாக மாறிவிடும். வேறு வகையில் கூறினால், இக்காலத்து தலைவர்களினால் மயங்கிகிடக்காமல், சுதந்திரமாக இருங்கள் ! அவர்கள் இன்று இங்கே இருப்பார்கள், நாளை சென்று விடுவார்கள். அடிமைப்படுத்துகிறவர்கள் ஒருவரை தொடர்ந்து ஒருவர் எழுவார்கள்.

நித்திய வாழ்வின் கண்ணோட்டத்தில் இக்காலத்து ஞானம் மூடத்தனமே. "ஒருவனும் தன்னைத்தானே வஞ்சியாதிருப்பானாக, இவ்வுலகத்திலே உங்களிலொருவன் தன்னை ஞானியென்று எண்ணினால் அவன் ஞானியாகும்படிக்குப் பைத்தியக்காரனாகக் கடவன். இவ்வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாகப் பைத்தியமாயிருக்கிறது" ( 1 கொரிந்தியர் 3:18,19). "சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது" ( 1 கொரிந்தியர் 1:18). அப்படியானால் கடவுளுடைய இக்கால ஞானம் எது? அது விடுதலையாக்கும் இயேசு கிறிஸ்துவின் மகத்துவமான மரணமே. ஆதியில் இயேசுவை பின்பற்றியவர்கள், "நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம் .....எவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்குக் கிறிஸ்து தேவபெலனும் தேவஞானமுமாயிருக்கிறார்.( 1 கொரிந்தியர் 1:23,24).

கிறிஸ்து சிலுவைக்கு சென்றபோது கோடிக்கணக்கான பிணைக்கைதிகளை விடுதலை ஆக்கினார். பிசாசின் தந்திரமான முகத்திரையை கிழித்து, அவனுடைய சக்தியை உடைத்தார். அவர் சிலுவையில் அறையப்படுவதற்கு முந்தைய நாள் மாலையில், இதையே எண்ணி அவர் இவ்வாறு கூறினார், "இப்பொழுதே இந்த உலகத்துக்கு நியாயத்தீர்ப்பு உண்டாகிறது; இப்பொழுதே இந்த உலகத்தின் அதிபதி புறம்பாகத் தள்ளப்படுவான்" ( யோவான் 12:31).

## கடவுளுடன் நம்மை ஒப்புரவாக்க

✞

*நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே.* ரோமர் *5:10*

**பா**வமுள்ள மனிதனுக்கும் கடவுளுக்கும் இடையேயான ஒப்புரவு, இருவழிகளிலும் நடைபெற வேண்டும். நம்முடைய மனப்பாங்கு மீறுதலில் இருந்து விசுவாசமாக மாற வேண்டும். கடவுளுடைய மனப்பாங்கு கோபாக்கினையில் இருந்து கிருபையாக மாறவேண்டும். ஆனால் இரண்டும் ஒன்றல்ல.நான் மாற்றம் அடைய கடவுளுடைய உதவி தேவையாக இருக்கிறது; ஆனால் கடவுளுக்கு என்னுடைய உதவி தேவை இல்லை. என்னுடைய மாற்றம் எனக்கு வெளியே இருந்து எனக்குள் வரவேண்டும். கடவுளுடைய இயல்பு அப்படியே இருக்கிறது. எனவே ஒட்டுமொத்தமாக அது கடவுளுடைய மாற்றமே அல்ல என்று அர்த்தமாகிறது. இது கடவுள் எனக்கு எதிராக இருப்பதில் இருந்து எனக்கு சாதகமாக இருக்க வேண்டும் என்கிற அவருடைய சொந்த திட்டமிட்ட செயலாக இருக்கிறது.

இதில் மிகவும் முக்கியமான வார்த்தைகள் “நாம்...சத் துருக்களாயிருக்கையில்” என்பனவே. இச்சமயத்தில் தான் நாம் “அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக் கப்பட்டோ(ம்)” (ரோமர் *5:10*). நாம் சத்துருக்களாய் இருக்கும்போது. வேறு வகையில் கூறினால், முதல் “மாற்றம்” கடவுள் உடையது, நம்முடையது அல்ல. நாம் எதிரிகளாகவே இருந்தோம். சுய நினைவோடு நாம் போர்க்களத்தில் இருந்தோம் என்றல்ல. பெரும்பாலானோர் சுய நினைவோடு கடவுளுக்கு பகைவர்களாக இருப்பதை உணர மாட்டார்கள். பகைமை மிகவும் அமைதியாக, கீழ்ப்படியாமை மற்றும் பாரபட்சத்தின் மூலமாக கவனமற்ற நிலையில் அதிகரிக்கிறது. வேதம் இதை இப்படி விவரிக்கிறது : “மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை; அது தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலும், கீழ்ப்படியக்கூடாமலும் இருக்கிறது” ( ரோமர் *8:7*).

நாம் அப்படியே இருக்கும் போது, கடவுள் கிறிஸ்துவை முன் அனுப்பி நம்முடைய கோபமூட்டும் பாவங்களை தாங்கிக்கொள்ளச் செய்தார். அதன் மூலமாக நம்மை கிருபையோடு மாத்திரம் நடத்துவதை சாத்தியப்படுத்தினார். நம்மை கடவுளிடம் ஒப்புரவு ஆக்குவதில் முதல்

செயலாக, நம்மை ஒப்புரவாகாமல் தடுக்கும் தடையை நீக்கினார். அந்த தடையின் பெயர் கடவுளை குறைத்து மதிப்பிடும் பாவ குற்ற உணர்வு. "தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி(னார்)" ( 2 கொரிந்தியர் 5:19).

கிறிஸ்துவின் பிரதிநிதிகள் இச்செய்தியை உலகிற்கு இப்படி சொன்னார்கள் : "தேவனானவர் எங்களைக்கொண்டு புத்தி சொல் லுகிறதுபோல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்" ( 2 கொரிந்தியர் 5:20). உங்களுடைய மனப்பாங்கை மாற்றிக்கொள்ளுங்கள் என்று மாத்திரம் அவர்கள் கூறினார்களா? இல்லை, கிறிஸ்துவில் கடவுள் முன்செய்த பணியினை ஏற்றுக்கொண்டு அவரோடு ஒப்புரவு ஆகுங்கள் என்கிறார்கள்.

மனிதர்களுக்குள் ஒப்புரவு ஆகுதலின் உவமையை கவனியுங்கள். இயேசு இப்படிச் சொன்னார், "நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன் பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவு கூருவாயாகில், அங்கேதானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப் போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து" ( மத்தேயு 5:23,24). "உன்னுடைய சகோதரனோடே ஒப்புரவாகி" என்று அவர் கூறும்போது, தீர்ப்பை மாற்றிக்கொள்ள வேண்டியது அவருடைய சகோதரரே. உங்கள் பேரில் குறை உண்டாகி இருந்தது உங்கள் சகோதரரிடம் தான். அதுபோல கடவுளுக்கு தான் உங்கள் பேரில் குறை இருக்கிறது. "உன் சகோதரனோடே ஒப்புரவாகி" என்றால் உங்கள் பேரில் உங்கள் சகோதரன் வைத்திருக்கும் தீர்மானத்தை மாற்றுவதற்கு செய்ய வேண்டியதை நீங்கள் செய்யுங்கள் என்று அர்த்தம்.

ஆனால் நாம் கிறிஸ்துவின் நற்செய்தியை கேட்கும்போது, கடவுள் அதை முன்பே செய்துவிட்டார் என்பதை அறிந் துகொள்கிறோம்: அவருடைய தீர்ப்பை மாற்ற நம்மால் எடுக்க முடியாத படிகளை அவர் எடுத்துவைத்தார். நம்முடைய இடத்திலே கிறிஸ்து பாடுபட அனுப்பி வைத்தார். "நாம் சத்துருக்களாயிருக்கையில்" அவரால் தீர்மானிக்கப்பட்ட ஒப்புரவு நிறைவேறியது. நம்முடைய பக்கத்திலிருந்து செய்யப்பட வேண்டிய ஒப்புரவு , விலை உயர்ந்த ஒரு பரிசை நாம் வாங்கிக்கொள்வதை போல கடவுள் செய்த ஒப்புரவை பெற்றுக்கொள்வதுதான்.

# நம்மை கடவுளிடம் கொண்டு வர

✞

*ஏனெனில், கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்.*
*1 பேதுரு 3:18*

*முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்.*
*எபேசியர் 2:13*

இறுதியாக கடவுளே சுவிசேஷம். சுவிசேஷம் என்றால் "நல்ல செய்தி". கிறிஸ்தவம் முதலில் இறையியல் அல்ல, அது ஒரு செய்தி. போர்க் கைதிகள் மறைவான ஒரு வானொலி மூலமாக, தங்கள் படையினர் வந்துவிட்டார்கள், இன்னும் சற்று நேரத்தில் மீட்புப்பணி நடைபெறும் என்பதை கேட்பதைப் போன்றது. சிறைக்காவலர்கள் கைதிகள் ஏன் மகிழ்ச்சி அடைகிறார்கள் என்று சிந்திப்பார்கள்.

நற்செய்தியில் இருக்கும் உச்சகட்ட நன்மை என்ன? இவை அனைத்தும் கடவுளிடம் தான் நிறைவுபெறும். நற்செய்தியின் அனைத்து வார்த்தைகளும் அவரிடத்தில் கொண்டு சேர்க்கும். அப்படி இல்லை என்றால், அது சுவிசேஷமே கிடையாது. எடுத்துக்காட்டாக, இரட்சிப்பு நரகத்தில் இருந்து காப்பாற்றிவிட்டு கடவுளிடம் சேர்க்கவில்லை என்றால், அது நற்செய்தியாக இருக்காது. மன்னிப்பு குற்ற உணர்வில் இருந்து மாத்திரம் விடுதலை கொடுத்து கடவுளுக்கு வழியை திறந்து விடவில்லை என்றால் அது நற்செய்தி கிடையாது. நீதிமானாக்கப்படுதல் நம்மை கடவுளிடம் ஏற்றுக்கொள்ளும்படி செய்து, அவரிடம் ஐக்கியத்தில் கொண்டு வரவில்லை என்றால், அது நற்செய்தி கிடையாது. மீட்பு நம்மை கட்டுகளில் இருந்து விடுதலையாக்கி, கடவுளிடம் கொண்டு சேர்க்கவில்லை என்றால் அது நற்செய்தி கிடையாது. புத்திர சுவிகாரம் பிதாவின் குடும்பத்தில் நம்மை சேர்த்து அவருடைய கரத்தில் சேர்க்கவில்லை என்றால், அது நற்செய்தி கிடையாது.

இது மிக முக்கியம். பலர் கடவுளை தழுவிக்கொள்ளாமல், நற்செய்தியை மாத்திரம் தழுவிக்கொள்வதைப் போல் இருக்கிறார்கள். நாம் நரகத்தில் இருந்து தப்பித்துக்கொள்ள வேண்டும் என்று விரும்புவதால், நம்மிடம் புதிய இருதயம் இருக்கும் என்பதற்கு எந்த ஆதாரமும் கிடையாது. அது மிகவும் இயல்பான ஆசை, இயற்கைக்கு

அப்பாற்பட்ட ஆசை அல்ல. மன்னிப்பின் மூலமாக மனரீதியான நிம்மதியை பெற்றுக்கொள்ளவும், கடவுளுடைய கோபத்தை நீக்கவும், கடவுளுடைய உலகத்தை சொந்தமாக்கிகொள்ளவும் விரும்புவதற்கு புதிய இருதயம் அவசியம் இல்லை. எவ்வித ஆவிக்குரிய மாற்றமும் இல்லாமல் இவை அனைத்தையும் புரிந்துகொள்ளலாம். இவை அனைத்தையும் விரும்ப நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டிய அவசியம் இல்லை. பிசாசுகளும் அதை விரும்புகின்றன.

அவற்றை விரும்புவதில் தவறு இல்லை. சொல்லப்போனால் அதை விரும்பாமல் இருப்பது மூடத்தனம். கடவுளிடம் சேர்க்கும் மகிழ்ச்சிக்கு வழியை இவை நமக்கு கொடுக்கின்றன. எனவே இவற்றை விரும்புகிறோம் என்பதே நாம் மாறிவிட்டோம் என்பதற்கான ஆதாரம். கிறிஸ்து மரித்ததற்கான சிறந்த காரணம் இதுவே. "கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்" ( 1 பேதுரு 3:18).

இது ஏன் நற்செய்தியின் அவசியமாக இருக்கிறது? ஏனென்றால், கடவுளுடைய மகிமையை பார்த்து ரசிக்கும், முழுமையான நீடித்த மகிழ்ச்சியின் முழு அனுபவத்தை அது கொடுக்கிறது. இதை விட குறைவான ஒன்றில் இருந்து நம்முடைய சிறந்த மகிழ்ச்சி கிடைக்கும் என்றால், நாம் விக்கிரக ஆராதனைக்காரராக இருப்போம், கடவுள் அவமதிக்கப்படுவார். நம்முடைய மகிழ்ச்சியின் மூலமாக அவருடைய மகிமை வெளிப்படுமாறு நம்மை அவர் படைத்து இருக்கிறார். கடவுளே நம்மை நித்தியமாக, அதிகரிக்கும் மகிழ்ச்சியினாலே நம்மை கவரக்கூடியவர். அதற்காக கடவுள் தேவையான அனைத்தையும் செய்துவிட்டார். தன்னுடைய சொந்த மைந்தனை அதற்கு விலையாகக் கொடுத்தார் என்பதுதான் கிறிஸ்துவின் நற்செய்தி.

கிறிஸ்து வருவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே, முழுமையான நீடித்து இருக்கும் இன்பத்திற்கு தானே ஆதாரம் என்பதை கடவுள் காண்பித்து இருக்கிறார். "ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத் துவீர்; உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு" ( சங்கீதம் 16:11). பின்பு "கடவுளிடம் கொண்டு சேர்ப்பதற்காக" பாடுபட கிறிஸ்துவை அனுப்பினார். ஒரு மனிதன் அனுபவிக்கக்கூடிய ஆழமான, நீண்ட ஆனந்தத்தை கொண்டுவர கிறிஸ்து அனுப்பப்பட்டார் என்பதே இதன் பொருள். இந்த அழைப்பை கேளுங்கள் : "அநித்தியமான பாவ சந்தோஷங்களை" ( எபிரெயர் 11:25) "நித்திய இன்பங்களை" பெற்றுக்கொள்ளுங்கள். கிறிஸ்துவிடம் வாருங்கள்.

# 23

# நாம் அவருக்கு சொந்தமானவர்களாக மாறும்படியாக

✞

*என் சகோதரரே, நீங்கள் மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகி, தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள்.* ரோமர் *7:4*

*நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே.*
*1* கொரிந்தியர் *6:19-20*

*ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்.*
*அப்போஸ்தலர் 20:28*

**நீ**ங்கள் யார் என்பது முக்கியமல்ல நீங்கள் யாருடையவர்கள் என்பதே முக்கியமான கேள்வி. தாங்கள் யாருக்கும் அடிமையல்ல என்று பலர் நினைக்கிறார்கள். முழு சுதந்திரத்தை அவர்கள் கனவுகாண்கிறார்கள். அலைகளில் சுந்ததிரமாகச் செல்வதாக ஜெல்லி மீன்கள் உணர்ந்தாலும், அவை கீழே தன்னுடைய கயிறுபோன்ற அமைப்புகளால் கட்டப்பட்டு இருக்கின்றன.

ஆனால் அப்படி நினைத்த மக்களுக்கு இயேசு ஒரு வார்த்தை வைத்து இருந்தார். “சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்” என்றார். அவர்கள் அவருக்குப் பதிலளிக்கும் விதமாக “நாங்கள் ... நாங்கள் ஒருக்காலும் ஒருவனுக்கும் அடிமைகளாயிருக்கவில்லை; விடுதலையாவீர்களென்று நீர் எப்படிச் சொல்லுகிறீர்?” என்றார்கள். இயேசு அவர்களுக்குப் பதில் கூறும் விதமாக, “பாவஞ்செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமையாயிருக் கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல் லுகிறேன்” என்றார் ( யோவான் *8:32-34*).

முற்றிலும் சுயதீர்மானங்களின் மூலமாக விழுந்துபோன மனிதர்களை பற்றி வேதம் எந்த உண்மையும் இருப்பதாக கூறவில்லை. வீழ்ந்துபோன இந்த உலகத்தில் சுய நிர்வாகம் என்பதே கிடையாது. நாம் பாவத்தினால் ஆளப்படலாம் அல்லது கடவுளால் ஆளப்படலாம். “ எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக் கிறீர்களென்று அறியீர்களா? பாவத்திற்கு நீங்கள் அடிமைகளாயிருந்த

காலத்தில் நீதிக்கு நீங்கினவர்களாயிருந்தீர்கள். இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளா (னீர்கள்)" ( ரோமர் 6:16,20,22).

பல சமயங்களில் நாம் விரும்புவதை செய்ய நமக்கு சுதந்திரம் உண்டு. ஆனால் நாம் செய்ய வேண்டியதை செய்ய நமக்கு சுதந்திரம் இல்லை. தெய்வீக கட்டளையின் அடிப்படையில் நமக்கு ஒரு புதிய சக்தி தேவையாக இருக்கிறது. அந்த சக்தி கடவுள் உடையது. அதனால் தான் வேதம் இப்படி சொல்கிறது "முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம்" ( ரோமர் 6:17). கடவுளே அவர்கள் "சத்தியத்தை அறியும்படி... அவர்களுக்கு மனந்திரும்புதலை அருளத் தக்கதாகவும்,பிசாசானவனுடைய இச்சையின்படி செய்ய அவனால் பிடிபட்டிருக்கிற அவர்கள் மறுபடியும் மயக்கந்தெளிந்து அவன் கண்ணிக்கு நீங்கத்தக்கதாகவும்" செய்வார் ( 2 தீமோத்தேயு 2:25,26).

இந்த சக்தியை அவர் வெளிப்படுத்துவதற்கான விலை கிறிஸ்துவின் மரணமே. "நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே" ( 1 கொரிந்தியர் 6:19-20). அவரை நம்புகிறவர்களுக்கு கிறிஸ்து கொடுத்த விலை என்ன? "(அவர்) தம்முடைய சுயரத்தத்தினாலே (அவர்களை) சம்பாதித்துக்கொண்(டார்)" ( அப்போஸ்தலர் 20:28).

சுய ஆட்சி நடத்த அல்ல, நன்மையானதை விரும்ப நாம் விடுதலை செய்யப்பட்டு விட்டோம். கிறிஸ்துவின் மரணம் நம்முடைய பழைய சுயத்தின் மரணமாக மாறும்போது ஒரு புதிய வாழ்க்கை முறை நமக்கு முன்பாக திறக்கிறது. உயிருள்ள கிறிஸ்துவின் உறவு கைதியாக்கும் சட்டங்களை மாற்றிவிட்டது. " என் சகோதரரே, நீங்கள் மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர் களாகி, தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி கிறிஸ்துவின் சரீரத் தினாலே நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர் களானீர்கள்" ( ரோமர் 7:4).

சட்டத்திற்கும் பாவத்திற்கும் விடுதலையாகி நாம் அவருக்கு சொந்தமாக வேண்டும் என்று கிறிஸ்து பாடுபட்டு மரித்தார். இங்கே கீழ்ப்படிதல் ஒரு பளுவாக இருப்பதை நிறுத்திக்கொண்டு, கனிகொடுக்கும் சுதந்திரமாக மாறுகின்றது. நீங்கள் உங்களுக்கு சொந்தம் அல்ல என்பதை மறந்துவிடாதீர்கள். நீங்கள் யாருடையவர்கள்? கிறிஸ்துக்கு சொந்தமானவர்களானால், வாருங்கள், அவரோடு சேர்ந்துகொள்ளுங்கள்.

# 24

# நாம் பரிசுத்தமான இடத்திற்குள் தைரியமாக அணுக

✞

*ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால்...*
*எபிரெயர் 10:19*

**ப**ழைய ஏற்பாட்டில் இருக்கும் மிகப்பெரிய இரகசியங்களில் ஒன்று, இஸ்ரவேலர்கள் ஆராதனை செய்கின்ற கூடாரமாகிய "ஆசரிப்பு கூடாரம்" . அந்த இரகசியம் குறிப்பிடப்பட்டு இருக்கிறது ஆனால் தெளிவாக இல்லை. இஸ்ரவேல் மக்கள் எகிப்தில் இருந்து வெளியேறி சீனாய் மலைக்கு வந்தபோது, இந்த தற்காலிக ஆராதனைக் கூடாரம் மற்றும் அதன் பகுதிகள் மற்றும் அதன் உபகரணங்களை எப்படி செய்ய வேண்டும் என்று கடவுள் மோசேயிடம் விரிவான அறிவுரைகளை கூறி இருந்தார். இதை குறித்த இரகசியமான காரியம் இந்த கட்டளை தான் : "மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே அவைகளைச் செய்ய எச்சரிக்கையாயிரு' (யாத்திராகமம் 25:40).

1400 ஆண்டுகளுக்குப் பிறகு கிறிஸ்து உலகிற்கு வந்தபோது, இந்த பழைய "ஆசரிப்பு கூடாரம்", பரலோகத்தில் இருக்கும் உண்மைகளின் மாதிரி அல்லது நிழலாக இருக்கிறது என்று வெளிப்படுத்தப்பட்டது. ஆசரிப்பு கூடாரம் என்பது பரலோக உண்மையின் பூலோக சித்தரிப்பு. எனவே புதிய ஏற்பாட்டில் இப்படி நாம் வாசிக்கிறோம் : " (ஆசாரியர்கள்) இவர்கள் செய்யும் ஆராதனை பரலோகத்திலுள்ளவைகளின் சாயலுக்கும் நிழலுக்கும் ஒத்திருக் கிறது; அப்படியே, மோசே கூடாரத்தை உண்டு பண்ணுகையில் மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின் படியே நீ எல்லாவற்றையும் செய்ய எச்சரிக்கையாயிரு என்று தேவன் அவனுக்குக் கட்டளையிட்டார்" ( எபிரெயர் 8:5).

பழைய ஏற்பாட்டின் முறைமைகள் அனைத்துமே மிகவும் உண்மையான ஒன்றை குறிக்கிறதாக இருக்கின்றன. ஆசாரியர் அவ்வப்போது மிருக இரத்தத்துடன் ஆசரிப்பு கூடாரத்துக்குள் இருக்கும் பரிசுத்த அறைகளுக்குள் சென்று கடவுளை சந்திப்பார். எனவே அதை காட்டிலும் அளவற்ற மேன்மையை உடைய "பரிசுத்த ஸ்தலங்கள்" பரலோகத்தில் இருக்கின்றன. அங்கே கிறிஸ்து அவ்வப்போது செல்லவில்லை, ஒரே முறை தம்முடைய சொந்த இரத்தத்தோடு சென்றார்.

கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய்...பெரிதும் உத்தமமுமான (மனிதர்களாலும், அவருடைய படைப்புகளாலும் செய்யப்படாத) கூடாரத்தின் வழியாகவும் , வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்.( எபிரெயர் 9:11,12)

இது நமக்கு குறிப்பிடுவது என்னவெனில், இப்போது நாம் கிறிஸ்துவோடே கடவுளுடைய பிரசன்னம் இருக்கிற அனைத்து மகா பரிசுத்த ஸ்தலங்களுக்குள்ளும் செல்ல நமக்கு வழி திறந்து வைக்கப்பட்டு இருக்கிறது. ஆதியிலே இந்த இடங்களின் 'மாதிரி'களும் 'நிழல்'களுமாக இருந்த இடங்களுக்குள் யூத ஆசாரியர்கள் மாத்திரமே செல்வார்கள். கடவுளுடைய மகிமை வெளிப்படுகிற மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரதான ஆசாரியர் மாத்திரமே வருடத்துக்கு ஒருமுறை செல்ல முடியும் ( எபிரெயர் 9:7). இந்த மகிமையின் இடத்தை பாதுகாக்க தடைசெய்யும் திரைச்சீலை ஒன்று இருந்தது. கிறிஸ்து சிலுவையிலே தன்னுடைய கடைசி மூச்சை விட்டபோது "தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது, பூமியும் அதிர்ந்தது கன்மலைகளும் பிளந்தது"( மத்தேயு 27:51) என்று வேதம் கூறுகின்றது.

இதற்கு என்ன அர்த்தம்? இந்த வார்த்தைகளிலே அதன் விளக்கம் கொடுக்கப்பட்டு இருக்கிறது : " சகோதரரே, நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண் ணினபடியால்,அந்த மார்க்கத்தின் வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக் கிறபடியினாலும்" ( எபிரெயர் 10:19,20). கிறிஸ்து இல்லாமல் கடவுளுடைய பரிசுத்தம் நம்மிடம் இருந்து பாதுகாக்கப்பட வேண்டியதாக இருந்தது. அவர் அவமதிக்கப்பட்டு நம்முடைய பாவங்களினால் கோபாக்கினை அடைந்து இருப்பார். ஆனால் இப்போது, கிறிஸ்துவின் மூலமாக கடவுளுடைய பரிசுத்தத்தின் அனலின் அழகை மனமாற நாம் நெருங்கி கண்டு களிக்கலாம். அவர் கனவீனம் அடையமாட்டார். நாம் கோப்பாக்கினை அடைய மாட்டோம். எல்லாரையும் பாதுகாக்கும் கிறிஸ்துவினால், கடவுள் கனப்படுத் தப்படுவார். நாம் நித்திய ஆச்சரியத்தோடே நிற்போம். எனவே அணுக பயப்பட வேண்டாம். ஆனால் கிறிஸ்துவின் மூலமாக அணுகுங்கள்.

# நமக்காக கடவுளை நாம் சந்திக்கும் இடமாக அவர் மாற

✞

*இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: இந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன் என்றார்.*
*அப்பொழுது யூதர்கள்: இந்த ஆலயத்தைக் கட்ட நாற்பத்தாறு வருஷம்சென்றதே, நீர் இதை மூன்று நாளைக்குள்ளே எழுப்புவீரோ என்றார்கள்.*
*அவரோ தம்முடைய சரீரமாகிய ஆலயத்தைக்குறித்துப் பேசினார்.*
யோவான் *2:19-21*

“**எ**ன்னை கொலைசெய்யுங்கள் நான் கடவுளை சந்திக்கும் உலகளாவிய இடமாக மாறுவேன்” இப்படித்தான் நான் யோவான் *2:19-21*ஐ சுருக்கமாகச் சொல்வேன். அவர்கள் இயேசு எருசலேம் தேவாலயத்தை குறித்து சொல்கிறார் என்று நினைத்தார்கள் : “இந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்”. ஆனால் அவர் தன்னுடைய உடலை குறித்து சொன்னார்.

இயேசு ஏன் யூத கோவிலுக்கும் தன்னுடைய உடலுக்கும் இடையே தொடர்பை சித்தரிக்கிறார்? ஏனென்றால், கடவுளை சந்திக்கும் இடமாகிய கோவிலின் இடத்தை அவர் எடுத்துக்கொள்ள வந்தார். தெய்வ மைந்தன் உலகிற்கு வருவதினால், சடங்குகளும் ஆராதனைகளும் பெரிய மாற்றத்தை அடையும். கிறிஸ்துவே கடைசி பஸ்கா ஆட்டுக்குட்டியாகவும், இறுதி ஆசாரியராகவும், இறுதி கோவிலாகவும் மாறுவார். எல்லாம் அழிந்துபோகும் ஆனால் அவர் நிலைத்து இருப்பார்.

நிலைத்து இருக்கிறவர் அளவில்லாத மேன்மை உடையவர். தன்னை குறித்து இயேசு இவ்வாறு கூறுகிறார், “தேவாலயத்திலும் பெரியவர் இங்கே இருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்” (மத்தேயு *12:6*). கடவுளுடைய மகிமை பரிசுத்த ஸ்தலத்தை நிறப்பிய அபூர்வமான சூழ்நிலைகளில் கடவுள் தங்கும் இடமாக கோவில் இருந்தது. ஆனால் கிறிஸ்துவை குறித்து வேதம் “தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக, அவருக்குள் வாசமாயிருக்கிறது” என்கிறது ( கொலோசெயர் *2:9*). இயேசுவிடம் கடவுளுடைய பிரசன்னம் வந்து வந்து செல்வதில்லை. அவரை சந்திக்கும்போது கடவுளை சந்திக்கிறோம்.

கோவிலில் கடவுள் பரிபூரணமில்லாத மனித மத்தியஸ்தர்கள் மூலமாக மனிதர்களை சந்தித்தார். ஆனால் கிறிஸ்துவை குறித்து

இப்போது "தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே" என்கிறது வேதம்( 1 தீமோத்தேயு 2:5). நாம் ஆராதனையில் கடவுளை சந்திக்க வேண்டும் என்றால் நாம் செல்ல வேண்டிய ஒரே இடம் இயேசு கிறிஸ்து மாத்திரமே. இஸ்லாம் மற்றும் யூதமதம் போல கிறிஸ்தவத்திற்கு புவியியியல் மையம் கிடையாது.

விபச்சாரத்தில் இருந்த ஒரு பெண்ணை இயேசு சந்தித்தபோது, அவள் பேசிக்கொண்டு இருந்த காரியத்தை மாற்றி இதை சொன்னாள், "எங்கள் பிதாக்கள் இந்த மலையிலே தொழுதுகொண்டுவந்தார்கள்; நீங்கள் எருசலேமிலிருக்கிற ஸ்தலத்திலே தொழுதுகொள்ளவேண்டும் என்கிறீர்களே" என்றாள். அதற்கு இயேசு: ஸ்திரீயே, நான் சொல்லுகிறதை நம்பு. நீங்கள் இந்த மலையிலும் எருசலேமிலும் மாத்திரமல்ல, எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளுங்காலம் வருகிறது"என்றார். புவியியல் ஒரு முக்கியம் அல்ல. எது முக்கியம்? இயேசு தொடர்ந்தார், "உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது" என்றார்.( யோவான் 4:20-24)

இயேசு இந்த காரியங்களை முற்றிலுமாக மாற்றினார். இந்த மலையிலும் அல்ல, பட்டணத்திலும் அல்ல, ஆவியிலும் உண்மையிலும். புவியியல் கட்டுப்பாடுகளை உடைத்து எறிய அவர் உலகிற்குள் வந்தார். இப்போது கோவில் இல்லை, எருசலேம் மையமாக இல்லை. கிறிஸ்துவே மையமாக இருக்கிறார். நீங்கள் கடவுளை பார்க்க வேண்டுமா? இயேசு , "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்" என்கிறார் ( யோவான் 14:9). நீங்கள் கடவுளை ஏற்றுக்கொள்ள வேண்டுமா? இயேசு "என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான்" என்கிறார் ( மத்தேயு 10:40). உங்கள் ஆராதனையில் கடவுளுடைய பிரசன்னம் வேண்டுமா? வேதம் "குமாரனை அறிக்கையிடுகிறவன் பிதாவையும் உடையவனாயிருக்கிறான்" என்கிறது (1 யோவான் 2:23), நீங்கள் பிதாவை கனம்பண்ண வேண்டுமா? இயேசு "குமாரனைக் கனம்பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவையும் கனம்பண்ணாதவனாயிருக்கிறான்"என்கிறார் (யோவான் 5:23).

கிறிஸ்து மரித்தபோது, அவர் மீண்டும் எழுந்தார். பழைய கோவிலுக்கு பதிலாக உலக அளவில் அணுகக்கூடிய கிறிஸ்து ஏற்படுத்தப்பட்டு இருக்கிறார். உங்கள் தசையை ஒரு அங்குலம் கூட நகர்த்தாமல் அவரிடம் வரமுடியும். நீங்கள் எவ்வளவு விசுவாசிக்கிறீர்களோ அவ்வளவு நெருக்கமாக இருக்கிறார்.

# 26

# பழைய ஏற்பாட்டு ஆசாரியத்துவத்தை முடிவுக்குகொண்டுவந்து, நித்திய பிரதான ஆசாரியராக மாற

✞

*அவர்கள் மரணத்தினிமித்தம் நிலைத்திருக்கக் கூடாத வர்களானபடியால் ...இவரோ என்றென்றைக்கும் நிலைத் திருக்கிறபடியினாலே, மாறிப்போகாத ஆசாரியத்துவமுள்ள வராயிருக்கிறார். மேலும், தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்...அவர் பிரதான ஆசாரியர்களைப் போல முன்பு சொந்தப் பாவங்களுக்காகவும், பின்பு ஜனங்களுடைய பாவங்களுக்காகவும் நாடோறும் பலியிடவேண்டுவதில்லை; ஏனெனில் தம்மைத்தாமே பலியிட்டதினாலே ஒரேதரம் செய்து முடித்தார்.* எபிரெயர் *7:23-27*

*அந்தப்படி, மெய்யான பரிசுத்த ஸ்தலத்துக்கு அடையாளமான கையினால் செய்யப்பட்டதாயிருக்கிற பரிசுத்த ஸ்தலத்திலே கிறிஸ்துவானவர் பிரவேசியாமல், பரலோகத்திலேதானே இப்பொழுது நமக்காக தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார். பிரதான ஆசாரியன் அந்நிய இரத்தத்தோடே வருஷந்தோறும் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிக்கிறதுபோல, அவர் அநேகந்தரம் தம்மைப் பலியிடும்படிக்குப் பிரவேசிக்கவில்லை. அப்படியிருந்ததானால், உலகமுண்டானது முதற்கொண்டு அவர் அநேகந்தரம் பாடுபடவேண்டியதாயிருக்குமே; அப்படியல்ல, அவர் தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும்பொருட்டாக இந்தக் கடைசிக்காலத்தில் ஒரேதரம் வெளிப்பட்டார்.*
எபிரெயர் *9:24-26*

*அன்றியும், எந்த ஆசாரியனும் நாடோறும் ஆராதனை செய்கிறவனாயும், பாவங்களை ஒருக்காலும் நிவிர்த்திசெய்யக்கூடாத ஒரேவித பலிகளை அநேகந்தரம் செலுத்திவருகிறவனாயும் நிற்பான். இவரோ, பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தி, என்றென்றைக்கும் தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்து...*
எபிரெயர் *10:11-12*

கிறிஸ்தவ சத்தியத்தின் மிக மகத்துவமான வார்த்தை “ஒரேதரம்”. இது ஒரு கிரேக்க வார்த்தையில் இருந்து (எஃபாபாக்ஸ்) வருகிறது, இதன் அர்த்தம் “எல்லா காலத்திற்கும் ஒருமுறை”. தீர்க்கமான ஒரு காரியம் சம்பவித்துவிட்டது என்பது இதன் பொருள். அந்த செயல் அதிகமானதை சாதித்துவிட்டதால் அது மீண்டும் செய்யப்பட தேவையில்லை. அதை மீண்டும் செய்ய எடுக்கப்படும் எந்த முயற்சியாக இருந்தாலும், அது “ஒரேதரம்” செய்யப்பட்ட சம்பவத்தின் சாதனையின் அங்கீகாரத்தை இழக்கச் செய்யும்.

ஆண்டுதோறும் தங்களுடைய பாவங்களுக்காகவும், மக்களுடைய பாவங்களுக்காகவும் இஸ்ரவேலின் ஆசாரியர்கள் மிருக பலிகளை கொடுப்பது இருள்நிறைந்த நிஜம் ஆகும். மன்னிப்பு கிடையாது என்று நான் சொல்லவில்லை. மக்களுடைய நிவாரணத்திற்காக கடவுள் இதை ஏற்படுத்தினார். அவர்கள் பாவம் செய்தார்கள், அவர்களுக்கு பதிலாக தண்டனையை ஏற்றுக்கொள்ள வேறொன்று வேண்டும். பாவமுள்ள ஆசாரியர்கள் மற்றும் பதிலாக கொடுக்கப்பட்ட மிருகங்களின் ஊழியத்தையும் கடவுள் கிருபையின் காரணமாக ஏற்றுக்கொண்டார்.

ஆனால் அதற்கு ஒரு தீய பக்கமும் இருக்கிறது. அது மீண்டும் மீண்டும் செய்யப்பட வேண்டும். வேதம் இவ்வாறு கூறுகின்றது "அப்படி நிறுத்தப்படாதபடியால், பாவங்கள் உண்டென்று அவைகளினாலே வருஷந்தோறும் நினைவுகூருதல் உண்டாயிருக்கிறது" (எபிரெயர் 10:3). மக்கள் தங்களுடைய பாவங்களை மிருகத்தின் மீது செலுத்துவதற்காக காளையின் மீது கைகளை வைக்கும்போது, அவர்கள் மீண்டும் அப்படிச் செய்வார்கள் என்பதை அறிந்து இருந்தார்கள். மனித பாவங்களுக்காக எந்த மிருகத்தின் பாடுகளும் போதுமானதாக இருக்காது. பாவம் செய்த ஆசாரியர்கள் தங்கள் சொந்த பாவங்களுக்காக பலிசெலுத்த வேண்டும். இறந்துபோன ஆசாரியர்களுக்கு பதிலாக வேறொருவர் நியமிக்கப்பட வேண்டும். காளைகளுக்கும், ஆடுகளுக்கும் ஒழுக்கரீதியான வாழ்க்கை கிடையாது, எனவே அவை மனித பாவங்களை சுமக்க முடியாது. "அல்லாமலும், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்திசெய்யமாட்டாதே" ( எபிரெயர் 10:4).

இந்த ஆசாரிய குறைபாடுகளின் மேகங்களுக்கு ஒரு வெள்ளி முலாம் பூசப்பட்டு இருக்கிறது. இந்த குறைபாடுள்ள காரியங்களை கடவுள் கனப்படுத்தினால், ஒரு நாள் அவர் அதற்கு தகுதியான ஒரு ஊழியக்காரரை அனுப்பி இந்த ஆசாரியர்கள் செய்ய முடியாததை செய்வார் என்று அர்த்தமாகும். ஒரேதரம் பாவத்தை ஒழித்துவிட அப்படிச் செய்வார்.

அவர்தான் கிறிஸ்து. அவரே இறுதி ஆசாரியராகவும், இறுதி பலியாகவும் ஆனார். பாவம் இல்லாததினால், அவர் தனக்காக பலிகளை செலுத்தவில்லை. இறப்பு இல்லாதவர், எனவே அவருக்கு பதிலாக யாரும் நியமிக்கப்பட தேவை இல்லை. அவர் மனிதனாக இருப்பதால் அவர் மனித பாவங்களை சுமந்துகொள்ள முடியும். எனவே அவர் தனக்காக பலிகளை செலுத்தவில்லை, தன்னையே பலியாக செலுத்தினார். வேறொருவர் தேவைப்படும் அவசியமே ஏற்படாது. கடவுளுக்கும் நமக்கு மத்தியஸ்தர் ஒருவரே. வேறு ஒருவர் தேவைப்படமாட்டார். ஓ ! கிறிஸ்துவின் மூலமாக மாத்திரமே கடவுளிடம் சேருகிறவர்கள் எவ்வளவு மகிழ்ச்சியாக இருப்பார்கள் !

# 27

# பரிதபிக்கக்கூடிய உதவிகரமான ஆசாரியராக மாற

✞

*நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங்கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்.*

எபிரெயர் *4:15-16*

சிலுவையில் தம்மையே பலியாக கொடுத்ததினால் கிறிஸ்து நம்முடைய ஆசாரியராக மாறினார் ( எபிரெயர் 9:26). நமக்காக கடவுளிடம் செல்கிறவர் அவரே. அவருடைய கீழ்ப்படிதலும், பாடுகளும் மிகவும் பரிபூரணமாக இருப்பதால், கடவுள் அவரை நிராகரிக்கவே மாட்டார். எனவே நாம் அவர் மூலமாக கடவுளிடம் சென்றால், நம்மையும் அவர் புறம்பே தள்ளிவிட மாட்டார்.

அது இன்னும் மேன்மையானதாக மாறுகிறது. சிலுவையின் பாதையில் கிறிஸ்து ஒவ்வொரு மனிதர்களைப் போலவும் முப்பது ஆண்டுகள் சோதிக்கப்பட்டார். உண்மையாகவே அவர் பாவம் செய்யவில்லை. அப்படியானால் அவருடைய சோதனைகள் நம்முடைய சோதனைகளை விட பெலனுள்ளவை, பெலவீனமானவை அல்ல என்று ஞானிகள் குறிப்பிடுகிறார்கள். ஒரு மனிதன் சோதனைக்கு ஒப்புகொடுத்தால், அது தன்னுடைய முழுநீள ஆக்ரோஷத்தையும் காண்பிக்கும். அழுத்தம் அதிகரித்துக்கொண்டு இருக்கும்போதே நாம் விட்டுக்கொடுத்து விடுவோம். ஆனால் இயேசு அப்படிச் செய்யவே இல்லை. அவர் முழுமையான அழுத்தத்தையும் கடைசிவரை சகித்துக்கொண்டு, தோல்வி அடையவே இல்லை. முழு அளவில் சோதிக்கப்படுவது என்றால் என்ன என்பது அவருக்கு தெரியும்.

வாழ்க்கை முழுவதுமான சோதனை, முடிவிலே வெளிப் படையான தூஷணம் மற்றும் நிராகரிப்பு ஆகியவை இயேசுவுக்கு நிகழ்ந்தது. அது சோதிக்கப்படுகிற, பாடுபடுகிற மக்களுக்காக பரிதபிக்கக்கூடிய இணையற்ற திறனை அவருக்கு கொடுத்தது. அவரை விட அதிகமாக யாரும் பாடுபட்டது இல்லை. அவரை விட அதிகமாக யாரும் தூஷணத்தை அனுபவித்தது இல்லை. திரும்பி சண்டை போடுவதற்கு அவரைவிட குறைவாகவோ, அதிகமாகவோ தகுதி உடையவர்கள் எவரும் இல்லை. ஆனால் அப்போஸ்தலராகிய பேதுரு இப்படி சொல்கிறார், “அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய

வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை; அவர் வையப்படும்போது பதில்வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்" ( *1 பேதுரு 2:22-23).*

ஆகையால் வேதம் நம்முடைய பெலவீனங்களை குறித்து பரிதபிக்கக்கூடியவராக அவர் இருப்பதாக கூறுகின்றது ( எபிரெயர் *4:15).* இது அற்புதமானது. உயிர்த்தெழுந்த பரலோக தெய்வத்தின் மைந்தன், அண்டசராசரங்களின் அனைத்து அதிகாரங்களையும் உடைய கடவுளுடைய வலது கரத்தின் அருகே இருக்கிறவர், நாம் என்ன உணர்கிறோம் என்பதை உணர்கிறார். நாம் சோகத்திலோ அல்லது வேதனையிலோ, பாவ இன்பங்களின் வாக்குகளினால் சிறைபிடிக் கப்பட்டு இருந்தாலும் நம்முடைய உணர்வுகளை அவர் புரிந்துகொள் கிறார்.

இது என்ன வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது? இயேசுவின் பரிதபிப்பிற்கும் நம்முடைய ஜெபத்தில் இருக்கும் தைரியத்துக்கும் ஒரு இணைப்பை உண்டுபண்ணி வேதம் பதில் சொல்கிறது. நம்முடைய பெலவீனங்களில் பரிதபிக்கக்கூடியவராக அவர் இருப்பதால் நாம், "அடையவும், தைரியமாய்க் கிருபாசனத் தண்டையிலே சேரக்கடவோம்" ( எபிரெயர் *4:15-16).*

அறியப்பட்டவாறு இப்படி ஒரு கருத்து இருக்கிறது : நாம் போராட்டங்களுடன் சென்றால் கடவுளுடைய பிரசன்னத்தில் வரவேற்கப்படமாட்டோம். கடவுளுடைய பரிசுத்தத்தையும், பரிபூரணத்தையும் நாம் மிகவும் துல்லியமாக உணர்வதால், நம்மை குறித்த அனைத்துமே அவருடைய பிரசன்னத்திற்கு ஏற்றதாக தோன்றுவதில்லை. ஆனால், இயேசு " பரிதபிக்கக்கூடியவர்" என்பதை நினைக்கிறோம். நம்மோடு அவரும் உணர்கிறார், அவர் நமக்கு எதிராக இல்லை. இந்த கிறிஸ்துவின் கரிசனை வருவதற்கு நமக்கு தைரியம் கொடுக்கிறது. நம்முடைய கதறல்கள் அவருக்கு தெரியும். நம்முடைய போராட்டத்தை அவர் ருசிபார்த்து இருக்கிறார். நம்முடைய தேவையை நாம் உணரும்போது, தைரியமாக வரும்படி அவர் அழைக்கிறார். எனவே ஜான் நியூட்டனின் பழைய பாடலை நாம் நினைவுபடுத்துவோம்.

*நீங்கள் ஒரு அரசரிடம் வருகிறீர்கள்,*
*உங்களோடு நீண்ட விண்ணப்பங்களை கொண்டு*
*வருகிறீர்கள்;*
*அவருடைய கிருபையும் வல்லைமையும் மிகப் பெரியது*
*யாரும் அதைவிட அதிகமாக கேட்க முடியாது.* [4]

# முன்னோர்களின் வீணான நடத்தையில் இருந்து நம்மை விடுதலையாக்க

✞

*உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்து வந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே.*
*1 பேதுரு 1:18,19*

**மே**ற்கிலே இருக்கும் மதசார்பற்ற மக்களுக்கும், ஆதிவாசி நாடோடி மக்களுக்கும் ஒரு பொதுவான விஷயம் உண்டு : மூதாதையர்களின் கட்டுகளின் மேல் அவர்களுக்கு நம்பிக்கை உண்டு. அதை அவர்கள் வித்தியாசமான பெயர்களை வைத்து அழைப்பார்கள். ஆதிவாசிகள் அதை மூதாதையர்களின் ஆவி என்றும் சாபத்தின் தொடர்ச்சி என்று கூறுவார்கள். மதசார்பற்ற மக்கள் மரபு அணு தாக்கங்கள் அல்லது திட்டுகிற, சார்ந்து வாழ்கின்ற, உணர்வுரீதியாக தொலைவில் இருக்கும் பெற்றோர் காரணம் என்று கூறுவார்கள். இவை இரண்டிலுமே, நாம் மூதாதையர்களின் சாபங்கள் அல்லது காயங்களினால் கட்டப்பட்டு இருக்கிறோம் என்னும் மரண உணர்வு இருக்கிறது. எதிர்காலம் வீணானதாகவும், மகிழ்ச்சி அற்றதாகவும் தோன்றுகிறது.

"உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்து வந்த வீணான நடத்தையினின்று...மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே" என்று வேதம் கூறும்போது, அழிவிலே முடியக்கூடிய வெறுமையான, அர்த்தமற்ற, பலனற்ற வாழ்க்கையை பற்றி கூறுகின்றது. இந்த "வீணான நடத்தை"கள் நம்முடைய முன்னோர்களோடு தொடர்பு உடையது என்று அது கூறுகின்றது. எப்படி என்பதை அது கூறவில்லை. நாம் இந்த வீணான நடத்தையின் கட்டுகளில் இருந்து எப்படி விடுதலை ஆகிறோம் என்பது தான் முக்கியம். விடுதலை ஆக்குகிறவரின் சக்தி, விடுதலையின் அளவை விவரிக்கிறது.

முன்னோர்களின் கட்டுகளில் இருந்து மீட்கப்படுதல் "அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல்" நடைபெறுகின்றது. மீட்புக்காக கொடுக்கப்படுகிற மிக உயரிய

விலையை பொன்னும் வெள்ளியும் குறிப்பிடுகின்றன. அவை வீண் என்பது அனைவருக்குமே தெரியும். செல்வம் மிகுந்த மக்களே இந்த சாபத்திற்கு அதிகமாக அடிமைப்படுகிறார்கள். மூதாதையரின் சாபத்தின் பயத்திலே ஒரு செல்வாக்கு மிகுந்த நாடோடிக்கூட்டம் இருக்கலாம். ஒரு வெற்றிகரமான நிறுவனத்தின் தலைவருடைய திருமணமும் குழந்தைகளும் சீரழிய அறியப்படாத பின்னணி சக்திகள் காரணமாக இருக்கலாம்.

பொன்னும் வெள்ளியும் உதவிசெய்ய சக்தியற்றனவாக இருக்கின்றன. இயேசுவின் பாடும் மரணமும் தேவையானதை செய்கின்றது : தங்கமும் அல்ல வெள்ளியும் அல்ல, "குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினா(ல்)". கிறிஸ்து மரணம் அடைந்தபோது, நமக்கு நம்முடைய முன்னோர்களுக்கும் இருந்த உறவை கடவுள் கண்ணோக்கினார். அவர்களிடம் இருந்து நாம் பெற்றுக்கொண்ட வீணான நடத்தைகளில் இருந்து நம்மை விடுதலையாக்க நினைத்தார். கிறிஸ்து மரணமடைய அது ஒரு மகத்துவமான காரணம் ஆகும்.

உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டால், கிறிஸ்துவின் நீதியை நீங்கள் அணிந்துகொண்டால், அண்டசராசரங்களை படைத்தவரால் நேசிக்கப்பட்டு நீங்கள் மீட்கப்பட்டால், உங்களுக்கு எதிராக ஒரு சாபமும் வேலை செய்யாது. கடவுளின் மக்களாகிய "யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாதம் இல்லை, இஸ்ரவேலுக்கு விரோதமான குறிசொல்லுதலும் இல்லை"( எண்ணாகமம் 23:23) என்று சொல்வதற்கு இயேசுவின் பாடு மற்றும் மரணமே இறுதியான காரணம். இயேசு மரித்தபோது, அவரை நம்பிய அனைவருக்கும் பரலோகத்தின் அனைத்து ஆசீர்வாதங்களும் விலைக்கு வாங்கப்பட்டன. கடவுள் ஆசீர்வதிக்கும் போது, யாரும் அதை சபிக்க முடியாது.

இயேசுவால் குணப்படுத்தமுடியாத எந்த காயங்களையும் பெற்றோரால் ஏற்படுத்தவும் முடியாது. அந்த குணப்படுத்தும் மீட்கும் பொருளின் பெயர் "கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தம்". 'விலையேறப்பெற்ற' என்கிற வார்த்தை அளவிடப்படாத விலையை குறிக்கிறது. அதற்கு எதிராக எந்த கட்டும் நிற்காது. ஆகையால், நாம் தங்கம், வெள்ளியில் இருந்து திரும்பி கடவுளுடைய பரிசை தழுவிக்கொள்வோம்.

# பாவத்தின் அடிமைத்தனத்தில் இருந்து நம்மை விடுவிக்க

✞

*இவர் நம்மீது அன்புகூர்ந்தார்; தமது சாவு வாயிலாக நம் பாவங்களில் இருந்து நம்மை விடுவித்தார்.*
*ஆட்சி உரிமை பெற்றவர்களாக, அதாவது நம் கடவுளும் தந்தையுமானவருக்கு ஊழியம் புரியும் குருக்களாக நம்மை ஏற்படுத்தினார். இவருக்கே மாட்சியும் ஆற்றலும் என்றென்றைக்கும் உரியன.*
வெளிப்படுத்தல் (திருவெளிப்பாடு-பொது மொழிபெயர்ப்பு) *1:5-6*

*இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தஞ்செய்யும்படியாக நகர வாசலுக்குப் புறம்பே பாடுபட்டார்.*
*எபிரெயர் 13:12*

**ந**ம்முடைய பாவம் இரண்டு வகையில் நம்மை கெடுக்கிறது. கடவுளுக்கு முன்பாக நம்மை குற்றமுள்ளவர்களாக மாற்றுகிறது, எனவே நாம் அவருடைய கோபாக்கினையின் கீழ் வருகிறோம். பின்னர் நம்முடைய நடத்தையில் நம்மை அழுக்கானவர்களாக மாற்றுகிறது, எனவே நாம் வெளிப்படுத்த வேண்டிய கடவுளுடைய சாயலை கெடுக்கிறோம். குற்றவுணர்வினால் நம்மை அது குற்றம்சாட்டி, அன்பின்மையினால் அடிமைப்படுத்துகின்றது.

இந்த இரண்டு கொடுமைகளில் இருந்து இயேசுவின் இரத்தம் நம்மை விடுதலை ஆக்குகின்றது. இது கடவுளுடைய நீதியை திருப்தி செய்வதன் மூலமாக நம்முடைய பாவங்கள் நீதியோடு மன்னிக்கப்படச் செய்கின்றது. அன்பின்மைக்கு அடிமையாக்கும் பாவத்தை அது வெற்றிகொள்கின்றது. கடவுளுடைய கோபாக்கினையை கிறிஸ்து ஏற்றுக்கொண்டு நம்முடைய குற்றத்தை எப்படி நீக்குகிறார் என்பதை பார்த்தோம். ஆனால் பாவத்தின் அடிமைத்தனத்தில் இருந்து கிறிஸ்துவின் இரத்தம் நம்மை எப்படி விடுதலை செய்கின்றது?

அவர் ஒரு சக்திவாய்ந்த எடுத்துக்காட்டாக வாழ்ந்து நம்முடைய சுயநலத்தில் இருந்து நம்மை விடுதலை செய்கிறார் என்பது பதில் அல்ல. ஆனால் இயேசு நமக்கு எடுத்துக்காட்டு என்பது உண்மை தான். சக்தியுள்ள எடுத்துக்காட்டுதான். அவரை நாம் பின்பற்ற வேண்டும் என்று தெளிவுபடுத்தியும் இருக்கிறார் : “நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும்

ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்" ( யோவான் *13:34*). ஆனால் பின்பற்ற கொடுக்கப்படும் அழைப்பு விடுவிப்பின் சக்தி கிடையாது.

பாவம் நம்முடைய வாழ்வில் ஒரு சக்திவாய்ந்த தாக்கம். நாம் கடவுளுடைய சக்தியை கொண்டே விடுதலைபெற முடியும். நம்முடைய மனவலிமையால் அல்ல. ஆனால் நாம் பாவிகளாய் இருப்பதினால் நாம் கடவுளுடைய சக்தி நம்மை பாவத்தில் இருந்து விடுதலை செய்வதற்காக அல்லது குற்றப்படுத்துவதற்காக செயல்படுகிறதா? என்பதை கேட்க வேண்டும். நம்முடைய குற்றங்களை நீக்க கிறிஸ்து மரித்தார். அப்போது பாவத்தின் சக்தியில் இருந்து விடுவிக்கும் பரலோக கிருபையின் மதகுகளை அவர் திறந்தார்.

வேறு வார்த்தைகளில், கடவுளுடைய கிருபையினால் பாவத்தின் சக்தியில் இருந்து விடுவிக்கப்படுவதற்கு முன்பாக, கடவுளுடைய கோபத்தில் இருந்தும் பாவத்தின் குற்றத்தில் இருந்தும் விடுவிக்கப்பட வேண்டும். பரிசுத்த ஆவியானவர் மூலமாக கடவுள் மாற்றத்திற்கான சக்தியை கொடுக்கிறார். அதனால் தான் "அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்" ஆகியவை அழகாக "ஆவியின் கனி" என்று வழங்கப்படுகின்றது. (கலாத்தியர் *5:22,23*). இதனால் தான் வேதம் இந்த அற்புதமான வாக்குதத்தத்தை ஏற்படுத்த முடிகிறது "நீங்கள் நியாயப்பிரமாணத் திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது"( ரோமர் *6:14*). "கிருபைக்கு கீழ்ப்பட்டு" இருப்பதால் சர்வ வல்லமை உடைய கடவுள் நம்முடைய அன்பின்மையை அழிப்பார் (படிப்படியாக). நம்முடைய சுயநலத்தை அழிப்பதில் நாம் செயலற்றவர்களாக இருக்கிறோம். தீர்மானம் செய்யும் சக்தியும் நம்மிடம் இல்லை. அது கடவுளுடைய கிருபைக்கு மாத்திரமே உண்டு. இதனால் தான் அப்போஸ்தலராகிய பவுல் இப்படிச் சொன்னார், "நான் இருக்கிறது தேவகிருபையினாலே இருக்கிறேன்; அவர் எனக்கு அருளிய கிருபை விருதாவாயிருக்கவில்லை; அவர்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டேன், ஆகிலும் நான் அல்ல, என்னுடனே இருக்கிற தேவகிருபையே அப்படிச் செய்தது" (*1* கொரிந்தியர் *15:10*). சகல கிருபையும் உடைய கடவுள், கிறிஸ்துவின் விசுவாசத்தின் மூலமாக நம்மை பாவத்தின் குற்றத்தில் இருந்தும் அடிமைத்தனத்தில் இருந்தும் விடுவிப்பாராக.

# நாம் பாவத்துக்கு செத்து நீதிக்கு பிழைத்து இருப்பதற்காக

✞

*நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள். 1 பேதுரு 2:24*

**நா**ம் யோசிப்பதற்கே இது விநோதமாக இருக்கலாம். நமக்கும் நம்முடைய பாவங்களுக்கும் பதிலாக கிறிஸ்து மரித்தார் என்றால் நாம் மரித்துவிட்டோம் என்று பொருட்படும். உங்களுக்கு பதிலாக ஒருவர் மரித்துவிட்டால் நீங்கள் மரணத்தில் இருந்து தப்பித்துக்கொண்டீர்கள் என்று நீங்கள் நினைக்கலாம். நிச்சயமாகவே நாம் நித்திய மரணத்தில் இருந்து தப்பினோம். அது முடிவில்லாத வேதனையும் கடவுள் இடம் இருந்து பிரிந்து இருப்பதும் ஆகும். இயேசு "நான் அவைகளுக்கு நித்தியஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை" என்றார் (யோவான் 10:28). "உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்; இதை விசுவாசிக்கிறாயா? என்றார் (யோவான் 11:26). அவரை "விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு" கிறிஸ்து மரித்தார் என்பது உண்மை தான் (யோவான் 3:16).

ஆனால் கிறிஸ்து நமக்காகவும் நமது பாவங்களுக்காகவும் மரித்ததில் மற்றும் ஒரு கருத்தும் இருக்கிறது. "நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்" ( 1 பேதுரு 2:24). நாம் வாழ அவர் மரித்தார், நாம் சாகவும் அவர் மரித்தார். கிறிஸ்து மரித்தபோது, கிறிஸ்துவின் விசுவாசியாக நானும் அவரோடு மரித்தேன். வேதம் தெளிவுபடுத்துகிறது : "அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்க(ள்)" ( ரோமர் 6:5). "எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள்"( 2 கொரிந்தியர் 5:14).

கிறிஸ்துவோடு இந்த அனுபவத்தில் ஐக்கியப்படுவதன் ஆதாரமே விசுவாசம். விசுவாசிகள் "கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்(டார்கள்)"(கலாத்தியர் 2:20). அவருடைய மரணத்தை நாம் திரும்பி பார்த்து, கடவுளுடைய மனதிலே நாம் அங்கு இருந்தோம் என்பதை அறிந்துகொள்ள வேண்டும். நம்முடைய பாவங்கள் அவர்மீது இருந்தன. நாம் பெற வேண்டிய மரணம் அவரில்

நமக்கு நேர்ந்தது. "அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம்" ( ரோமர் 6:4). தண்ணீர் கல்லறையை போன்றது. அதன் உள்ளே செல்வது மரணத்தை சித்தரிக்கிறது. வெளியே வருவது புதிய வாழ்வை சித்தரிக்கிறது. இவை அனைத்தும் "விசுவாசத்தினாலே" கடவுள் செய்வதை சித்தரிக்கின்றன. நீங்கள் "ஞானஸ்நானத்திலே அவரோடேகூட அடக்கம்பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின்மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்" ( கொலோசெயர் 2:12).

நான் கிறிஸ்துவோடு மரித்தேன் என்கிற உண்மை, அவர் எனக்காக மரித்தார் என்பதோடு நேரடியாக தொடர்பு உடையது. "நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்". நான் இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்போது என்னுடைய சொந்த மரணத்தையும் ஏற்றுக்கொள்கிறேன் என்பது இதன் பொருள். என்னுடைய பாவம் இயேசுவை கல்லறைக்கு கொண்டு சென்றது, அவரோடு என்னையும் கொண்டு சென்றது. விசுவாசம் பாவத்தை கொலைபாதகமாக பார்க்கிறது. அது இயேசுவை கொன்றது, என்னையும் கொன்றது.

எனவே கிறிஸ்தவனாக மாறுவது என்றால் பாவத்துக்கு சாவது. பாவத்தை நேசித்த பழைய சுயம் இப்போது இயேசுவோடு மரித்துவிட்டது. பாவம் அழகை இழந்த ஒரு விலைமாதுவை போன்றது. அவள் என்னுடைய மன்னனையும் என்னையும் கொன்றது. ஆகையால், விசுவாசி பாவத்துக்கு மரித்தார், அவளுடைய கவர்ச்சிக்கு இனி கட்டுப்பட மாட்டார். என்னுடைய நண்பரைக் கொன்ற பாவத்திற்கு, மேல்முறையீடே கிடையாது. அவள் என் எதிரியாகி விட்டாள்.

என்னுடைய புதிய வாழ்வு இப்போது நீதியினால் அசைக்கப்படுகின்றது. "நாம்...நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்" (1 பேதுரு 2:24). என்னை நேசித்து எனக்காக தன்னையே கொடுத்த கிறிஸ்துவின் அழகே என்னுடைய ஆத்துமாவின் விருப்பம். பரிபூரண நீதியே அவருடைய அழகு. நான் கீழ்ப்படிய விரும்பும் கட்டளை இப்போது இதுதான் (என்னோடு இணைந்துகொள்ள உங்களையும் அழைக்கிறேன்) :"உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்" ( ரோமர் 6:13).

# 31

# நியாயப்பிரமாணத்திற்கு மரித்து கடவுளுக்காக கனி கொடுக்கும்படியாக

✞

*நீங்கள் மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகி, தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள்.* ரோமர் *7:4*

**கி**றிஸ்து மரித்தபோது நாமும் அவரோடு மரித்தோம். கிறிஸ்துவோடு ஐக்கியப்பட்டோம் என்று நம்பியவர்களை கடவுள் பார்த்தார். நம்முடைய பாவத்துக்காக அவர் மரித்தது, அவரில் நம்முடைய மரணமாக இருக்கிறது (முந்தைய அதிகாரத்தை பார்க்கவும்). ஆனால், இயேசுவையும் நம்மையும் கொன்றது பாவம் மாத்திரம் அல்ல. கடவுளுடைய சட்டங்களும் தான். நாம் சட்ட த்தை மீறி பாவம் செய்யும் போது, நியாயப்பிரமாணம் நமக்கு மரண தண்டனை விதிக்கிறது. சட்டம் இல்லை என்றால், தண்டனையும் இல்லை. "நியாயப்பிரமாணம் கோபாக்கினையை உண்டாக்குகிறது, நியாயப்பிரமாணமில்லாவிட்டால் மீறுதலுமில்லை" ( ரோமர் *4:15*). ஆனால், "உலகத்தார் யாவரும் தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்புக்கு ஏதுவானவர்களாகும் படிக்கும், நியாயப்பிரமாணம் சொல்லுகிறதெல்லாம் நியாயப் பிரமாணத்துக்கு உட்பட்டிருக்கிறவர்களுக்கே சொல்லுகிறதென்று அறிந்திருக்கிறோம்" ( ரோமர் *3:19*).

சட்டத்தின் சாபத்தில் இருந்து தப்பிக்கவே முடியாது. அதுவே நியாயம், நாமே குற்றவாளிகள். விடுதலை பெற ஒரே ஒரு வழி தான் உண்டு. யாராகிலும் ஒருவர் அபராதத்தை செலுத்த வேண்டும். அதற்காகவே இயேசு வந்தார்: "கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார்" ( கலாத்தியர் *3:13*).

ஆகையால், நாம் கிறிஸ்துவுக்குள் இருந்தால் கடவுளுடைய சட்டம் நம்மை குற்றப்படுத்த முடியாது. நம்மை ஆட்சிசெய்ய அதற்கு இருந்த அதிகாரம் இரண்டு வகையில் உடைக்கப்பட்டது. ஒருபுறம், சட்டத்திற்கு தேவையானவற்றை கிறிஸ்து நமக்காக நிறைவேற்றினார். அவர் நியாயப்பிரமாணத்தை முழுமையாக கடைபிடித்தது, நம்முடைய கணக்கில் சேர்க்கப்பட்டது (அதிகாரம் *11* பார்க்க). மறுபுறம், கிறிஸ்துவின் இரத்தத்தினால் நியாயப்பிரமாணத்தின் அபராதம் செலுத்தப்பட்டது.

அதனால் தான் நியாயப்பிரமாணத்தின் அடிப்படையில் நாம் கடவுளுக்கு பிரியமாக இருக்க முடியாது என்று வேதம் தெளிவாக

தெரியப்படுத்துகின்றது. "எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியையினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை. (ரோமர் 3:20). "நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே மனுஷன் நீதிமானாக்கப்படுவதில்லையென்று அறிந்து, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலல்ல, கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படும்படிக்குக் கிறிஸ்து இயேசுவின்மேல் விசுவாசிக ளானோம்" (கலாத்தியர் 2:15). சட்டத்தைக் கடைபிடிப் பதினால் கடவுளுக்கு முன்பாக நீதிமான்களாவது நம்பிக்கை அற்ற செயல். கிறிஸ்துவின் இரத்தம் மற்றும் நீதியே நம்முடைய ஒரே நம்பிக்கை. அது நம்முடைய விசுவாசம் மாத்திரமே. "மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான் என்று தீர்க்கிறோம்" ( ரோமர் 3:28).

நாம் அவருடைய சட்டத்துக்கு மரிப்பதினாலும், நம்மை அது ஆட்சி செய்யாமல் இருப்பதினாலும் நாம் எப்படி கடவுளை பிரியப்படுத்த முடியும். கடவுளுடைய நல்ல பரிசுத்தத்தையும் வெளிப்படுத்துகிறதாக நியாயப்பிரமாணம் இருக்கிறது அல்லவா? (ரோமர் 7:12). நம்மிடம் எதிர்பார்த்து நம்மை குற்றப்படுத்துகிற சட்டத்தைவிட, நம்மை எதிர்பார்த்து நமக்காக கொடுக்கிற கிறிஸ்துவுக்கு நாம் சொந்தமானோம் என்று வேதாகமம் பதிலளிக்கிறது. முன்பு, கல்லிலே எழுதப்பட்ட எழுத்துக்களாக நமக்கு வெளியே இருந்து நம்மிடம் நீதியை எதிர்பார்த்தது. இப்போது நாம் கிறிஸ்துவோடு வைத்திருக்கும் உறவாக நமக்குள் நீதியின் ஏக்கம் எழும்புகின்றது. அவர் இருக்கிறார், அவர் நிஜமானவர். அவருடைய ஆவியின் மூலமாக நம்முடைய பெலவீனத்தில் அவர் நமக்கு உதவுகின்றார். ஒரு மரண பட்டியலுக்கு பதிலாக உயிருள்ள நபர் இருக்கிறார். "ஆவிக்குரிய தாயிருக்கிறது; எழுத்து கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது" (2 கொரிந்தியர் 3:6).(அதிகாரம் 14 பார்க்க)

எனவே, கீழ்ப்படிவதற்கான புதிய வழி கனிகொடுப்பதே, நியாயப்பிரமாணத்தை கடைபிடிப்பது அல்ல என்று வேதம் கூறுகின் றது, "நீங்கள் மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொ ருவருடையவர்களாகி, தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி கிறிஸ் துவின் சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர் களானீர்கள்" (ரோமர் 7:4). நாம் சட்டத்தை கடைபிடிப்பதற்கு மரித்து, கனிகொடுப் பதற்கு உயிரடைந்தோம். கனி இயல்பாக மரத்திலே காய்க்கிறது. மரம் நல்லதாக இருந்தால் கனியும் நல்லதாக இருக்கும். இவ்விடத்தில் மரம் என்பது, இயேசு கிறிஸ்துவோடு உயிருள்ள உறவை கொண்டு இருப் பது தான். இதற்காக அவர் மரித்தார். நம்மை வரும்படி அழைக்கிறார். "என்னை நம்புங்கள்", அன்பின் கனியை கொடுக்கும்படி, சட்டத்துக்கு மரணம் அடையுங்கள்.

# நாம் நமக்கென்று பிழைத்திருக்காமல் கிறிஸ்துவுக்காக வாழும்படியாக

✞

*பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்.*
2 கொரிந்தியர் *5:15*

கிறிஸ்துவை உயர்த்த கிறிஸ்து மரித்தார் என்கிற சிந்தனை பலருக்கு கலக்கத்தை ஏற்படுத்துகின்றது. *2* கொரிந்தியர் *5:15*ன் கருத்தை நாம் கூர்ந்து நோக்கினால், நாம் அவருக்காக வாழவே கிறிஸ்து நமக்காக மரித்தார் என்பது தெரியும். வேறு வார்த்தைகளில் கூறினால், அவரை வைத்து நாம் அதிகமாக சாதிக்க அவர் நமக்காக மரித்தார். சாதாரணமாக கூறினால் கிறிஸ்து கிறிஸ்துவுக்காக மரித்தார்.

அது உண்மை. வார்த்தை விளையாட்டு அல்ல. பாவத்தின் அடிப்படையே நாம் கடவுளையும் அவர் மைந்தனையும் மகிமைப்படுத்த தவறிவிட்டோம் என்பது தான் ( ரோமர் *3:23*). ஆனால் நம்மை விடுதலையாக்க கிறிஸ்து நமக்காக மரித்தார். எனவே நம்முடைய பாவத்தினால் அவர்மீது குவித்து வைத்த அவமானங்களை அவர் சுமக்க மரணமடைந்தார். இதை தலை கீழாக மாற்ற அவர் மரித்தார். கிறிஸ்துவை மகிமைப்படுத்த கிறிஸ்து மரித்தார்.

இது வீண் வார்த்தையாக தோற்றம் அளிப்பதால் மக்களுக்கு இது கலக்கத்தை ஏற்படுத்துகின்றது. இது விரும்பத்தக்க காரியமாகவே தோற்றம் அளிக்கவில்லை. கிறிஸ்துவின் மரணம், அன்பின் உயரிய செயல் என்று வேதம் கூறுவதற்கு நேர்மாறானதாக தோற்றம் அளிக்கச் செய்கின்றது. உண்மையில் இரண்டுமே சரி தான். தன்னுடைய சொந்த மகிமைக்காக மற்றும் அன்பை காட்டுவதற்காக கிறிஸ்து மரித்தார் என்கிற இரண்டும் உண்மை மாத்திரம் அல்ல, இரண்டுமே ஒன்று தான்.

கிறிஸ்து தனித்தன்மை உடையவர். யாருமே இப்படி செயல்பட்டு அதை அன்பு என்று கூற முடியாது. அண்டசராசரங்களில் கடவுளாகவும் இருக்கிற, அளவற்ற மதிப்பையும் உடைய ஒரே மனிதர் இயேசு தான். அவருடைய எல்லா பூரண ஒழுக்கங்களோடும் அவரே அளவற்ற அழகு உடையவராக இருக்கிறார். அவர் அளவற்ற ஞானம், நீதி, நன்மை மற்றும் வலிமை உடையவர். "இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து, "( எபிரெயர் *1:3*). உலகம் கொடுக்கும் அனைத்தையும் பெற்றுக்கொள்வதை விடவும் அவரை பார்த்து அறிந்துகொள்வதே அதிக திருப்தி அளிக்கக்கூடியது.

*அவரை நன்கு அறிந்தவர் இப்படிச் சொன்னார் :*
*எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக்*
*கிறிஸ்துவுக்கு நஷ்டமென்று எண்ணினேன்.*
*அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை*
*அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும்*
*நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன். அவருக்காக*
*எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக*
*எண்ணுகிறேன். ( பிலிப்பியர் 3:7-8)*

"அவருக்காக பிழைத்து இருக்கும்படி கிறிஸ்து மரித்தார்" என்பது "அவருக்கு உதவிசெய்ய" என்று பொருட்படாது. "எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் (கடவுள்), தமக்கு யாதொன்று தேவையானதுபோல, மனுஷர் கைகளால் பணிவிடைகொள்ளுகிறதுமில்லை" (அப்போஸ்தலர் 17:25). கிறிஸ் துவும் அதை விரும்புவது இல்லை: "அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக்கொடுக்கவும் வந்தார்" (மாற்கு 10:45). அவருக்கு நாம் உதவி செய்வோம் என்று கிறிஸ்து மரிக்கவில்லை, மாறாக அதை பார்த்து நாம் அவருடைய அளவற்றை மதிப்பை உணர்வதற்காகவே மரித்தார். விஷத்தன்மை உடைய இன்பங்களில் இருந்து நம்மை காப்பாற்றி, அவருடைய அழகின் ஆனந்தத்தில் நம்மை திளைக்கச் செய்ய அவர் மரித்தார். இப்படி நாம் நேசிக்கப்பட்டு அவர் கனம் பண்ணப்படுகிறார். இவை முரண்பாடான குறிக்கோள்கள் அல்ல. அவை இரண்டுமே ஒன்று தான்.

பரிசுத்த ஆவியாகிய உதவியாளரை அனுப்புவதற்காக தான் செல்ல வேண்டும் என்று இயேசு தன் சீஷர்களிடம் கூறினார் ( யோவான் 16:7). உதவியாளர் வரும்போது அவர் என்ன செய்வார் என்பதையும் அவர் கூறினார், "அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்" (யோவான் 16:14). நாம் அவரை பார்த்து மகிமைப்படுத்தும்படி கிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்தார். உலகில் மிகச்சிறந்த உதவி இதுவே. இதுவே அன்பு. இயேசு ஜெபித்ததில் மிகவும் அன்பான ஜெபம் இதுவே : "பிதாவே, உலகத்தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந் தபடியினால், நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன்" (யோவான் 17:24). இதற்காகவே கிறிஸ்து மரித்தார். நித்திய மகிழ்ச்சியாகிய தன்னையே கொடுப்பதற்காக பாடுபட்டார், இதுவே அன்பு.

# நம்முடைய எல்லா பெருமைகளுக்கும் தன் சிலுவையே காரணமாக இருக்க

✞

*நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக; அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன்.*
*கலாத்தியர் 6:14*

இது மிகவும் அதிகப்படியாக தெரிகிறது. சிலுவையில் மாத்திரம் பெருமையா ! உண்மையாகவா? நிஜமாக சிலுவையில் மாத்திரமா? பெருமைப்படக்கூடிய வேறு காரியங்களை வேதமே கூறுகிறதே. கடவுளுடைய மகிமையில் பெருமை (ரோமர் 5:2). நம்முடைய உபத்திரவங்களிலே பெருமை (ரோமர் 5:3,4). நம்முடைய பெலவீனத்தில் பெருமை (2 கொரிந்தியர் 12:9). கிறிஸ்துவுடைய மக்களில் பெருமை (1 தெசலோனிக்கேயர் 2:19,20). சிலுவையைக் "குறித்தேயல்லாமல்" என்றால் என்ன?

மற்ற எல்லா மேன்மை பாராட்டுதல்களும் சிலுவையை சார்ந்தே இருக்க வேண்டும் என்பதே அதன் பொருள். மகிமையின் நம்பிக்கையின் மேல் நாம் பெருமைப்பட்டால், அதுவே கிறிஸ்துவின் சிலுவையின் மீது பெருமைப்படுவதாக இருக்க வேண்டும். நாம் கிறிஸ்துவின் மக்கள் மீது பெருமை பாராட்டினால் அதுவே சிலுவையில் பெருமைப்படுவதாக இருக்க வேண்டும். சிலுவையே எல்லா நியாயமான பெருமைக்கும் காரணமாக இருக்கும். நியாயமான பெருமையாக இருந்தால் அது சிலுவைக்கே கனத்தை கொடுக்க வேண்டும்.

ஏன்? எல்லா நல்ல காரியங்களும், நன்மையாக மாறிய தீய காரியங்களும் கிறிஸ்துவின் சிலுவையினாலேயே கிடைக்கின்றது. கிறிஸ்துவின் மீது நம்பிக்கை இல்லாமல், பாவிகள் நியாயத்தீர்ப்பை மட்டுமே அடைகிறார்கள். ஆம், அவிசுவாசிகளுக்கும் பல நன்மைகள் கிடைக்கின்றன. ஆனால் இந்த வாழ்க்கையின் இயற்கையான ஆசீர்வாதங்களும் இறுதியில் கடவுளுடைய தீர்ப்பின் கடுமையையே அதிகரிக்கும்.அவர்கள் கிறிஸ்துவின் பாடுகளின் அடிப்படையில் நன்றியோடு அவற்றை வாங்கிகொள்ளாத போது அப்படி சம்பவிக்கும் ( ரோமர் 2:4,5).

எனவே, கிறிஸ்துவை நம்புகிறவர்களாக நாம் அனுபவிக்கும் அனைத்து சந்தோஷங்களுக்குமே அவருடைய மரணமே காரணம். அவருடைய பாடுகள் பாவிகளுக்கு ஏற்புடைய தண்டனைகள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டது. மன்னிக்கப்பட்ட பாவிகள் அனுபவிக்கிற அனைத்து நன்மைகளை அது வாங்கியது. எனவே இந்த காரியங்களில் நம்முடைய பெருமைகள் அனைத்துமே கிறிஸ்துவின் சிலுவையில் பெருமைப்படுவதாக இருக்க வேண்டும். நாம் கிறிஸ்துவை மையமாகவும், சிலுவையை மேன்மையாகவும் வைத்திருப்பதில்லை. ஏனென்றால், எல்லா நன்மைகளும், கடவுள் நன்மைகளாக மாற்றிய தீமைகளும் கிறிஸ்துவின் பாடுகளினால் வாங்கப்பட்டது என்பதை நாம் யோசிப்பது இல்லை.

நாம் எப்படி முற்றிலும் சிலுவை சார்ந்தவர்களாக மாற முடியும்? கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது நாமும் அவரோடு மரித்தோம் என்கிற உண்மைக்கு நாம் விழித்துக்கொள்ள வேண்டும்.(அதிகாரம் 31 பார்க்க) . இது அப்போஸ்தலராகிய பவுலுக்கு நேர்ந்தபோது அவர் இப்படிச் சொன்னார் : "உலகம் எனக்குச் சிலுவையிலறையுண் டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன்" (கலாத்தியர் 6:14). கிறிஸ்துவை மையமாகக் கொண்ட பெருமைக்கு சிலுவையே முக்கிய காரணம்.

நீங்கள் கிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைக்கும்போது உலகத்தின் சக்திவாய்ந்த கவர்ச்சி உடைந்து போகிறது. நீங்கள் உலகத்துக்கு ஒரு பிணமாகவும், உலகம் உங்களுக்கு ஒரு பிணமாகவும் இருக்க வேண்டும். அல்லது நேர்மறையாக கூறினால், நீங்கள் ஒரு "புதிய படைப்பு" ( கலாத்தியர் 6:15). உங்களுடைய பழைய நபர் இறந்துவிட்டார். கிறிஸ்துவை விசுவாசிக்கிற புதிய நபராகிய நீங்கள் உயிரோடு இருக்கிறீர்கள். கிறிஸ்துவை எல்லாவற்றிற்கும் மேலாக பொக்கிஷமாக வைப்பதே இதன் அறிகுறி. உங்களுடைய அன்பை இழக்கச் செய்கிற உலகத்தின் சக்தி இறந்துபோனது.

உலகத்தின் நியாயமான சந்தோஷங்கள் அனைத்துமே இரத்தத்தினால் வாங்கப்பட்ட கிறிஸ்துவின் அன்பின் அடையாளமாக இருப்பதே உலகத்துக்கு மரிப்பது ஆகும். அது சிலுவையை மேன்மை பாராட்டும் நிகழ்வாகவும் அமையும். நம் இதயம், ஆசீர்வாதத்தின் ஒளியை பின்னோக்கி தொடர்ந்து சிலுவையை அடைந்தால், அந்த ஆசீர்வாதத்தில் இருக்கும் உலகதன்மை மரித்துவிடும். கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதே எல்லாமும் ஆகிவிடும்.

# அவர் மேல் உள்ள விசுவாசத்தினால் பிழைத்திருக்கச் செய்ய

✞

*கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன். எனவே இனி வாழ்பவன் நான் அல்ல; கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார். இறைமகன்மீது கொண்டுள்ள நம்பிக்கையின் அடிப்படையில் நான் இவ்வுலகில் வாழ்கிறேன். இவரே என்மீது அன்புகூர்ந்தார். எனக்காக தம்மையே ஒப்புவித்தார்.*

கலாத்தியர் 2:20 (பொது மொழிபெயர்ப்பு)

இவ்வசனத்தில் வெளிப்படையான புதிர் ஒன்று இருக்கிறது. "சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன்" ஆனால் "வாழ்கிறேன்". இது புதிராக இல்லை தொடர்ச்சியாக இருக்கிறது என்று நீங்கள் சொல்லலாம்; பின்பு அவரோடு உயிர்த்தெழுந்து நான் பிழைத்திருக்கிறேன் என்று நீங்கள் சொல்லலாம், உண்மைதான். ஆனால் இந்த நடைமுறையான வசனங்கள் மிகவும் புதிராக இருக்கின்றன: "இனி வாழ்பவன் நான் அல்ல" இருப்பினும் "நான் இவ்வுலகில் வாழ்கிறேன்". நான் வாழ்கிறேனா இல்லையா?

அவை முரண்பாடுகள் போல தோன்றினாலும் புதிர்கள் முரண் பாடுகள் அல்ல. மரணம் அடைந்த "நான்" என்பது உண்டு, வாழ்கின்ற மற்றொரு "நான்" உண்டு என்பதே பவுல் கூறவரும் கருத்து. கிறிஸ்தவராக மாறுவது என்றால் அது தான். பழைய சுயம் மரிக்கிறது. புதிய சுயம் "சிருஷ்டிக்கப்பட்டு" "எழுப்பப்படுகிறது". "ஒருவன் கிறிஸ் துவுக்குள்ளிருந்தால்புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2 கொரிந்தியர் 5:17). "அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்;அவரோடேகூட எழுப்பி னார்" (எபேசியர் 2:5-7).

நம்முடைய "பழைய சுயத்தை" அவரோடே கல்லறைக்கு எடுத்துச் சென்று அதற்கு ஒரு முடிவு பண்ணுவதே கிறிஸ்து மரிப்பதற்கான நோக்கம். "நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய் யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்" ( ரோமர் 6:6). நாம் கிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைத்திருந்தால், நம்முடைய பழைய சுயம் கிறிஸ்துவோடு மரித்ததாக கடவுள் கணக்கு வைத்திருப்பார். நம்முடைய புதிய சுயம் உயிர்ப்பிக்கப்படுவதற்கான நோக்கம் அது.

எனவே அந்த புதிய சுயம் யார்? இந்த இரண்டு சுயங்களுக்கும் உள்ள வித்தியாசம் என்ன? நான் இன்னும் நான் தானா? இந்த

அதிகாரத்தின் தொடக்கத்தில் இருக்கும் வசனம் புதிய சுயத்தை இரண்டு வழிகளில் விவரிக்கிறது: ஒன்று கற்பனைக்கு எட்டாதது; அடுத்தது நேரடியானது. முதலில், புதிய சுயம் கிறிஸ்து என்னில் வாழ்வதே என்கிறது: “வாழ்பவன் நான் அல்ல; கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார்”. புதிய சுயத்திற்கு கிறிஸ்துவின் பிரசன்னமும் உதவியும் எல்லா நேரத்திலும் கிடைக்கிறது என்னும் பொருளை நான் கொடுக்க விரும்புகிறேன். அவர் எனக்கு எப்போதுமே வாழ்வு கொடுக்கிறார். என்னை எதற்காக அழைத்தாரோ அதற்காக எனக்கு எப்போதும் பெலன் தருகிறார். அதனால் தான் வேதம் இப்படி கூறுகின்றது : “என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு” ( பிலிப்பியர் 4:13). “நான் எனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி போராடிப் பிரயாசப்படுகிறேன்” ( கொலோசெயர் 1:29). இறுதியாக புதிய சுயம் இப்படி கூறுகின்றது, “கிறிஸ்துவானவர் என்னைக்கொண்டு நடப்பித்தவைகளைச் சொல்வதல்லாமல் வேறொன்றையும் சொல்ல நான் துணிவதில்லை” ( ரோமர் 15:18).

முதலில் கலாத்தியர் 2:20 கூறும் சுயம் : கிறிஸ்து வாழும், கிறிஸ்து இயக்கும், கிறிஸ்து பெலப்படுத்தும் சுயம். இதை கொண்டுவரவே கிறிஸ்து மரித்தார். அதுவே ஒரு கிறிஸ்தவன். புதிய சுயத்தை குறித்த மற்ற பரிமாணம் : விநாடிக்கு விநாடி கிறிஸ்துவை நம்பியே வாழ்வது. “இறைமகன் மீது கொண்டுள்ள நம்பிக்கையின் அடிப்படையில் நான் இவ்வுலகில் வாழ்கிறேன். இவரே என்மீது அன்புகூர்ந்தார். எனக்காக தம்மையே ஒப்புவித்தார்”.

சுயம் குறித்த இந்த இரண்டாவது விளக்கம் இல்லாமல் கிறிஸ்துவின் தினசரி உதவிகளை அனுபவிக்க நாம் என்ன செய்ய வேண்டும் என்று யோசிக்க நேரிடும். இப்போது நம்மிடம் விசுவாசம் என்னும் பதில் இருக்கிறது. தெய்வீக பகுதியில், கிறிஸ்து நமக்குள் வாழ்கிறார், அவர் போதிக்கும் வழியில் நாம் வாழ அவர் உதவி செய்கிறார். ஆனால் நம்முடைய பகுதியில் அவர் நம்மோடு இருக்கவும், நமக்கு உதவிசெய்யவும், ஒவ்வொரு நொடியும் அவரை சார்ந்தே இருப்பதன் மூலம் அனுபவிக்கப்படுகின்றது. அவர் நம்மோடு இருப்பார், இதை செய்ய அவர் நமக்கு உதவுவார் என்பதே இது நிகழ அவர் மரித்தார் என்பதற்கான சாட்சி.

கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத் திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்.( கலாத்தியர் 2:20)

# திருமணத்திற்கு ஆழமான அர்த்தம் கொடுக்க

*புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து...*
எபேசியர் *5:25*

**கி**றிஸ்து அவருடைய மக்களை நேசிக்கிறபடி கணவன் தன் மனைவியை நேசிக்க வேண்டும். கிறிஸ்துவின் மக்கள் பதிலளிக்கும்படி மனைவி கணவனுக்கு பதிலளிக்க வேண்டும். திருமணத்திற்கு கடவுளுடைய வடிவமைப்பு குறித்த வேதாகம சித்தரிப்பு இதுவே. கிறிஸ்துவை உலகிற்கு அனுப்பும் போது கடவுளுடைய மனதில் இந்த சித்தரிப்பே இருந்தது. திருமணம் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாக கிறிஸ்து தன் மனைவிக்காக வந்து அவருக்காக மரித்தார்.

இல்லை, தங்கள் மனைவிகளிடம் கணவர்கள் பாடுபட வேண்டும் என்பது இந்த உவமையின் பொருள் அல்ல. ஒருவகையில் இயேசுவுக்கு அது நடந்தது என்பது உண்மை தான். தன் மனைவியை கொண்டு வருவதற்காக அவர் பாடுபட்டார். அதே மக்களும் அவரை துன்பப்படுத்தியவர்களுள் இருந்தார்கள். அவருடைய சீஷர்கள் அவரை நிராகரித்தது அவருக்கு அதிக கவலையை கொடுத்தது ( மத்தேயு 26:56). மரணம் வரை அவர்களை துரத்திவிடாமல் எப்படி நேசித்தார் என்பது தான் இந்த உவமையின் கருத்து.

ஆதாமும் ஏவாளும் இணைவதற்கும், கிறிஸ்து வருவதற்கும் முன்பே திருமணத்தை குறித்த யோசனை கடவுளிடம் இருந்தது. திருமணம் குறித்த ரகசியத்தை கிறிஸ்துவின் அப்போஸ்தலர் விளக்கும் போது, அவர் வேதாகமத்தின் தொடக்கம் வரை ஆராய்ந்து ஆதியாகமம் 2:24ஐ மேற்கோள் காட்டுகிறார், “புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்” . அடுத்த வாக்கியத்தில் அவர் மேற்கோள் காட்டியதை விளக்குகிறார் “இந்த இரகசியம் பெரியது; நான் கிறிஸ்துவைப்பற்றியும் சபையைப்பற்றியும் சொல்லுகிறேன்” ( எபேசியர் 5:31,32).

கிறிஸ்து தன்னுடைய மக்களோடு கொண்டுள்ள உறவை வெளிப்படுத்த, ஆதியில் கடவுளுடைய மனதில் திருமணம் வடிவமைக்கப்பட்டது என்பது இதன் பொருள். கிறிஸ்து வரும்வரை

திருமணத்திற்கான குறிக்கோள் தெளிவாக விளக்கப்படவில்லை. எனவே அது இரகசியம் என்று வழங்கப்படுகின்றது. கிறிஸ்துவின் அன்பை உலகிற்கு காண்பிப்பதே திருமணத்தின் நோக்கம் என்பதை நாம் காண்கிறோம்.

ஆதியில் இருந்து இது கடவுளுடைய மனதில் இருந்ததால், மரணம் அடையும்போது கிறிஸ்துவின் மனதிலும் இது இருந்தது. அவருடைய பாடுகளின் பல தாக்கங்களில் திருமணத்தின் ஆழமான அர்த்ததை வெளிப்படையாக தெரிவிப்பதும் ஒன்று என்பது அவருக்கு தெரியும். அவருடைய பாடுகள் அனைத்தும், ஒவ்வொரு கணவனும் தன் மனைவியை எப்படி நேசிக்க வேண்டும் என்பதை தெரிவிக்கவே கிறிஸ்து பாடுபட்டார்.

ஆரம்பத்தில் கடவுள் திருமணங்கள் மோசமாக இருக்க வேண்டும் என்று திட்டமிடாவிட்டாலும் பல திருமணங்கள் மோசமாகவே இருக்கின்றன. பாவம் அதை தான் செய்கிறது. ஒருவரை ஒருவர் மோசமாக அது நடத்த வைக்கிறது. அதை மாற்றுவதற்காக கிறிஸ்து பாடுபட்டு மரித்தார். இந்த மாற்றத்தில் மனைவிகளுக்கும் பங்கு உண்டு. கணவர்களுக்கு கடவுள் ஒரு சிறப்பான பொறுப்பை கொடுக்கிறார். அதனால் தான் வேதம் இப்படி கூறுகின்றது, “புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து...தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்” ( எபேசியர் *5:25-27*).

கணவர்கள் கிறிஸ்து அல்ல. ஆனால் அவர்கள் அவரைப் போல் இருக்க அழைக்கப்பட்டு இருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட எல்லை வரை மனைவியின் நன்மைக்காக மனைவியை பயமுறுத்தாமல், திட்டாமல் அவருக்காக பாடுபட தயாராக இருப்பதே கிறிஸ்துவைப் போல இருப்பது ஆகும். அப்பெண்ணை தாக்க வரும் வெளிப்புற சக்திகள் இடம் இருந்து அவரை காப்பாற்றுவதும் இதில் அடங்கும். அவரிடம் இருந்து ஏமாற்றங்களையும் சில நேரங்களில், கடிந்து கொள்ளுதல் களையும் பெற்றுக்கொள்வதும் இதில் சேரும். கிறிஸ்து கணவர்களுக் காகவும் மனைவிகளுக்காகவும் மரித்ததினால் இப்படிப்பட்ட அன்பு சாத்தியம். அவர்களுடைய பாவங்கள் இருவருமே மற்றவரை பாடுபட வைக்க தேவை இல்லை. அந்த பாடுகளை கிறிஸ்து சகித்துவிட்டார். இப்போது இரண்டு மன்னிக்கப்பட்ட மக்களாக நாம் தீமைக்கு நன்மை செய்யலாம்.

# நற்செயல்கள் செய்ய பக்திவைராக்கியம் உள்ளவர்களை உருவாக்க

✞

*அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்.*
*தீத்து 2:14*

**நா**ம் நற்பணிகள் செய்ததினால் நாம் மன்னிக்கப்பட்டு கடவுளால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மாறாக நாம் நற்பணிகளை செய்வதற்காக அப்படி நடந்தது என்பதே கிறிஸ்தவத்தின் மைய கருத்து. வேதம் "அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சிக்காமல்" என்கிறது( 2 தீமோத்தேயு 1:9). நற்செயல்கள் நாம் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான அஸ்திபாரம் அல்ல, ஏற்றுக் கொள்ளப்படுவதனால் நாம் கொடுக்கும் கனிகள். நாம் நற்பணிகளை அவருக்கு கொடுத்ததினால் கிறிஸ்து பாடுபட்டு மரிக்கவில்லை, மாறாக "நற்கிரியைகளைச் செய்ய பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி" அவர் மரித்தார் ( தீத்து 2:14).

இதுவே கிருபையின் அர்த்தம். நம்முடைய நற்பணியினால் நாம் கடவுளுக்கு முன்பாக நிற்க முடியாது. கிருபை என்பது இலவச பரிசு. நம்முடைய பெரிய பொக்கிஷமாக எண்ணி, அதை நாம் விசுவாசத்தினால் மாத்திரமே வாங்கிக் கொள்ள முடியும். இதனால் தான் வேதம் இப்படி சொல்கிறது, "கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல" ( எபேசியர் 2:8,9). நற்பணிகள் விளைவிக்கும் என்பதற்காக கிறிஸ்து பாடுபட்டு மரித்தார். நாம் நற்பணி செய்ததால் ஏற்றுக் கொள்ளப்படுவது இல்லை.

ஆச்சரியப்படும் விதமாக அடுத்த வாக்கியம் இப்படி சொல்கிறது, "நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு" என்கிறது( எபேசியர் 2:10). அதாவது நாம் நற்செயலுக்காக இரட்சிக்கப்பட்டோம், நற்செயலினால் இரட்சிக்கப்படவில்லை. கிறிஸ்துவின் குறிக்கோள் அதை செய்வதற்கான திறமையை மாத்திரம் அல்ல, அதை செய்வதற்கான வைராக்கியத்தை ஏற்படுத்துவதே. அதனால் தான் வேதம் "பக்திவைராக்கியம்"

என்கிற வார்த்தையை பயன்படுத்துகின்றது. நற்செயல்களை சாத்தியப்படுத்தவோ அல்லது அரை மனதான முயற்சிக்காகவோ கிறிஸ்து மரிக்கவில்லை. நற்செயலுக்கான வைராக்கியத்தை உருவாக்க அவர் மரித்தார். தீமையை நீக்குவதோடு நன்மை செய்ய முயற்சிப்பதும் தான் கிறிஸ்தவ பரிசுத்தம்.

நம்முடைய நற்செயலுக்கான வைராக்கியத்தை உருவாக்க இயேசு அளவற்ற விலையை செலுத்தியதற்கு காரணங்கள் இருக்கின்றன. இந்த வார்த்தைகளில் அவர் முக்கிய காரணத்தை கொடுக்கிறார் : “மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக்கண்டு, பரலோகத் திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது” ( மத்தேயு 5:16). கிறிஸ்தவர்களின் நற்கிரியைகள் மூலமாக கடவுள் மகிமையுள்ளவர் என்பதை காண்பிக்க முடிகிறது. அந்த மகிமைக்காகவே கிறிஸ்து பாடுபட்டு மரித்தார்.

பெருமை மற்றும் பேராசையில் இருந்து கடவுளின் மன்னிப்பும் ஏற்றுக்கொள்ளுதலும் நம்மை விடுதலை ஆக்குகின்றது. அதனால் நாம் நேசிக்கப்பட்ட விதத்தில் மற்றவர்களை நேசிக்க நாம் பக்திவைராக் கியத்தினால் நிறைகிறோம். நாம் கிறிஸ்துவில் பாதுகாப்பாக இருப்பதால் நம்முடைய உயிரையும் உடமைகளையும் இழக்க தயாராகிறோம். மனித சுய முன்னேற்றம் மற்றும் சுய பாதுகாப்புக்கு எதிராக நம்முடைய பழக்கங்கள் இருப்பதற்கு, நாம் மற்றவர்களை நேசிப்பது காரணமாக இருக்கிறது. எனவே கடவுள் என்னும் வாழ்க்கையை மாற்றும் பொக்கிஷம் மற்றும் பாதுகாப்புக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

இந்த “நற்கிரியைகள்” என்னென்ன? அதன் எல்லையை குறைத் துக்கொள்ளாமல், அவசர தேவையில் குறிப்பாக ஏழ்மையில் அதிகமாக துன்பப்படுகிறவர்களுக்கு உதவுவதை வேதம் முக்கியப் படுத்துகின்றது. எடுத்துக்காட்டாக வேதம் இப்படி கூறுகின்றது, “நம்முடையவர்களும் கனியற்றவர்களாயிராதபடி குறைவுகளை நீக்குகிறதற்கேதுவாக நற்கிரியைகளைச் செய்யப்பழகட்டும்” ( தீத்து 3:14). ஏழைகளுக்கும் அழிந்துகொண்டு இருக்கிறவர்களுக்கும் உதவ வைராக்கியம் உள்ளவர்களாக நம்மை மாற்ற கிறிஸ்து மரித்தார். இவ்வுலகத்தில் இதற்காக நாம் எதை இழந்தாலும், இதுவே சிறந்த வாழ்க்கை: அவர்களுக்கு உதவி கிடைக்கிறது, நமக்கு மகிழ்ச்சி கிடைக்கிறது, கடவுளுக்கு மகிமை கிடைக்கிறது.

# 37

# தாழ்மையிலும் விலையேறப்பெற்ற அன்பிலும் தம் எடுத்துக்காட்டை நாம் பின்பற்ற அழைப்பதற்காக

✞

*ஏனெனில், தேவன்மேல் பற்றுதலாயிருக்கிற மனச்சாட்சியினிமித்தம் ஒருவன் அநியாயமாய்ப் பாடுபட்டு உபத்திரவங்களைப் பொறுமையாய்ச் சகித்தால் அதுவே பிரீதியாயிருக்கும்... இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்.*
1 பேதுரு *2:19-21*

*நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள். பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தஞ்சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்துநிற்கவில்லையே.*
எபிரெயர் *12:3,4*

*கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.*
பிலிப்பியர் *2:5-8*

**பி**ன்பற்றுவது இரட்சிப்பு ஆகாது. ஆனால் இரட்சிப்பு பின்பற்றுதலை கொண்டு வரும். முதல் மாதிரியாக கிறிஸ்து நமக்கு கொடுக்கப் படவில்லை, இரட்சகராக கொடுக்கப்பட்டார். ஒரு விசுவாசியின் அனுபவத்தில், முதலில் கிறிஸ்துவின் மன்னிப்பும், பின்பு கிறிஸ்துவின் மாதிரியும் இடம்பெறுகின்றன. கிறிஸ்துவின் அனுபவத்தில் இவை இரண்டும் இணைந்து நிகழ்கின்றன: நம்முடைய பாவங்களை மன்னிக்கும் பாடுகள், அன்பின் மாதிரியை கொடுக்கின்றன.

நாம் கிறிஸ்துவின் மன்னிப்பை அனுபவித்தால் மாத்திரமே அவர் நமக்கு முன் மாதிரியாக மாற முடியும். அவருடைய பாடுகள் தனித்தன்மை வாய்ந்தவை என்பதால் இது தவறு போல தோன்றலாம். அவற்றை நாம் பின்பற்ற முடியாது. கிறிஸ்துவை போல "நமக்காக" பாடுபடுகிறவர் தெய்வ மைந்தன் மாத்திரமே. வேறு யாரும் பின்பற்ற முடியாதவாறு அவர் நமது பாவங்களை சுமந்தார். அவர் நமக்கு பதிலாக

பாடுபட்டவர். அதை நாம் திரும்ப செய்ய முடியாது. அநீதிக் காரருக்காக நீதிபரர் ஒரேதரம் பாடுபட்டார். பாவிகளுக்காக அவர் பட்ட தெய்வீக பாடுகளை திரும்ப செய்ய வாய்ப்பு இல்லை.

எனினும், பாவிகளை மன்னித்து, நீதிமான்களாக்கிய பிறகு இந்த தனித்துவம் வாய்ந்த பாடுகள், மக்களை இயேசுவைப் போல செயல்பட வைக்கின்றது. அவரை போல நேசிக்க வைக்கிறது, மன்னிக்க வைக்கிறதில்லை. மற்றவர்களுக்கு நன்மை செய்ய பாடுபட வைக்கிறது. தீமைக்கு தீமை செய்யாமல் இருக்கச் செய்கிறது. தாழ்மையிலும் , எளிமையிலும் அவரைப்போல இருக்கச் செய்கிறது. நீடிய பொறுமையுடன் இருக்கச் செய்கின்றது. அவரைப்போல பணிவிடை செய்ய வைக்கிறது. அன்பிற்காக நாம் அவரோடு பாடுபடுவதற்காக இயேசு நமக்காக தனித்தன்மையோடு பாடுபட்டார்.

முதலில் விசுவாசத்தினால் கிறிஸ்துவின் நீதியையும், பின்பு பாடுகளினால் அவருடைய ஊழியத்தையும் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று கிறிஸ்துவின் அப்போஸ்தலராகிய பவுல் தன்னுடைய லட்சியத்தைக் கூறியுள்ளார். "நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத் திக்கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் ... அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி" ( பிலிப்பியர் 3:9-10). நீதிமானாக்கப்படுதல் முன்பு வந்து பின்பற்றுதலை சாத்தியம் ஆக்குகின்றது. நீதிமான்கள் ஆக்குவதற்காக கிறிஸ்து பட்ட பாடுகள், அதை அறிக்கையிட பாடுபட நமக்கு உதவுகின்றது. நாம் பிறருக்காக பாடுபடுவது கடவுளுடைய கோபாக்கினையை நீக்கிவிடாது. அது கிறிஸ்துவின் பாடுகளினால் கடவுளுடைய கோபாக்கினை நீக்கப் பட்டதன் மதிப்பை வெளிப்படுத்தும். அது மக்கள் அவரை பார்க்கும்படி செய்யும்.

"தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் கிறிஸ்து இயேசுவினால் உண்டான இரட்சிப்பை நித்திய மகிமையோடே பெற்றுக் கொள் ளும்படி, சகலத்தையும் அவர்கள் நிமித்தமாகச் சகிக்(க)" வேதம் நமக்கு அழைப்பு கொடுக்கிறது ( 2 தீமோத்தேயு 2:10). கிறிஸ்துவை நாம் பின்பற்றுவது இரட்சிக்ககூடிய அவரிடமே அவர்களை கொண்டுசெல் லும். நாம் பாடுபடுவது முக்கியம், ஆனால் கிறிஸ்துவின் பாடுகள் மாத்திரமே இரட்சிக்கும். எனவே, நாம் அவருடைய அன்பை பின்பற்றுவோம், அவர் இடத்தை எடுத்துக்கொள்ளாமல் இருப்போம்.

# 38

# சிலுவையில் அறையப்பட்ட ஒரு சீஷர் குழுவை உருவாக்க

✞

*பின்பு அவர் எல்லாரையும் நோக்கி: ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்.*
லூக்கா *9:23*

*தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல.*
மத்தேயு *10:38*

கல்வாரி பாதையில் புரட்சியாளர்களை உருவாக்க கிறிஸ்து மரித்தார். அவர் சிலுவையில் அறையப்பட்ட மலையின் பெயரே கல்வாரி. அவருடைய வாழ்க்கை பாதை ஒரு நாள் அவரை அங்கு கொண்டு செல்லும் என்பதை அறிந்து இருந்தார். சொல்லப்போனால், அங்கு செல்ல அவர் தம் “முகத்தைத்திருப்பி(னார்)” (லூக்கா *9:51*). அவர் மரணம் அடைய வேண்டும் என்கிற பணியை எதுவும் தடை செய்யாது. அது எப்போது அங்கு சம்பவிக்க வேண்டும் என்பதை அறிந்து இருந்தார். அவர் எருசலேமுக்குச் செல்லும் வழியில் ஏரோது மன்னனுடைய அபாயம் இருக்கிறது என்று ஒருவர் எச்சரித்தபோது அதை அவர் கண்டித்தார். கடவுளுடைய திட்டத்தை ஏரோது குலைத்துவிட முடியாது என்றார். “நான் இன்றைக்கும் நாளைக்கும் பிசாசுகளைத் துரத்தி, வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்கி, மூன்றாம்நாளில் நிறைவடைவேன்...நான் சொன்னதாக, நீங்கள் போய் அந்த நரிக்குச் சொல்லுங்கள்” என்றார் ( லூக்கா *13:32*). எல்லாம் திட்டப்படி நடந்துகொண்டு இருந்தது. கடைசியில் முடிவு வந்தபோது அவர் மரணம் அடைவதற்கு முந்தைய நாள் இரவிலே அவரை கைது செய்தார்கள். அவர்களிடம் இயேசு இதை கூறினார், “தீர்க்கதரிசிகள் எழுதியிருக்கிற வசனங்கள் நிறைவேறும்படி இவைகளெல்லாம் சம்பவிக்கிறது என்றார்”( மத்தேயு *26:56*).

ஒருவகையில் கல்வாரி பாதையில் தான் அனைவரும் இயேசுவை சந்திக்கிறோம். அவர் அப்பாதையிலே நடந்து, மரித்து, உயிர்த்து, இப்போது பரலோகத்திலே ஆட்சிசெய்து, மீண்டும் வருவார் என்பது உண்மை தான். ஆனால் இன்று இயேசு ஒரு நபரை சந்திக்கும்போது அது சிலுவைக்கு அழைத்துச் செல்லும் கல்வாரி பாதையில் தான். கல்வாரி பாதையில் ஒவ்வொரு முறையும் யாரையாகிலும் அவர் சந்திக்கும்போது, அவர் இப்படி சொல்கிறார் : “ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்”

( லூக்கா 9:23). கிறிஸ்து சிலுவைக்கு சென்றபோது, அவரை பின்பற்றும் பெரும் திரளான விசுவாசிகளை அழைத்துக்கொள்ள வேண்டும் என்பதே அவருடைய நோக்கம்.

இயேசு மீண்டும் மரிக்க வேண்டும் என்பது இதன் நோக்கம் அல்ல, நாம் மீண்டும் மரிக்க வேண்டும். நாம் சிலுவையை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அவர் சொல்லும்போது, வந்து மரணம் அடையுங்கள் என்கிறார். சிலுவை என்பது கொடூரமான மரணத்தின் இடம். இயேசுவின் காலத்தில் சிலுவையை ஒரு நகையாக அணிந்து கொள்வதை யோசிக்க முடியாது. ஒரு சிறிய மின்சார நாற்காலி அல்லது தூக்கு கயிற்றை அணிந்துகொள்வதைப் போல அது இருந்திருக்கும். அவருடைய வார்த்தைக்கு தீவிர தாக்கம் இருந் திருக்கும் : "தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற் றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல" ( மத்தேயு 10:38).

இன்று அந்த வார்த்தைகள் உணர்வுள்ளதாக இருக்கின்றன. நான் இயேசுவை இரட்சகராகவும் கடவுளாகவும் பின்பற்றும்போது, என்னுடைய பழைய சுய தீர்மானம் செய்யும், சுய ஏற்றுக்கொள்ளுதல் செய்யும் சுயம் சிலுவையில் அறையப்படும் என்று அர்த்தம் அடைகின்றது. அனுதினமும் நான் பாவத்துக்கு மரித்து கடவுளுக்கு பிழைத்து இருப்பதை யோசிக்க வேண்டும். இதுவே வாழ்வின் பாதை : "நீங்களும், உங்களை பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத் திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்" ( ரோமர் 6:11).

ஆனால் கல்வாரி பாதையில் புரட்சியாளர் என்பதற்கு அதிக அர்த்தம் இருக்கிறது. அவருடைய நிந்தையை சுமக்க நாம் தயாராக இருப்போம் என்பதனால் இயேசு மரித்தார் என்பது அதன் பொருள். "இயேசுவும் நகர வாசலுக்குப் புறம்பே பாடுபட்டார்...ஆகையால், நாம் அவருடைய நிந்தையைச் சுமந்து, பாளயத்துக்குப் புறம்பே அவரிடத்திற்குப் புறப்பட்டுப் போகக்கடவோம்" ( எபிரெயர் 13:12-13). நிந்தையை மாத்திரம் சுமப்பது அல்ல தேவைப்பட்டால் இரத்த சாட்சியாகவும் மரிக்க வேண்டும். கிறிஸ்துவை பின்பற்றும் சிலரை வேதம் இப்படி சித்தரிக்கிறது : "மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை [சாத்தானை] ஜெயித்தார்கள்" (வெளிப்படுத்தின விசேஷம் 12:11). அவருடைய இரத்தத்தின் மீது உள்ள விசுவாசத்தினால் நம்முடைய இரத்தத்தை சிந்தி நாம் சாத்தானை வெல்ல வேண்டும் என தெய்வ ஆட்டுக்குட்டி தன் இரத்தத்தை சிந்தினார். இயேசு நம்மை கல்வாரி பாதைக்கு அழைக்கிறார். அது கடினமான நல்ல வாழ்க்கை. வாருங்கள்.

# 39
# மரண பயத்தின் அடிமைத்தனத்தில் இருந்து நம்மை விடுவிக்க

*ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற் குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார்.* எபிரெயர் *2:14,15*

இயேசு பிசாசை கொலைபாதகன் என்றார். "அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷகொலைபாதகனாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்தில் லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை; அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய்பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்" ( யோவான் *8:44*). ஆனால் கொலைசெய்வதில் அவனுடைய முக்கிய ஆர்வம் இல்லை. குற்றப்படுத்துவதே முக்கியம். பாடுபடும் பரிசுத்தவான்களை கிண்டல்செய்து, நரகத்தின் கொடூரத்தை மறைத்து, அவனை பின்பற்றுகிறவர்கள் மகிழ்ச்சியாகத் தோன்றுகிற நீண்ட வாழ்வை வாழவேண்டும் என்று விரும்புகிறான்.

மனிதர்களை குற்றப்படுத்துவதற்கான சக்தி அவனிடத்தில் இல்லை; மாறாக அவன் ஊக்கப்படுத்தும் பாவங்களிலும், அவன் கூறுகின்ற பொய்களிலும் இருக்கின்றன. மன்னிக்கப்படாத பாவம் மட்டுமே எவரையும் குற்றப்படுத்தக்கூடிய ஒரே காரியம். சாபங்கள், பில்லி சூனியங்கள், மந்திரங்கள், தந்திரங்கள், இவை எதுவும் ஒரு மனிதனை நரகத்துக்குள் கொண்டு செல்லாது. அவை பிசாசின் மணியோசைகளும், குழலோசைகளுமே. நம்மை ஏமாற்றுவதே அவனுடைய ஒரே மரணத்திற்கு உரிய ஆயுதம். கிறிஸ்துவை போற்றுவதை விட தன்னை போற்றுவதும், நீதிக்கு பதிலாக பாவம் மேன்மையானது என்பதுமே அவனுடைய பொய்களில் பிரதான மானவை. அந்த ஆயுதம் அவன் கையில் இருந்து எடுத்துக் கொள்ளப் பட்டால், அவனுக்கு நித்திய மரணத்தின் சக்தி இல்லாமல் போய்விடும்.

அந்த ஆயுதத்தை சாத்தானின் கையில் இருந்து பிடுங்கவே கிறிஸ்து வந்தார். இதற்காக கிறிஸ்து நம்முடைய பாவங்களை சுமந்து, அவற்றுக்காக பாடுபட்டார். இனி சாத்தான் அதை பயன்படுத்தி நம்மை

அழிக்க முடியாது. எரிச்சலூட்ட முடியுமா? ஆம். கிண்டல் செய்ய முடியுமா? ஆம். குற்றப்படுத்த முடியுமா? இல்லை. நமக்கு பதிலாக கிறிஸ்து அந்த சாபத்தை ஏற்றுக்கொண்டார். சாத்தான் முயற்சிப்பான், ஆனால் அவனால் நம்மை அழிக்க முடியாது. கடவுளுடைய கோபம் நீக்கப்பட்டது. அவருடைய கிருபையே நம்முடைய கேடயம். சாத்தான் நமக்கு எதிராக வெற்றி பெற முடியாது.

இந்த விடுதலையை நிறைவேற்ற கிறிஸ்து மனித ரூபம் எடுத்தார். அது இல்லாமல் அவரால் மரணத்தை அனுபவிக்க முடியாது. தெய்வ மைந்தனின் மரணம் மாத்திரமே சாவின் சக்தியை உடையவனை அழிக்க முடியும். எனவே வேதம் இதை கூறுகின்றது, "ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் [மனித இயல்பு] உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் [மனித இயல்பு] உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும் படிக்கும்" ( எபிரெயர் 2:14).

கிறிஸ்து இதை செய்வதற்கான நோக்கம் பயத்தில் இருந்து விடுதலை அளிப்பதே. "ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும்" அவருடைய மரணம் விடுதலை செய்தது. (எபிரெயர் 2:15). மரணம் பயம் அடிமைப்படுத்தும். அது நம்மை சோர்ந்துபோகவும், இளைக்கவும் செய்யும். நம்மை விடுதலை செய்ய இயேசு மரித்தார். மரண பயம் சுய தியாகத்தின் செயலினால் அழிக்கப்பட்டபோது, ஆர்வமற்ற, சுய பாதுகாப்பு உடைக்கப்பட்டது. நம்முடைய உயிரையும் கொடுத்து கிறிஸ்துவை போல நேசிக்க நாம் விடுதலை செய்யப்படுகிறோம்.

சாத்தான் நம்முடைய உடலை அழிக்கலாம், ஆனால் நம்முடைய ஆத்துமாவை இனி அவன் அழிக்க முடியாது. அது கிறிஸ்துவிடம் பாதுகாப்பாக இருக்கிறது. ஒரு நாள் நம்முடைய இறந்த உடலும் உயிர்பிக்கப்படும். : "கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்" ( ரோமர் 8:11). எல்லாரையும் விட நாமே சுதந்திரமானவர்கள். இந்த சுதந்திரத்தின் அர்த்தத்தை வேதம் தெளிவாக கூறுகின்றது : "சகோதரரே, நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள், இந்தச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல், அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள்" ( கலாத்தியர் 5:13).

# மரித்தவுடன் அவரோடு நாம் இருப்பதற்காக

✞

*நாம் விழித்திருப்பவர்களானாலும் நித்திரையடைந்தவர்களானாலும், தம்முடனேகூட நாம் ஏகமாய்ப் பிழைத்திருக்கும்படி அவர் நமக்காக மரித்தாரே.*
1 தெசலோனிக்கேயர் 5:10

*கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம். ஏனெனில் இவ்விரண்டினாலும் நான் நெருக்கப்படுகிறேன், தேகத்தைவிட்டுப்பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு, அது அதிக நன்மையாயிருக்கும்.*
பிலிப்பியர் 1:21,23

*நாம் தைரியமாகவேயிருந்து, இந்தத்தேகத்தை விட்டுக் குடிபோகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம்.*
2 கொரிந்தியர் 5:8

**ந**ம்முடைய சரீரங்களை தீயவையாக வேதம் பார்க்கிறது இல்லை. மற்ற கிரேக்க மதங்கள் சந்தோஷமாக இழக்கக்கூடிய சுமையாக உடலை பார்க்கின்றனர். கிறிஸ்தவம் அப்படி பார்ப்பது இல்லை. மரணம் ஒரு எதிரி. நம்முடைய சரீரம் மரிக்கும்போது நாம் விலையுயர்ந்த ஒன்றை இழக்கிறோம். கிறிஸ்து உடலுக்கு எதிராக அல்ல, உடலுக்கு ஆதரவாக இருக்கிறார். வேதம் இதில் தெளிவாக இருக்கிறது : "சரீரமோ வேசித்தனத்திற்கல்ல, கர்த்தருக்கே உரியது; கர்த்தரும் சரீரத்திற்கு உரியவர்" ( 1 கொரிந்தியர் 6:13). அற்புதமான வாக்கியம், கர்த்தரும் சரீரத்திற்கு உரியவர் !

ஆனால் உடல் இல்லாமல் உயிரும், மனசாட்சியும் இல்லை என்று நாம் சொல்ல கூடாது. வேதம் அப்படி போதிப்பது இல்லை. சரீரத்தை மீட்பதற்காக மாத்திரம் கிறிஸ்து மரிக்கவில்லை. உடல் இல்லாமலும் நாம் அவரோடு இருப்பதற்காக ஆத்துமாவையும் நெருக்கமாக கட்டுவதற்காக கிறிஸ்து மரித்தார். வாழ்விலும், மரணத்திலும் இது பெரிய ஆறுதல். இந்த நம்பிக்கையை நாம் அனுபவிக்கவே கிறிஸ்து மரித்தார்.

ஒருபுறம், ஆத்துமாவை நிர்வாணம் செய்வதாக சரீரத்தை இழப்பது இருக்கிறது என்று வேதம் கூறுகின்றது : "இந்தக் கூடாரத் திலிருக்கிற நாம் பாரஞ்சுமந்து தவிக்கிறோம்; இந்தப் போர்வையைக் களைந்துபோடவேண்டுமென்று விரும்பாமல்... போர்வை தரித்தவர் களாயிருக்கவேண்டுமென்று விரும்புகிறோம்" ( 2 கொரிந்தியர் 5:4).

வேறு வகையில், நம்முடைய சரீரம் கல்லறையில் இருக்கும் நேரம் இல்லாமல், நாம் நேரடியாக இங்கு இருந்து உயிர்த்தெழுந்த சரீரத்துக்குச் செல்வோம். கிறிஸ்து பரலோகத்தில் இருந்து திரும்பி வரும்போது உயிரோடு இருக்கிறவர்கள் அதை தான் அனுபவிப்பார்கள்.

நம்முடைய ஆத்துமா பரலோகத்திலும், நம்முடைய சரீரம் கல்லறையிலும் இருக்கிற இடைப்பட்ட நேரத்தை வேதாகமம் கொண்டாடுகின்றது. இது இறுதி மகிமை அல்ல, ஆனால் இது மகிமையாக இருக்கிறது. "கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" என்று நாம் வாசிக்கிறோம் ( பிலிப்பியர் 1:21). "ஆதாயம்"? ஆம் உடலை சிறிது காலம் இழப்பது ஆதாயமே. ஒரு வகையில் "போர்வையை களைந்து போடுவது" ஆனால் எல்லாவற்றை காட்டிலும் ஆதாயமே அதிகம். ஏன்? கிறிஸ்தவர்களுக்கு மரணம் என்பது கிறிஸ்துவின் வீட்டிற்கு வருவது. அப்போஸ்தலராகிய பவுல் இப்படி கூறுகின்றார் : "தேகத்தைவிட்டுப்பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு, அது அதிக நன்மையாயிருக்கும்" ( பிலிப்பியர் 1:23).

"அதிக நன்மையாயிருக்கும்" எல்லா வகையிலும் சிறந்ததாக அல்ல. சரீரம் ஆரோக்கியத்தோடும் மகிமையோடும் எழுப்பப்படும் காலம் ஒன்று வரும். ஆனாலும், இது "அதிகம் நன்மையாயிருக்கும்". கிறிஸ்துவோடு அதிக நெருக்கமாக, வீட்டில் இருப்பதை போல இருப்போம். எனவே ஆதி கிறிஸ்தவர்கள், "நாம் தைரியமாகவேயிருந்து, இந்தத்தேகத்தை விட்டுக் குடிபோகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம்" (2 கொரிந்தியர் 5:8) என்றார்கள். கிறிஸ்துவை நம்புகிறவர்கள் மரித்தவுடன் இல்லாமல் போய்விடுவது கிடையாது. நாம் "ஆத்தும உறக்கம்" என்பதற்கு உள்ளும் செல்வது இல்லை. நாம் கிறிஸ்துவிடம் செல்வோம். நாம் "குடிபோவோம்". அது "அதிக நன்மையாயிருக்கும்". அது "ஆதாயம்".

கிறிஸ்து பாடுபட்டதற்கு இது ஒரு மகத்துவமான காரணம். "நாம் விழித்திருப்பவர்களானாலும் நித்திரையடைந்தவர்களானாலும், தம்முடனேகூட நாம் ஏகமாய்ப் பிழைத்திருக்கும்படி அவர் நமக்காக மரித்தாரே" ( 1 தெசலோனிக்கேயர் 5:10). உறங்குவதை போல சரீரம் கல்லறையில் இருக்கும். ஆனால் நாம் பரலோகத்தில் கிறிஸ்துவோடு இருப்போம். இது நம்முடைய இறுதி நம்பிக்கை கிடையாது. ஒரு நாள் நம்முடைய சரீரம் உயிர்ப்பிக்கப்படும். ஆனால் அதற்கு முன்பாக, கிறிஸ்துவோடு இருப்பது வார்த்தையால் விவரிக்க முடியாத விலையேறப்பெற்றது.

# 41

## மரணத்தில் இருந்து நம்முடைய உயித்தெழுதலை பாதுகாக்க

✞

*ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்.* ரோமர் *6:5*

*அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்.* ரோமர் *8:11*

*இந்த வார்த்தை உண்மையுள்ளது; என்னவெனில், நாம் அவரோடேகூட மரித்தோமானால், அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம்.* 2 தீமோத்தேயு *2:11*

மரணத்தின் சாவிகள் கிறிஸ்துவின் கல்லறையின் உள்ளே தொங்கிக்கொண்டு இருந்தன. வெளிப்படையாக கிறிஸ்து பல அற்புதமான காரியங்களை செய்ய முடிந்தது. அதில் பன்னிரண்டு வயது சிறுமியையும், இரண்டு பேரையும் உயிரோடு எழுப்பியதும் அதில் அடங்கும். அவர்கள் மீண்டும் ஒருநாள் இறந்துபோயிருப்பார்கள் ( மாற்கு *5:41,42*; லூக்கா *7:14,15* ; யோவான் *11:43,44*). மீண்டும் மரணம் அடையாமல் யாராகிலும் உயிர்ப்பிக்கப்பட வேண்டும் என்றால், கிறிஸ்து அவர்களுக்காக மரித்து, கல்லறைக்குச் சென்று, சாவிகளை எடுத்து, உள்ளே இருந்து மரணத்தின் கதவுகளை திறக்க வேண்டும்.

இயேசுவின் உயிர்த்தெழுதல் ஒரு பரிசு. அவருடைய மக்களின் பாவத்தையும், கடவுளுடைய கோபத்தையும் அது முற்றிலும் நீக்கியது என்பதன் சாட்சி. “ஆதலால்” என்கிற வார்த்தையில் இதை நீங்கள் காணலாம். கிறிஸ்து “ மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி(னார்)” (பிலிப்பியர் *2:8,9*). சிலுவையில் இருந்து தெய்வ மைந்தன் இப்படி கதறினார், “முடிந்தது” ( யோவான் *19:30*). உயிர்த்தெழுதலின் மூலமாக கடவுள், “அது உண்மையாகவே முடிந்தது” என்று கதறுகிறார். நம்முடைய பாவத்திற்கு விலை செலுத்தி, நம்முடைய நன்மைக்கு தேவையானதை கொடுத்து, கடவுளுடைய நீதியை நிறைவேற்றுவது ஆகிய மகத்துவமான வேலை இயேசுவின் மரணத்தில் சம்பவித்தது.

கல்லறையிலே, அவரை விசுவாசித்து வந்தவர்கள் அனைவ

ருடைய மரணத்தின் சாவிகளையும் எடுத்து கதவுகளை திறக்க அவருக்கு உரிமையும் சக்தியும் கிடைத்தது. பாவத்திற்கு விலைசெலுத் தப்பட்டு, நன்மைக்கு தேவையானது கொடுக்கப்பட்டு, நீதி திருப்தி செய்யப்பட்டால், கிறிஸ்துவையும் அவருடைய மக்களையும் எதுவும் கல்லறையில் வைத்திருக்க முடியாது. அதனால் தான் இயேசு இப்படி கூறுகின்றார், "மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற் குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்" (வெளிப் படுத்தல் 1:18).

நாம் கிறிஸ்துவுக்கு சொந்தமாக இருந்தால் அவரோடு நாம் எழுப்பப்படுவோம் என்கிற உண்மையை வேதம் முழங்குகின்றது. "ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப் பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப் பட்டிருப்போம்" ( ரோமர் 6:5). "இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே; அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூடக் கொண் டுவருவார்" (1 தெசலோனிக்கேயர் 4:14). "தேவன் கர்த்தரை எழுப்பினாரே, நம்மையும் தமது வல்லமையினாலே எழுப்புவார்" ( 1 கொரிந்தியர் 6:14).

கிறிஸ்துவின் மரணத்திற்கும் நம்முடைய உயிர்த்தெழுதலுக்கும் இணைப்பு இங்கே இருக்கிறது : "மரணத்தின் கூர் பாவம், பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம்" ( 1 கொரிந்தியர் 15:56). நாம் அனைவரும் பாவம் செய்தோம், பாவிகள் அனைவரும் நித்திய மரணத்திற்கு தீர்ப்பு அளிக்கப்படுவார்கள் என்பதே இதன் அர்த்தம். ஆனால் அந்த வாக்கியம் தொடர்ந்து, "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்கிறது (1 கொரிந்தியர் 15:57). வேறு வார்த்தைகளில் கூறினால், சட்டத்திற்கு தேவையானதை இயேசுவின் வாழ்வும் மரணமும் சந்தித்துவிட்டது. எனவே, பாவங்கள் மன்னிக்கப்பட்டன. எனவே கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் நித்திய மரண தண்டனைக்கு தீர்ப்பு பெற்றுக் கொள்ள மாட்டார்கள், மாறாக, "மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்... மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும்" ( 1 கொரிந்தியர் 15:52,54). ஆச்சரியத்தோடு, கிறிஸ்துவிடம் வாருங்கள். அவர் உங்களை அழைக் கிறார் : "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்" ( யோவான் 11:25).

# 42

# அதிகாரிகளையும் ஆட்சியாளர்களையும் அதிகாரம் இழக்கச் செய்ய

✞

*நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து; துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார்.*
கொலோசெயர் *2:14,15*

*பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான், பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்.*
*1* யோவான் *3:8*

**வே**தாகமத்தில் “துரைத்தனங்களும் அதிகாரங்களும்” மனித அரசாங்கங்களை குறிக்கலாம். ஆனால் நாம் சிலுவையில் கிறிஸ்து “துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டார்” என்றும் “வெளியரங்கமான கோலமாக்கினார்” என்றும் “அவைகளின் மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார்” என்றும் வாசிக்கும்போது, அவை உலகத்தை பாடுபடுத்துகிற பிசாசின் சக்திகள் என்று புரிந்துகொள்ள வேண்டும். இந்த தீய சக்திகளை குறித்த ஒரு தெளிவான வசனம் எபேசியர் *6:12*. அது கிறிஸ்தவர்களுக்கு “மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு” என்கிறது.

மூன்று முறை சாத்தான், “உலகத்தின் அதிபதி” என்று அழைக்கப்படுகிறான். இயேசு தன்னுடைய வாழ்வின் கடைசி மணிநேரத்துக்கு வந்தபோது, “இப்பொழுதே இந்த உலகத்துக்கு நியாயத்தீர்ப்பு உண்டாகிறது; இப்பொழுதே இந்த உலகத்தின் அதிபதி புறம்பாகத் தள்ளப்படுவான்” என்றார்( யோவான் *12:31*). இந்த “உலகத்தின் அதிபதி”யாகிய சாத்தானுக்கு இயேசுவின் மரணம் தீர்க்கமான தோல்வியை கொடுத்தது. சாத்தான் சென்றுவிட்டால், அவனோடு அனைத்து விழுந்துபோன தூதர்களும் சென்றுவிடுவார்கள். கிறிஸ்து மரித்தபோது அவர்கள் அனைவரும் தோல்வி அடைந்தனர்.

அவர்கள் இல்லாமல் போய்விடவில்லை. இப்போதும் நாம் அவர்களோடு போராடுகிறோம். ஆனால், இப்போது அவர்கள் தோற்கடிக்கப்பட்ட எதிரிகள். இறுதி வெற்றி நம்முடையது என்பது நமக்கு தெரியும். ஒரு பெரிய வலுசர்ப்பம் தலை துண்டிக்கப்பட்டு, சாகும்வரை இடித்து புரண்டு கொண்டு இருப்பதைப் போல அவன்

இருக்கிறான். யுத்தத்தில் வெற்றி அடைந்தாயிற்று. ஆனால் இன்னமும் அவன் ஏற்படுத்தக்கூடிய சேதங்களுக்கு நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இயேசுவின் மரணத்திலே, கடவுள் "நமக்கு எதிரான ஒப்பந்த விதிகள் பல கொண்ட கடன்பத்திரத்தை அழித்துவிட்டார். அதை சிலுவையில் வைத்து ஆணியடித்து அறவே ஒழித்து விட்டார்" (கொலோசேயர் 2:13,14 (பொது மொழிபெயர்ப்பு, அதிகாரம் 7 பார்க்க).இப்படித்தான் அவர் "துரைத்தனங்களையும் அதிகாரங் களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி(னார்)". வேறு வார்த்தைகளில், கடவுளுடைய சட்டம் இனி நம்மை குற்றப்படுத் தாது. ஏனென்றால், கிறிஸ்து நம்முடைய கடன்களை தள்ளுபடி செய்துவிட்டார், நம்மை குற்றப்படுத்த சாத்தானுக்கு எந்த அதிகாரமும் கிடையாது.

கிறிஸ்துவுக்கு முன்பாக கடவுளுடைய மக்களை குற்றப் படுத்துவதே சாத்தானுடைய முக்கியமான வேலை. சாத்தான் என்கிற வார்த்தையின் அர்த்தமே "குற்றம் சாட்டுகிறவன் அல்லது எதிரி" என்பதாகும். ஆனால் கிறிஸ்து மரித்தபோது என்ன நடந்தது என்பதை கவனியுங்கள். இவை அப்போஸ்தலராகிய யோவானின் வார்த்தைகள், "அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாகி: இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய ராஜ்யமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது; இரவும் பகலும் நம்முடைய தேவனுக்குமுன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ் சுமத்தும்பொருட்டு அவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத் தள்ளப்பட்டுப்போனான்" ( வெளிப்படுத்தல் 12:10). இதுவே துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிப்பது ஆகும்.

இப்போது கடவுளுடைய மக்களுக்கு எதிராக கிறிஸ்துவில் குற்றம்சாட்டுதல் கிடையாது. "தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக் குகிறவர்" ( ரோமர் 8:33). மனிதனோ அல்லது சாத்தானோ குற்றப்பதிவு ஏற்படுத்த முடியாது. வழக்கு முடித்துவைக்கப்பட்டது. கிறிஸ்துவே நமது நீதி. நம்மை குற்றம்சாட்டியவன் பதவி இழந்தான். பரலோக நீதிமன்றத்தில் அவன் நமக்கு எதிராக பேச முயற்சித்தால், வெட்கம் அவன் முகத்தை மூடும். ஓ ! கிறிஸ்துவுக்கு சேவை செய்யவும், அவருடைய மக்களை நேசிக்கவும் நாம் முயற்சி எடுக்கும்போது நாம் எவ்வளவும் தைரியமாகவும் சுதந்திரமாகவும் இவ்வுலகில் இருக்க முடியும்! கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களுக்கு ஆக்கினை தீர்ப்பு இல்லை. நாம் சாத்தானின் சோதனையில் இருந்து திரும்புவோம். அவனுடைய வாக்குகள் பொய்யானவை, அவனுடைய அதிகாரம் உரிந்துகொள்ளப்பட்டது.

# சுவிசேஷத்தில் கடவுளுடைய சக்தியை வெளிப்படுத்துவதற்காக

✞

*சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது.*
*1* கொரிந்தியர் *1:18*

*கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது.*
ரோமர் *1:16*

**சு**விசேஷம் என்றால் நல்ல செய்தி. இறையியல் என்பதற்கு முன்பாக இது செய்தியாக இருக்கிறது. ஏதோ முக்கியமானது நிகழ்ந்துவிட்டது என அறிவிப்பதே செய்தி. மக்களை மகிழ்விக்கக்கூடிய ஏதோ ஒன்று நிகழ்ந்துவிட்டது என்பதை கூறுவதே நற்செய்தி. சுவிசேஷம் அறிவிப்பது மக்களை எப்போதும் மகிழ்ச்சியில் வைத்திருக்கப்போவதால், அதுவே சிறந்த செய்தி.

கிறிஸ்துவின் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் அறிவிப்பதே சுவிசேஷம். அப்போஸ்தலராகிய பவுல் சுவிசேஷத்தின் செய்தி தரத்தை வெளிப்படுத்துகிறார் :

*சுவிசேஷத்தை ...தெரியப்படுத்துகிறேன்...கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து,...அதன்பின்பு அவர் ஐந்நூறுபேருக்கு அதிகமான சகோதரருக்கும் ஒரேவேளையில் தரிசனமானார்; அவர்களில் அநேகர் இந்நாள்வரைக்கும் இருக்கிறார்கள் (1 கொரிந்தியர் 15:1-6)*

“கிறிஸ்துவானவர் நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு,...உயிர்த்தெழுந்து...ஐந்நூறுபேருக்கு அதிகமான சகோதரருக்கு ஒரேவேளையில் தரிசனமானார்” என்பதே சுவிசேஷத்தின் மைய கருத்து. அநேக சாட்சிகள் அந்நாள்வரைக்கும் உயிரோடு இருந்தார்கள் என்பது சுவிசேஷம் எவ்வளவு உண்மையானது என்பதை காண்பிக்கிறது. அவருடைய வாசகர்கள் அதில் சில சாட்சிகளை பார்த்து கேள்விகேட்கலாம் என்பதற்காக அவர் இதை எழுதுகிறார். உண்மைகளை குறித்த செய்தியே சுவிசேஷம். இந்த உண்மைகள்

பரிசோதிக்கப்படக் கூடியவை. இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுந்த வாழ்க்கைக்கு சாட்சிகள் இருந்தன.

இதில் வருத்தத்திற்கு உரியது என்ன என்றால், பலருக்கு நற்செய்தி மூடத்தனமாக தெரிந்தது. பவுல் இப்படி சொன்னார், "சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது" (1 கொரிந்தியர் 1:18). இந்த பெலனை வெளிப்படுத்தவே கிறிஸ்து மரித்தார். "கிறிஸ்துவின் சுவிசேஷ(ம்) ...விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது" ( ரோமர் 1:16).

ஏன் கிறிஸ்துவின் மரணத்தை எல்லோராலும் நற்செய்தியாக பார்க்க முடியவில்லை? நாம் நம்புவதற்கு முன்பு அது உண்மையும் நன்மையுமானதாக நாம் பார்க்க வேண்டும். இதில் கேள்வி என்னவென்றால், இதை ஏன் நம்மால் உண்மையும் நன்மையுமாக பார்க்க முடிகிறது, மற்றவர்களால் முடியவில்லை? ஒரு பதில் 2 கொரிந்தியர் 4:4ல் கொடுக்கப்பட்டு இருக்கின்றது, "தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் [சாத்தான்] அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்". அதற்கும் மேலாக பாவமுள்ள மனித சுபாவமே உண்மையான ஆவிக்குரிய உண்மைக்கு செத்ததாக இருக்கிறது. "ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்" ( 1 கொரிந்தியர் 2:14).

சாத்தானின் குருட்டாட்டமும், இயல்பான செத்த தன்மையும் தேவபெலனால் தோற்கடிக்கப்பட்டால் மட்டுமே, சுவிசேஷத்தை உண்மையும், நன்மையுமாக பார்க்க முடியும். இதனால் தான் வேதம், சுவிசேஷம் பலருக்கு மூடத்தனமாக இருந்தாலும், "எவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்குக் கிறிஸ்து தேவபெலனும் தேவஞானமுமாயிருக்கிறார்" என்று கூறுகின்றது (1 கொரிந்தியர் 1:24). இயல்பான செத்த தன்மையையும், சாத்தானின் குருட்டாட்டத்தையும் நீக்குவதற்கான கடவுளுடைய இரக்கமுள்ள செயலே இந்த "அழைப்பு". இதனால் நாம் கிறிஸ்துவை உண்மையானவராகவும், நல்லவராகவும் பார்க்கிறோம். இந்த இரக்கமுள்ள செயலே கிறிஸ்துவின் இரத்தத்தினால் வாங்கப்பட்ட பரிசு. கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பார்க்கவும், தழுவிக்கொள்ளவும், அவரை நோக்கி பார்த்து கடவுளிடம் மன்றாடுங்கள்.

# 44

# வேற்று இனத்தவர்களுக்கு இடையே இருக்கும் பகையை அழிக்க

✞

*அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம்பண்ணி, பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார்.*

*எபேசியர் 2:14-16*

புதிய ஏற்பாட்டு காலத்தில் யூதர்களுக்கும், புற இனத்தவர்களுக்கும் (யூதர் அல்லாதவர்கள்) இடையே இருந்த சந்தேகம், வெறுப்பு மற்றும் அவமரியாதையான மனப்பாங்குகள், நம்முடைய காலத்தில் இருக்கும் இனம், கலாச்சாரம் மற்றும் தேசங்கள் சார்ந்த பகைமை உணர்வுகளைப் போல கொடூரமானவை. பகைமைக்கு ஒரு எடுத்துக்காட்டு, பேதுருவுக்கும் (கேபா) பவுலுக்கும் இடையே அந்தியோகியாவில் நடந்த சம்பவத்தில் காணமுடியும் : *“ பேதுரு அந்தியோகியாவுக்கு வந்தபோது, அவன்மேல் குற்றஞ்சுமந்ததினால், நான் முகமுகமாய் அவனோடே எதிர்த்தேன். எப்படியெனில், யாக்கோபினிடத்திலிருந்து சிலர் வருகிறதற்குமுன்னே அவன் புறஜாதியாருடனே சாப்பிட்டான்; அவர்கள் வந்தபோதோ, விருத்தசேதனமுள்ளவர்களுக்குப் பயந்து, விலகிப் பிரிந்தான்” (கலாத்தியர் 2:11,12).*

இயேசு கிறிஸ்துவின் சுதந்தரத்திலே பேதுரு வாழ்ந்து வந்தார். அவர் யூத கிறிஸ்தவராக இருந்தபோதிலும் யூதரல்லாத கிறிஸ்தவர்களோடு உணவு அருந்தினார். பிரிவினையின் சுவர் தகர்ந்து விழுந்தது. பகைமை மேற்கொள்ளப்பட்டது. இதை நிறைவேற்றவே கிறிஸ்து மரித்தார். ஆனால் சில சடங்காச்சாரமான யூதர்கள் அந்தியோகியாவுக்கு வந்தார்கள்.பேதுரு பயந்துபோனார். அவர் விமர்சனங்களுக்கு அஞ்சினார். புற இனத்தாரோடு இருந்த ஐக்கியத்தில் இருந்து பின்வாங்கினார்.

இந்த சம்பவத்தை அப்போஸ்தலராகிய பவுல் பார்த்தார். அவர் என்ன செய்வார்? சூழ்நிலை அறிந்து செயல்படுவாரா? வருகை தந்த சடங்காச்சாரமானவர்களுக்கும், அந்தியோகியாவில் இருக்கும் கிறிஸ்தவ யூதர்களுக்கும் இடையே அமைதியை நிலைநாட்டுவாரா? பவுலுடைய நடத்தையின் காரணம் இவ்வசனங்களில் இருக்கிறது :

“இப்படி அவர்கள் சுவிசேஷத்தின் சத்தியத்திற்கேற்றபடி சரியாய் நடவாததை நான் கண்டபோது” ( கலாத்தியர் 2:14). இது ஒரு முக்கியமான வாக்குமூலம். இன மற்றும் கலாச்சார பிரிவினைகள் ஒரு சுவிசேஷ பிரச்சனை. இரு கலாச்சாரங்களுக்கு இடையே பேதுருவின் பயமும் ஐக்கியத்தில் இருந்து விலகிய செயலும், “சுவிசேஷத்தின் சத்தியத்திற்கேற்றபடி சரியாய்” நடந்துகொள்ளாத செயல். இந்த சுவரை உடைக்க கிறிஸ்து மரிக்க வேண்டியதாய் இருந்தது. பேதுரு அச்சுவரை மீண்டும் கட்டுகிறார்.

பவுல் சூழ்நிலைக்கு ஏற்றவாறு நடந்து கொள்ளவில்லை. சுவிசேஷத்தை புறக்கணிக்கும் அமைதியை அவர் நிலைநாட்டவில்லை. பகிரங்கமாக பேதுருவை அவர் அதட்டினார், “யூதனாயிருக்கிற நீர் யூதர் முறைமையாக நடவாமல், புறஜாதியார் முறைமையாக நடந்துகொண்டிருக்க, புறஜாதியாரை யூதர்முறைமையாக நடக்கும்படி நீர் எப்படிக்கட்டாயம் பண்ணலாம்?”என்றார் (கலாத்தியர் 2:14). வேறு வார்த்தைகளில், யூதர்கள் அல்லாத கிறிஸ்தவ சமுதாயத்தின் ஐக்கியத்தில் இருந்து பேதுரு விலகியது ஒரு தவறான செய்தியை கொடுத்தது. நீங்கள் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட யூதர்களாக மாறவேண்டும் என்பதே அந்த தவறான செய்தி. இதை ஒழிக்கவே கிறிஸ்து மரித்தார்.

இனங்கள் ஒப்புரவாக, ஒரு புதிய வழியை உருவாக்க இயேசு மரித்தார். ஒன்றிணைந்து மகிழ்ச்சியாக இருக்க சடங்குகளும், இனங்களும் காரணம் அல்ல. கிறிஸ்துவே காரணம். அவர் சட்டத்தை முழுவதுமாக நிறைவேற்றினார். ஒரு காரியத்தை தவிர, மக்களை பிரித்த அனைத்து காரியங்களும் இதில் முடிவுக்கு வந்தன. சுவிசேஷம் மாத்திரம் முடிவு அடையவில்லை. இனங்களுக்கு நடுவே ஒற்றுமையை கொண்டுவர எல்லா மதங்களும் சம மதிப்பு உடையவை என்று கூறுவது மாத்திரம் சாத்தியம் அற்றது. இயேசு கிறிஸ்துவே கடவுளின் மைந்தன். பாவிகளை இரட்சிக்கவும், இனங்களை ஒப்புரவாக்கவும் கடவுள் அவரை உலகிற்கு அனுப்பினார். இதை நாம் மறுத்தால், நித்திய நம்பிக்கைக்கும், மக்களுக்கும் இடையே நித்திய ஐக்கியத்திற்கும் உள்ள அஸ்திபாரத்தையே நாம் அசைக்கிறவர்களாக இருப்போம். கிறிஸ் துவின் மரணம் சபை சார்ந்த ஒன்றை அல்ல உலகம் சார்ந்த ஒன்றை நிறைவேற்றியது. கடவுளும் மனிதனும் ஒப்புரவு ஆனார்கள். இதை கண்டுபிடித்து அனுபவிக்கும் இனங்கள் மாத்திரமே, இதை விரும்பி ஒருவரை ஒருவர் மகிழ்விப்பார்கள். கடவுளிடம் இருந்து நம்முடைய பிரிவினையை வென்றதன் மூலமாக இனங்களுக்கு இடையே இருந்த பிரிவினையையும் கிறிஸ்து வென்றார்.

# 45

# ஒவ்வொரு கோத்திரம், மொழி, இனம் மற்றும் நாடுகளில் இருந்து மக்களை மீட்பதற்காக

*தேவரீர் புஸ்தகத்தை வாங்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறீர்; ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களை தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு...* வெளிப்படுத்தல் *5:9*

இக்காட்சி பரலோகத்தில் நடைபெறுகின்றது. கடவுளுடைய கரத்தில் எதிர்காலத்தின் ஒரு காட்சி அப்போஸ்தலராகிய யோவானுக்கு காட்டப்படுகின்றது. "ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருந்த ஒரு புஸ்தகத்தைச் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய வலதுகரத்திலே கண்டேன்" ( வெளிப்படுத்தல் *5:1*). அந்த புத்தகத்தை திறப்பது, எதிர்கால உலக வரலாற்றில் சம்பவிக்க வேண்டியவற்றை பார்ப்பதை குறிக்கிறது. அந்த சுருளை திறக்க யாருமே இல்லை என்று யோவான் அழுகிறதாக தெரிகிறது. பரலோகவாசிகளில் ஒருவர் இப்படி சொல்கிறார், "நீ அழவேண்டாம்; இதோ, யூதா கோத்திரத்துச் சிங்கமும் தாவீதின் வேருமானவர் புஸ்தகத்தைத் திறக்கவும் அதின் ஏழு முத்திரைகளையும் உடைக்கவும் ஜெயங்கொண்டிருக்கிறார்" என்றார் (*5:5*). இது மேசியா இயேசு கிறிஸ்துவை குறிக்கிறது. அவர் மரணத்தினாலும் உயிர்த்தெழுதலினாலும் வெற்றி பெற்றவர். யோவான் அவரை பார்க்கிறார் : "இதோ, அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டி" (வெளிப்படுத்தல் *5:6*).

சிங்காசனத்தை சுற்றி இருந்த வானோர் தாழவிழுந்து கிறிஸ்துவை ஆராதித்தார்கள். அவர்கள் ஒரு புது பாட்டை பாடினார்கள். ஆச்சரியப்படும் விதமாக, அந்த பாடல் கிறிஸ்துவின் மரணம் அந்த வரலாற்று புத்தகத்தை திறக்க அவர் தகுதியுள்ளவராக அவரை மாற்றியது என்கிறது. உலக வரலாற்றில் கடவுளுடைய நோக்கங்களை நிறைவேற்ற கிறிஸ்துவின் மரணம் அவசியம் என்பதே அதன் அர்த்தம். "தேவரீர் புஸ்தகத்தை வாங்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறீர்; ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களை தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு..."(என்னும்) புதிய பாட்டைப் பாடினார்கள் ( வெளிப்படுத்தல் *5:9-10*).

அதிக வேற்றுமைகள் உள்ள மக்களை இரட்சிக்க கிறிஸ்து

மரித்தார். பாவம் கலாச்சாரங்களை மதிக்காது. எல்லாருமே பாவம் செய்தார்கள். ஒவ்வொரு இனமும், கலாச்சாரமும் கடவுளுடன் ஒப்புரவு ஆகவேண்டும். பாவ வியாதி உலகளாவியது, அதுபோல அதன் தீர்வும் உலகளாவியது. சிலுவையின் கொடூரம் வருவதை பார்த்து இயேசு, தன்னுடைய நோக்கத்தின் அளவை குறித்து தைரியமாக பேசினார் : "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன் என்றார்" ( யோவான் 12:32). அவர் தன் மரணத்தை திட்டமிட்டார், உலகத்தை அரவணைத்தார்.

கிறிஸ்தவம் கிழக்கில் இருந்து துவங்கியது. பல நூற்றாண்டுகளில் அது மேற்கு நோக்கி நகர்ந்து உள்ளது. ஆனால், இப்போது கிறிஸ்தவம் மேற்கத்திய மதம் அல்ல. இது கிறிஸ்துவுக்கு ஆச்சரியமானது அல்ல. பழைய ஏற்பாட்டிலேயே அவருடைய உலகளாவிய தாக்கம் கூறப்பட்டு இருக்கிறது. "பூமியின் எல்லைகளெல்லாம் நினைவுகூர்ந்து கர்த்தரிடத்தில் திரும்பும்; ஜாதிகளுடைய சந்ததிகளெல்லாம் உமது சமுகத்தில் தொழுதுகொள் ளும்" (சங்கீதம் 22:27). "ஆதலால் ஜாதிகள் சந்தோஷித்து, கெம்பீரத்தோடே மகிழக்கடவர்கள்" ( சங்கீதம் 67:4). எனவே இயேசு இவ்வுலகில் தன்னுடைய ஊழியத்தின் எல்லைக்கு வந்தபோது, தன்னுடைய நோக்கத்தை தெளிவுபடுத்தினார்: "எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம்நாளில் மரித்தோரிலிருந்தெழுந் திருக்கவும் வேண்டியதாயிருந்தது; அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகலதேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது" ( லூக்கா 24:46,47). அவருடைய சீஷர்களுக்கு அவர் கொடுத்த கட்டளை தெளிவானது: "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து" ( மத்தேயு 28:19).

இயேசு கிறிஸ்து ஒரு கோத்திரத்தின் தெய்வம் அல்ல. அவர் ஒரு கலாச்சாரம் அல்லது இனத்திற்கு உரியவர் அல்ல. அவர் "உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" ( யோவான் 1:29). "யூதனென்றும் கிரேக்கனென்றும் [வேறு எந்த இனமென்றும்] வித்தியாசமே இல்லை; எல்லாருக்குங் கர்த்தரானவர் தம்மைத் தொழுதுகொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரியசம்பன்னராயிருக்கிறார். ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்" ( ரோமர் 10:12,13). இப்போதே அவரை கூப்பிடுங்கள். மீட்கப்பட்ட பெரும் உலக குழுவோடு இணைந் திடுங்கள்.

# 46

# உலகம் முழுவதிலும் இருந்து தன் ஆடுகளை ஒன்றுசேர்க்க

✞

*இதை அவன்[காய்பா] சுயமாய்ச் சொல்லாமல், அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனானபடியினாலே இயேசு யூதஜனங்களுக்காக மரிக்கப்போகிறாரென்றும், அந்த ஜனங்களுக்காகமாத்திரமல்ல, சிதறியிருக்கிற தேவனுடைய பிள்ளைகளை ஒன்றாகச் சேர்க்கிறதற்காகவும் மரிக்கப்போகிறாரென்றும், தீர்க்கதரிசனமாய்ச் சொன்னான்.* யோவான் *11:51-52*

*இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டுவரவேண்டும், அவைகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும். அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்.* யோவான் *10:16*

**தா**ன் செய்கிறது என்ன என்று அறியாமலேயே ஒரு கழுதை கூட கடவுளை பற்றி பேசலாம் ( எண்ணாகமம் *22:28*). அப்படியே ஒரு போதகரும், ஆசாரியரும் பேசலாம். அது காய்பாவுக்கு நிகழ்ந்தது. இயேசு மரண தண்டனைக்கு குற்றம் சாட்டப்பட்ட போது காய்பா பிரதான ஆசாரியராக இருந்தார். இஸ்ரவேல் தலைவர்களுக்கு அவர் யோசிக்காமல் இதை சொன்னார், “ஜனங்களெல்லாரும் கெட்டுப் போகாதபடிக்கு ஒரே மனுஷன் ஜனங்களுக்காக மரிப்பது நமக்கு நலமாயிருக்குமென்று நீங்கள் சிந்தியாமலிருக்கிறீர்கள்” (யோவான் *11:50*). இதற்கு இரண்டு அர்த்தங்கள் உண்டு. காய்பா சொன்னதன் அர்த்தம் : நாடு துரோகம் செய்துவிட்டது என்று ரோமர்கள் குற்றப்படுத்தி மக்களை கொல்வதைவிட இயேசு மரிப்பது நலமாய் இருக்கும். ஆனால் கடவுள் இதில் வேறு அர்த்தம் வைத்திருந்தார். எனவே வேதம் இப்படி கூறுகின்றது, “இதை [காய்பா] அவன் சுயமாய்ச் சொல்லாமல், அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனானபடியினாலே இயேசு யூதஜனங்களுக்காக மரிக்கப்போகிறாரென்றும், அந்த ஜனங்களுக்காகமாத்திரமல்ல, சிதறியிருக்கிற தேவனுடைய பிள்ளைகளை ஒன்றாகச் சேர்க்கிறதற்காகவும் மரிக்கப் போகிறாரென்றும், தீர்க்கதரிசனமாய்ச் சொன்னான்” ( யோவான் *11:51,52*).

இயேசுவும் இதையே வேறு ஒரு உவமையை கொண்டு சொன்னார். “சிதறியிருக்கிற...பிள்ளைக”ளுக்கு பதிலாக, இஸ்ரவேலுக்கு வெளியே இருக்கும் “ஆடு”களை குறித்து பேசினார்: “இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டுவரவேண்டும், அவைகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும். அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்” ( யோவான் *10:16*).

இந்த இரண்டு விதமான பேச்சுக்களுமே ஆச்சரியப்படுத்துகின்றன. சந்திக்கப்படும்படி கடவுளால் தெரிந்தெடுக்கப்பட்டு இயேசு கிறிஸ்துவால் இரட்சிக்கப்பட்ட மக்கள் இருக்கிறார்கள் என்று உலகம் முழுவதும் பிரசங்கிக்கிறார்கள். சிதறிக்கிடக்கிற "தேவனுடைய பிள்ளைகள்" இருக்கிறார்கள். "இந்த (யூத" தொழுவத்தில் உள்ளவைகள் அல்லாத வேறே ஆடுகள்" இருக்கின்றன. தன் மைந்தனுக்காக மக்களை ஒன்றுசேர்ப்பதில் கடவுள் தீவிரமாக இருக்கிறார் என்பது இதன் பொருள். சீஷர்களாக்க தன் மக்களிடம் அவர் கூறுகிறார், ஆனால் அவர் அவர்களுக்கு முன்பாக செல்கிறார். அவருடைய செய்தியாளர்கள் செல்லும் முன்பே அவர் தெரிந்தெடுத்த மக்கள் அங்கே இருக்கிறார்கள். கடவுள் தன்னுடைய சொந்தமாக்கி பின்பு கிறிஸ்துவிடம் கொண்டு வந்த மனமாற்றம் அடைந்தவர்களை குறித்து கிறிஸ்து பேசுகிறார். "பிதாவானவர் எனக்குக் கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும், என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை... அவர்கள் உம்முடையவர்களாயிருந்தார்கள், அவர்களை எனக்குத் தந்தீர், அவர்கள் உம்முடைய வசனத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள்" (யோவான் 6:37; 17:6).

கடவுள் உலக மக்கள் அனைவரையும் பார்க்கிறார். அதில் ஒரு மந்தையை தனக்காக பெயர்சூடுகிறார். பின்பு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஊழியர்களை அனுப்புகிறார். பின்பு அவர் தெரிந்துகொண்டவர்களை அந்த சத்தத்துக்கு வழிநடத்துகிறார். பின்பு அவர்களை இரட்சிக்கிறார். ஊழியங்கள் அவசியம். "ஆடுகளும் அவன் சத்தத்துக்குச் செவிகொடுக்கிறது. அவன் தன்னுடைய ஆடுகளைப் பேர்சொல்லிக் கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக் கொண் டுபோகிறான் ...ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக் கிறபடியினால் அவனுக்குப் பின்செல்லுகிறது" ( யோவான் 10:3,4).

அவருடைய ஆடுகள் அவர் சத்தத்தை கேட்டு வாழ்வதற்காக இயேசு பாடுபட்டு மரித்தார். இதையே அறியாமல் காய்பா பேசினார் : "இயேசு ... மரிக்கப்போகிறாரென்றும், அந்த ஜனங்களுக்காக மாத்திரமல்ல, சிதறியிருக்கிற தேவனுடைய பிள்ளைகளை ஒன்றாகச் சேர்க்கிறதற்காகவும் மரிக்கப்போகிறாரென்றும், தீர்க்கதரிசனமாய்ச் சொன்னான்" . ஆடுகளை ஒன்றாக சேர்க்க அவர் தன்னுடைய உயிரை கொடுத்தார். அவருக்கு சொந்தமானவர்கள் அவருடைய சத்தத்தை அறிந்துகொள்ளும் கிருபையை அவருடைய இரத்தம் விலைக்கு வாங்கியது. கடவுள் இந்த கிருபையை உங்களுக்கு கொடுக்கவும், அவருடைய சத்தத்தை நீங்கள் கேட்டு வாழவும், கடவுளிடம் வேண்டிக்கொள்ளுங்கள்.

# இறுதி தீர்ப்பில் இருந்து நம்மை மீட்க

✞

*கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்.*
*எபிரெயர் 9:28*

இரட்சிப்பை குறித்த கிறிஸ்தவ சிந்தனை கடந்தகாலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் சார்ந்தது. "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்" என்று வேதம் கூறுகின்றது ( எபேசியர் 2:8). "இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது" என்றும் சொல்கிறது (1 கொரிந்தியர் 1:18). "நாம் விசுவாசிகளானபோது இரட்சிப்பு சமீபமாயிருந்ததைப் பார்க்கிலும் இப்பொழுது அது நமக்கு அதிக சமீபமாயிருக்கிறது" என்றும் கூறுகின்றது ( ரோமர் 13:11). நாம் இரட்சிக்கப்பட்டோம், இரட்சிக்கப்படுகிறோம், இரட்சிக்கப்படுவோம்.

ஒவ்வொரு நிலையிலும் நாம் கிறிஸ்துவின் மரணத்தினால் நாம் இரட்சிப்பை பெறுகிறோம். கடந்தகாலத்தில், ஒரேதரம் கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக விலைகொடுத்தார். நாம் விசுவாசத்தினால் மாத்திரம் நீதிமான்கள் ஆக்கப்பட்டோம். நிகழ்காலத்தில், பாவத்தின் ஆதிக்கத்திலும், அசுத்தப்படுத்துதலிலும் இருந்து நம்மை காப்பாற்ற கடவுளின் சக்தியை கிறிஸ்துவின் மரணம் பாதுகாத்து கொடுக்கிறது. எதிர்காலத்தில், சிலுவையில் ஊற்றப்பட்ட கிறிஸ்துவின் இரத்தம், கடவுளுடைய கோபத்தில் இருந்து நம்மை பாதுகாத்து, பூரணத்திற்கும் மகிழ்ச்சிக்கும் நம்மை கொண்டு செல்லும்.

உண்மையான நியாயத்தீர்ப்பு ஒன்று வருகிறது. "நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்" என்று வேதம் விவரிக்கிறது ( எபிரெயர் 10:27). "நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக்கொள்ளக்கடவோம். நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே" என்று வேதம் அழைக்கிறது ( எபிரெயர் 12:28,29). "வருங்கோபத்துக்குத் தப்பித்துக்கொள்ள" வாருங்கள் என்று யோவான் ஸ்நானன் எச்சரித்தார் ( மத்தேயு 3:7). " தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப் படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து

எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும். அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமைபொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்" (2 தெசலோனிக்கேயர் 1:7-10).

கடவுளுடைய இறுதி கோபாக்கினையின் சித்தரிப்புகளில் சில யோசிப்பதற்கே கொடூரமாக இருக்கின்றன. அன்பின் அப்போஸ் தலராகிய யோவான், நரகத்தை குறித்த இந்த கொடூரமான காட்சிகளை வெளிப்படுத்துவது சற்று விநோதமாக இருக்கிறது. கிறிஸ்துவை நிராகரித்து, தங்களை வேறு ஒருவரோடு இணைத்துக் கொண்டவர்கள் "தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடித்து, பரிசுத்த தூதர்களுக்குமுன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்குமுன்பாகவும் அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவா(ர்கள்). அவர் களுடைய வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும்;...எவனுக் கும் இரவும் பகலும் இளைப்பாறுதலிராது" (வெளிப்படுத்தல் 14: 10-11).

கடவுளுடைய எதிர்கால கோபத்தின் உக்கிரத்தை உணராமல், கிறிஸ்துவின் எதிர்கால இரட்சிப்பு பணியின் இனிமையை ஆதித் திருச்சபை எப்படி ருசிபார்த்தது என்பதை உணர்ந்துகொள்ள முடியாது. "அவர் மரித்தோரிலிருந்தெழுப்பினவரும், இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிறவருமாயிருக் கிற அவருடைய குமாரனாகிய இயேசு பரலோகத்திலிருந்து வருவதை நீங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறதையும், அறிவிக்கிறார்களே" ( 1 தெசலோனிக்கேயர் 1:10). வர இருக்கும் கோபாக்கினையில் இருந்து நம்மை காப்பாற்றக் கூடியவர் இயேசு கிறிஸ்து ஒருவரே. அவர் இல்லாமல் நாம் அனைவரும் சதாகாலமும் அழிந்துபோவோம்.

இறுதியில் கிறிஸ்து நம்மை இரட்சிப்பது, அவருடைய இரத்தத்தை சார்ந்தது. "கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண் டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்" ( எபிரெயர் 9:28). ஒரேதரம் பாவம் நீக்கப்பட்டது. இனி புதிய பலி தேவை இல்லை. கிறிஸ்து நமக்காக பாடுபட்டது எவ்வளவு உறுதியானதோ, நாம் பின்வரும் கோபாக்கினையில் இருந்து காக்கப்படுவதும் அவ்வளவு உறுதி. முன்பு சிலுவைக்காக அது உறுதிசெய்யப்பட்டது, பின்பு எதிர்கால கிருபைக்காக உறுதிசெய்யப்பட்டது.

# 48

# அவருடைய சந்தோஷத்தையும் நம்முடைய சந்தோஷத்தையும் பெற்றுக்கொள்ள

✞

*அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்.*
எபிரெயர் *12:2*

ஆனந்தத்திற்கு செல்லும் பாதை கடினமானது. அது நமக்கும் கடினமானது, இயேசுவுக்கும் கடினமானது. அதற்காக அவர் உயிரையே கொடுத்தார். நம்முடைய உயிரையும் கொடுக்க வேண்டியதாக இருக்கலாம். “அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு... சிலுவையைச் சகித்(தார்)”. முதலில் சிலுவையின் கொடுமை, பின்பு பரலோகத்தின் அருமை. வேறு வழியே இல்லை.

அவருக்கு முன்பாக வைக்கப்பட்ட சந்தோஷத்திற்கு பல நிலைகள் இருந்தன. தன்னுடைய தந்தையோடு மறுபடியும் இணையும் ஆனந்தம் : “உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம் முடைய வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு” (சங்கீதம் *16:11*). பாவத்தை வெற்றிகொண்டதன் மகிழ்ச்சி : “தம்மாலேதாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலதுபாரிசத்திலே உட்கார்ந்தார்” (எபிரெயர் *1:3*). தெய்வீக உரிமைகளை திரும்ப பெற்றதன் சந்தோஷம் : “தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்” ( எபிரெயர் *12:2*). அவர் யாருக்கெல்லாம் மரித்தாரோ அவர்கள் எல்லாம் அவரை சூழ்ந்துநின்று துதிப்பதினால் ஏற்படும் சந்தோஷம் : “மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்” ( லூக்கா *15:7*).

இப்போது நமக்கு என்ன இருக்கிறது? அவர் மகிழ்ச்சியில் பிரவேசித்து நம்மை துக்கத்தில் விட்டுவிட்டாரா? இல்லை. அவர் மரிப்பதற்கு முன்பாக, அவருடைய மகிழ்ச்சிக்கும் நம்முடைய மகிழ்ச்சிக்கும் அவர் ஒரு இணைப்பை உண்டுபண்ணினார். “என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன்” என்றார் ( யோவான் *15:11*). அவருடைய மகிழ்ச்சி என்ன என்பது அவருக்கு தெரியும், எனவே தான் “என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கு” என்றார். அவருடைய

படைப்புகளாக நாம் இயேசுவின் மகிழ்ச்சியை எந்த அளவுக்கு அனுபவிக்க முடியுமோ அந்த அளவுக்கு அவரை நம்பிய நாம் சந்தோஷப்படுவோம்.

ஆனால் அந்த பாதை கடினமானது. "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு" என்று அவர் எச்சரித்தார் ( யோவான் 16:33). "சீஷன் தன் போதகனிலும்,...மேற்பட்டவனல்ல... வீட்டெஜமானையே பெயல்செபூல் என்று சொல்வார்களானால், அவன் வீட்டாரை அப்படிச் சொல்வது அதிக நிச்சயமல்லவா?" ( மத்தேயு 10:24-25). "உங்களில் சிலரைக் கொலைசெய்வார்கள். என் நாமத்தினிமித்தம் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்" ( லூக்கா 21:16,17). இதுவே இயேசு நடந்த பாதை. அதுவே மகிழ்ச்சிக்கு செல்லும் வழி. அவருடைய மகிழ்ச்சி நமக்குள் நிலைத்திருப்பதே, நம்முடைய நிறைவான மகிழ்ச்சி.

மகிழ்ச்சியின் நம்பிக்கையினால் கிறிஸ்து சிலுவையை சகித்தார். அதுபோலவே, மகிழ்ச்சியின் நம்பிக்கை அவரோடு பாடுபட நமக்கு பெலன் அளிக்கும். இதே காரியத்திற்காக இயேசு நம்மை தயார்படுத்தினார். "என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள். சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்" என்றார் (மத்தேயு 5:11,12). தெய்வ மைந்தன் பிதாவிடம் எப்படி மகிழ்ச்சியாக இருக்கிறாரோ, அப்படியே நாம் கடவுளில் மகிழ்ந்து இருப்போம். அதுவே நம் பரிசு.

இயேசு மனப்பூர்வமாக மரிக்கவில்லை என்றால், அவரும் நாமும் எப்போதும் மகிழ்ச்சியாக இருந்திருக்கவே முடியாது. அவர் கீழ்ப்படியாதவராக இருந்திருப்பார். நம்முடைய பாவங்களிலே நாம் அழிந்து இருப்போம். அவருடைய மகிழ்ச்சியும் நம்முடைய மகிழ்ச்சியும் சிலுவையில் பெற்றுகொள்ளப்பட்டன. இப்போது நாம் அவரை அன்பின் பாதையில் பின்பற்றுகிறோம். "ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத் தக்கவைகள் அல்லவென்று" நாம் எண்ணுகிறோம் (ரோமர் 8:18). இப்போது அவரோடு நாம் நிந்தையை அனுபவிக்கிறோம். பின்பு அழியாத மகிழ்ச்சி கிடைக்கும். அன்பிற்கு தேவைப்படும் அனைத்து கஷ்டங்களையும் நாம் சகிப்போம். நம்முடைய பெலத்தினால் அல்ல. "அவருடைய கோபம் ஒரு நிமிஷம், அவருடைய தயவோ நீடிய வாழ்வு; சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப் புண்டாகும்" என்கிற நம்பிக்கையின் பெலத்தினால் ( சங்கீதம் 30:5).

# அவர் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட

✞

*என்றாலும்...இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம்.*
எபிரெயர் 2:9

*தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி(னார்).*
பிலிப்பியர் 2:7-9

*அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார்.*
வெளிப்படுத்தல் 5:12

அவர் மரணமடைவதற்கு முந்திய இரவு, என்ன சம்பவிக்க போகிறது என்பதை அறிந்த இயேசு, இப்படி ஜெபித்தார், "பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப் படுத்தும்" ( யோவான் 17:5). அவ்வாறே அது நிகழ்ந்தது : "இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம்" (எபிரெயர் 2:9). அவருடைய மகிமை அவருடைய பாடுகளுக்கான பரிசு. "மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி... ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி(னார்)" ( பிலிப்பியர் 2:8-9). சுருக்கமாக, அவர் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி என்பதால், "வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார்" ( வெளிப்படுத்தல் 5:12). இயேசுவின் வாஞ்சை கிரீடத்திற்கு முன்பு சாதாரணமாக வந் துவிடவில்லை; வாஞ்சை ஒரு பரிசு, அதோடு கிரீடமும் ஒரு பரிசு. அதை பெற்றுக்கொள்ள அவர் மரித்தார்.

இவ்விடத்தில் பலர் தடுமாறுகிறார்கள். "இது எப்படி அன்பு ஆகும்? இயேசு அவருடைய மகிமையை பெற்றுக்கொள்ள ஊக்கமாக இருந்தால், நமக்கு மகிழ்ச்சி அளிக்க அவர் எப்படி ஊக்கமாக இருந்து இருக்க முடியும்? எப்போது இருந்து தற்பெருமை ஒரு காரணமாக இருக்கிறது?" என்றெல்லாம் அவர்கள் கேட்கிறார்கள். இது ஒரு நல்ல கேள்வி. இதற்கு ஒரு அருமையான வேதாகம பதில் இருக்கிறது.

மகத்துவமான அன்பு என்ன என்பதை கற்றுக்கொள்வதில் பதில் இருக்கிறது. நமக்கு அதிகம் கொடுக்கப்பட்டால் நம்மிடம் அதிகம் அன்பு செலுத்தப்படுவதாக நாம் வளர்க்கப்பட்டு இருக்கிறோம். நம் உலகம் முழுவதும் இந்த யூகத்தின் அடிப்படையில் கட்டப்பட்டு இருப்பதை போல தெரிகிறது. நான் உங்களை நேசித்தால், உங்களை நான் பெருமைபடுத்துவேன். உங்களை குறித்து நன்மையாக நினைக்க நான் உதவுவேன். தன்னையே பார்த்துக்கொள்வதே ஆனந்தத்தின் ரகசியம் போல தோற்றம் அளிக்கிறது.

ஆனால் நமக்கு ஒன்று நன்றாக தெரியும். வேதத்தை நாம் அறியும் முன்பும் இந்த சிந்தனை தவறானது என்பது நமக்கு தெரியும். தனக்குள்ளே மூழ்கி கிடக்கும் கணப்பொழுதுகள் நம்முடைய மகிழ்ச்சியான தருணங்கள் அல்ல, தன்னையே மறக்கும் தருணங்களே மகிழ்ச் சியானவை. நாம் மகா பள்ளத்தாக்கின் அருகே , கிலிமஞ்சாரோ மலை அடிவாரத்தின் கீழ், அல்லது சகாராவில் சூரிய அஸ்தமனத்தை பார்த்துக் கொண்டு நின்ற தருணங்கள் உண்டு. அப்போது அற்புதத்தை கண்டதன் மகிழ்ச்சியை நாம் உணர்ந்து இருப்போம். இதற்காகவே நாம் படைக்கப்பட்டு இருக்கிறோம். பரலோகம் முகம் பார்க்கும் கண்ணாடிகள் நிறைந்த மாளிகையாக இருக்காது. அது மகத்துவத்தின் கண்காட்சியாக இருக்கும். அது நம்முடைய மகத்துவமாக இருக்காது.

அண்டசராசரத்தில் மிகவும் மகத்துவமானவர் கிறிஸ்துவே என்பது உண்மை என்றால், அவருடைய அன்பு நமக்கு எப்படி இருக்கும்? நிச்சயம் அது நம்மை பெருமைபடுத்தாது. அது நம்முடைய ஆத்துமாவை திருப்தி செய்யாது. நாம் அதை காட்டிலும் மிக உயரிய காரியத்துக்காக உருவாக்கப்பட்டு இருக்கிறோம். நாம் அதிக மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்றால், எல்லாரிலும் மிகவும் மகத்துவமான நபராகிய இயேசு கிறிஸ்துவையே நாம் காண வேண்டும். நம்மை நேசிப்பதற்காக, இயேசு தம்முடைய மகிமையின் நிறைவை பெற முயற்சித்து அதை நமக்கு காண்பிக்க வேண்டும் என்பதே இதன் பொருள். அதனால் தான் அவர் மரிப்பதற்கு முந்தையை இரவு அவர் இப்படி ஜெபித்தார், "பிதாவே, உலகத்தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால், நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன்" ( யோவான் 17:24). என்னுடைய மகிமையை அவர்கள் காணட்டும் என்பதே அன்பு. இயேசு தம்முடைய முழு மகிமையையும் பெற்றுக்கொள்ள மரித்தார். நம்முடைய மகிழ்ச்சிக்காக மரித்தார். அன்பு ஒரு சேவை. மக்களை மகிழ்விக்க என்ன கொடுக்க வேண்டுமோ அதை செலுத்த வேண்டும். அவர்களுக்கு அதிகம் திருப்தி அளிப்பது இயேசு கிறிஸ்துவே. இப்படி தான் இயேசு நேசிக்கிறார்.

# 50

# மோசமான தீமையும் நன்மைக்காகவே கடவுள் செய்தார் என்பதை காண்பிக்க

✞

*அந்தப்படி உம்முடைய கரமும் உம்முடைய ஆலோசனையும் முன் குறித்தவைகள் யாவையும் செய்யும்படி, ஏரோதும் பொந்தியுபிலாத்தும், புறஜாதிகளோடும் இஸ்ரவேல் ஜனங்களோடுங்கூட, நீர் அபிஷேகம்பண்ணின உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவுக்கு விரோதமாய், மெய்யாகவே கூட்டங்கூடினார்கள்.*

அப்போஸ்தலர் *4:27,28*

**பா**டுகள் குறித்தும் தீமைகள் குறித்தும் நாம் சொல்லக்கூடிய வலிமையான காரியம் என்ன என்றால், இயேசு கிறிஸ்துவில் கடவுள் அவை அனைத்தையும் நன்மையாக மாற்றினார் என்பது தான். தீமையின் தொடக்கம் இரகசியமாக மறைக்கப்பட்டது. நாம் அறிந்துகொள்ள விரும்பும் அளவுக்கு வேதம் நம்மை கொண்டு செல்கிறது இல்லை. “மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்” ( உபாகமம் *29:29*).

தீமை எப்படி ஆரம்பம் ஆனது என்பது வேதாகமத்தின் மைய கருத்து அல்ல. கடவுள் அதற்குள் எப்படி வந்தார், அதை எப்படி நன்மையாக மாற்றினார், நித்திய நீதியாகவும் மகிழ்ச்சியாகவும் மாற்றினார் என்பதையே மையமாக கொண்டு இருக்கிறது. வேத வாக்கியங்கள் முழுவதிலும் மேசியாவுக்கு இப்படி நடக்கும் என்கிற குறிப்புகள் இருந்தன. யாக்கோபின் மைந்தன் யோசேப்பு, எகிப்திலே அடிமையாக விற்கப்பட்டார். பதினேழு ஆண்டுகள் அவர் கைவிடப் பட்டது போல இருந்தார். ஆனால் கடவுள் அதன் மத்தியில் இருந்து, அவரை எகிப்துக்கு ஆட்சியாளராக மாற்றினார். அதன் மூலமாக அவரை விற்றவர்களையே ஒரு கொடிய பஞ்சத்தில் இருந்து காப்பாற்றினார். இக்கதையின் சுருக்கத்தை யோசேப்பு அவருடைய சகோதரர்களோடு உரையாடும் ஒரு வாக்கியத்தில் சொல்லிவிடலாம் : “நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள்; தேவனோ ...அதை நன்மையாக முடியப்பண்ணினார்” (ஆதியாகமம் *50:20*). இரட்சிக்கும் படி நிராகரிக்கப்பட்ட இயேசு கிறிஸ்துவுக்கு இது ஒரு முன் நிழலாட் டமாக இருந்தது.

நம்முடைய கிறிஸ்துவின் வம்சவரலாற்றை எடுத்துகொள் ளுங்கள். ஒருகாலத்தில் கடவுள் மாத்திரமே இஸ்ரவேலின் அரசராக இருந்தார். ஆனால் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்து ஒரு மனித அரசர் வேண்டும் என்றார்கள் : “அப்படியல்ல, எங்களுக்கு ஒரு ராஜா இருக்கத்தான் வேண்டும்” ( *1* சாமுவேல் *8:19*). பின்பு அவர்கள், “ நாங்கள்

செய்த எல்லாப் பாவங்களோடும் எங்களுக்கு ஒரு ராஜா வேண்டும் என்று கேட்ட இந்தப் பாவத்தையும் கூட்டிக்கொண்டோம்"மக்கள் அறிக்கையிட்டார்கள் ( 1 சாமுவேல் 12:19). ஆனால், அதிலும் கடவுள் இருந்தார். இந்த ராஜாக்களின் வழி மரபிலே கிறிஸ்துவை உலகிற்கு அனுப்பினார். பாவமில்லா இரட்சகர் பாவிகளை இரட்சிக்க வந்தபோது, வம்சவழியில் பாவம் இருந்தது.

ஆனால் இதில் மிகவும் ஆச்சரியமான காரியம் என்ன என்றால், தீமையையும், பாடுகளையும் வெற்றிகொள்ள கிறிஸ்து நியமித்த வழி தீமையும் பாடுகளுமே. இயேசுவுக்கு எதிரான ஒவ்வொரு துரோகமும் கொடூரமும் பாவமும் தீமையுமாக இருந்தது. ஆனால் அதில் கடவுள் இருந்தார். "தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படியேயும், அவருடைய முன்னறிவின்படியேயும் [மரணத்திற்கு] ஒப்புக் கொடுக்கப்பட்ட அந்த இயேசு" என்று வேதம் கூறுகின்றது (அப்போஸ்தலர் 2:23). அவருடைய முதுகில் கசையடிகள், தலையில் முட்கள், கன்னத்தில் உமிழ் நீர், முகத்தில் அடிகள், கரங்களில் ஆணிகள், வயிற்றில் ஈட்டி, ஆட்சியாளர்களின் கடினசொற்கள், நண்பனின் துரோகம், சீஷர்கள் தனிமைப்படுத்துதல், இவை அனைத்துமே பாவத்தின் விளைவுகள். பாவத்தின் சக்தியை அழிக்க கடவுள் இதை வடிவமைத்தார். "அந்தப்படி உம்முடைய கரமும் உம்முடைய ஆலோசனையும் முன் குறித்தவைகள் யாவையும் செய்யும்படி, ஏரோதும் பொந்தியுபிலாத்தும், புறஜாதிகளோடும் இஸ்ரவேல் ஜனங்களோடுங்கூட . . . கூட்டங்கூடினார்கள்" ( அப்போஸ்தலர் 4:27,28).

தெய்வ மைந்தனை வெறுத்து கொலை செய்வதை விட பெரிய பாவம் எதுவுமே இல்லை. கிறிஸ்துவின் பாடுகள் மற்றும் குற்றமின்மையை விட மகத்துவமான பாடுகளும் குற்றமின்மையும் இல்லை. இருப்பினும் கடவுள் அனைத்திலும் இருந்தார். "கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமா(னார்)" ( ஏசாயா 53:10). தீமை மற்றும் பாடுகளின் வழியாக தீமையையும் பாடுகளையும் அழிக்க வேண்டும் என்பதே அவருடைய நோக்கம்."அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்" ( ஏசாயா 53:5)இதற்காகவே இயேசு மரணம் அடைய வந்தார். கடவுளால் நித்திய நீதிக்கும், மகிழ்ச்சிக்கும் கொண்டு வர முடியாத எந்த பாவமும், எந்த தீமையும் இல்லை என்பதை உலகிற்கு காண்பிக்க எண்ணினார். நாம் ஏற்படுத்திய அதே பாடுகள், நம்முடைய இரட்சிப்புக்கும் நம்பிக்கையாக மாறியது. "பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" ( லூக்கா 23:34).

# ஜெபம்

பரலோக தந்தையே, இயேசுவின் நாமத்தினாலே, ஒவ்வொரு வாசகருக்கும் இப்புத்தகத்தில் சரியாக இருக்கின்றனவற்றை உறுதி செய்யவும், தவறாக இருக்கக்கூடியவற்றை நீக்கிப்போடவும் நான் வேண்டிக்கொள்கிறேன். கிறிஸ்துவினால் யாரும் தடுமாற்றம் அடையாமல் இருக்க நான் பிரார்த்திக்கிறேன். அவருடைய தெய்வீக தன்மையையும், அவருடைய ஈடு இணையற்ற பாடுகளையும் எவரும் தவறாக எடுத்துக்கொள்ளாமல் இருக்கட்டும். இயேசு மரிப்பதற்காக வந்த காரணங்கள் எதையும் எவரும் நிராகரிக்காமல் இருக்கட்டும். பலருக்கு இவை புதிதாக இருக்கலாம். அவர்கள் இவற்றை கவனமாக புரிந்துகொள்ள பொறுமையை தாரும். அவர்களுக்கு புரிந்துகொள்ளுதலையும், ஞானத்தையும் கொடுத்தருளும்.

நித்திய காரியங்களை குறித்த அக்கறையின்மைகள் பனிபோல அகன்றுபோக ஜெபிக்கிறேன். பரலோகம் மற்றும் நரகம் குறித்த உண்மைகள் தெளிவுபடட்டும். சரித்திரத்தில் இயேசுவுக்கு இருக்கும் மையத்துவம் தெளிவாக புலப்பட நான் ஜெபிக்கிறேன். அவருடைய மரணமும் உலகத்தில் நிகழ்ந்த மிக முக்கியமான நிகழ்வாக இருக்கட்டும். பளிங்குபோல தெளிவான காற்று வீசுகின்ற நித்திய மலையின் மீது நாங்கள் நடக்க எங்களுக்கு அருள் தாரும்.

இயேசுவின் மரணத்தில் உமக்கு இருந்த மேன்மையான தெய்வீக நோக்கங்களில் இருந்து எங்கள் கவனம் சிதறாமல் இருக்க நான் ஜெபிக்கிறேன். உம்முடைய மைந்தனை கொன்றவர்கள் யார் என்கிற குறைவான கேள்வியினால் நாங்கள் நிறைந்துவிடாமல் எங்களை தடை செய்யும். நாங்கள் அனைவருமே அந்த கொலையில் உடன்பட்டவர்கள். ஆனால் அது முக்கியம் அல்ல. உம்முடைய வடிவமைப்பும், செயல்பாடுமே முக்கியம். ஓ ஆண்டவரே, நீரே இயேசுவின் மரணத்தை திட்டமிட்டீர், எந்த மனிதனும் திட்டமிடவில்லை என்பதை பார்க்க எங்கள் கண்களை திறந்தருளும். இவ்விடத்தில் இருந்து உம்முடைய எல்லையில்லா கிருபை நிறைந்த, நம்பிக்கை நிறைந்த நோக்கங்களை காணச்செய்யும்.

என்ன அற்புதமான உண்மையை நீர் வெளிப்படுத்தி இருக்கிறீர் : "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்" ( 1 தீமோத்தேயு 1:15). இரட்சிப்பை அவர் முக்கியமாக போதனையின் மூலமாக செய்யவில்லை, மரணத்தின் மூலமாக செய்தார். "கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து" ( 1 கொரிந்தியர் 15:3). எங்களுடைய சொந்த மனசாட்சியின் தேவைக்கு ஏற்ப வாழமுடியாது, உம்முடைய சொந்த பரிசுத்தத்தின் தேவைகளை சந்திப்பது எப்படி, என அறிந்துகொண்ட எங்களை போன்ற மக்களுக்கு இதைவிட வேறு அற்புதமான செய்தி இருக்க முடியுமா?

இந்த புத்தகத்தை வாசிக்கிற அனைவரும் தங்கள் தேவைகளை பார்த்து, பின்பு இயேசுவின் மரணத்தினால் நீர் தரும் பூரண கொடையை பார்த்து விசுவாசிக்க அருள்செய்வீரா, கிருபையுள்ள தகப்பனே? உம்முடைய மைந்தனின் வாக்குதத்தத்தினால் இதை நான் வேண்டிக்கொள்கிறேன் : "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவான் 3:16). இயேசுவின் கிருபையுள்ள நாமத்தினால் நான் ஜெபிக்கிறேன், ஆமென்.

# வேதாகமப் பதிவுகளின் வரலாற்று நம்பகத்தன்மை குறித்த புத்தகங்கள்

இயேசுவின் வாழ்க்கை, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் குறித்த சிறந்த புரிதலைக் கொடுக்கும் புத்தகங்களைப் படிக்க நீங்கள் விரும்பினால், பின்வரும் புத்தகங்களை நான் பரிந்துரை செய்வேன்


Bloomberg, Craig L. *The Historical Reliability of the Gospels.* Downers Grove, III.: InterVarsity Press, 1987.

Copan, Paul, ed. *Will the Real Jesus Please Stand Up? A Debate Between William Lane Craig and John Dominic Crossan.* Grand Rapids, Mich.:Baker, 1999.

Craig, William Lane, ed.*Jesus' Resurrection : Fact or Figment? A Debate Between William Lane Craig and Gerd Ludermann.* Downers Grove, III.: InterVarsity Press, 2000.

Craig, William Lane, *The Son Rises: The Historical Evidence for the Resurrection of Jesus.* Eugene, Ore.: Wipf & Stock, 2001.

Habermas, Gary R. *The Historical Jesus: Ancient Evidence for the Life of Christ.* Joplin, Mo.:College Press, 1996.

Wilkins, Michael J. and J.P.Moreland, eds. *Jesus Under Fire: Modern Scholarship Reinvents the Historical Jesus.* Grand Rapids, Mich.:Zondervan, 1996.

# குறிப்புகள்

1.Eli Wiesel, Night (New York: Bantam Books, 1982, originally 1960), p.72
2.இதே புத்தகத்தில், பக்கம் 73.
3.இதே புத்தகத்தில், பக்கம் 32.

## **தேவனை வாஞ்சித்தல்** (Desiring God)

தேவனை வாஞ்சித்தல் (Desiring God) என்கிற ஊழிய ஸ்தாபனம், இயேசு கிறிஸ்துவின் மூலமாக கடவுளின் மகத்துவத்தின் மீது மக்களுக்கு வாஞ்சையை ஏற்படுத்தும் நோக்கத்தில் இயங்கிக்கொண்டு இருக்கிறது. அது எல்லா மக்களுக்கும் மகிழ்ச்சி அளிக்கும். நாம் கடவுளில் அதிகமாக திருப்தி அடைந்து இருக்கும்போது கடவுள் அதிக மகிமை அடைகிறார், என்கிற சத்தியத்தை பரவச்செய்ய விரும்புகிறோம். ஜான் பைப்பர் எழுதும் புத்தகங்களில் இருந்து அவர் எந்த வருமானமும் பெறுவது இல்லை. அவை அனைத்தும் தேவனை வாஞ்சித்தல் ஊழியத்தில் மீண்டும் முதலீடு செய்யப்படுகின்றது. இந்த வாஞ்சையை மற்றவர்களுக்கும் பரவச் செய்ய வேண்டும் என்கிற எங்களுடைய தரிசனத்தின் அடிப்படையில் இவை அனைத்தும் வடிவமைக்கப்பட்டு இருக்கின்றன.

அதை மனதில் வைத்து, உங்கள் அனைவரையும் தேவனை வாஞ்சித்தல் Desiring God இணையதளத்திற்கு அழைக்கிறோம் : www.desiringGod.org. இருபத்து ஐந்து ஆண்டுகால ஜான் பைப்பரின் இலவச பிரசங்கங்களை பதிவேடுகளாகவும், நூற்றுக்கணக் கானவற்றை ஒலி வடிவத்திலும் பெற்றுக்கொள்ளலாம். அதோடு இலவச கட்டுரைகளும் எங்களுடைய வரவிருக்கும் மாநாடுகள் பற்றிய அறிவிப்புகளையும் பெற்றுக்கொள்ளலாம். ஒலித்தகடுகள், நோயல் பைப்பர் எழுதிய கடவுள் சார்ந்த குழந்தைகள் பாடநூல்கள், புத்தகங்கள் மற்றும் பல ஆதாரங்கள், ஜான் பைப்பர் எழுதிய முப்பதுக்கும் மேற்பட்ட புத்தகங்கள் ஆகியவற்றை வாங்கிக்கொள்ள உதவும் இணையதள வியாபார மையமும் இருக்கிறது. எங்களுடைய வானொலி ஊழியங்கள் குறித்த தகவல்களையும் நீங்கள் desiringGodradio.org இணையதளத்தில் காணலாம்.

**தேவனை வாஞ்சித்தல்** இடம் உங்களால்-இயன்றதை-செய்யுங்கள் தீர்வும் இருக்கிறது. இது அதிகமான பணம் இல்லாதவர்களுக்காக வடிவமைக் கப்பட்டு இருக்கிறது. இந்த தீர்வை குறித்து நீங்கள் அதிகம் அறிந்துகொள்ள விரும்பினால், கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரி அல்லது தொலைபேசி எண்ணை தொடர்புகொள்ளவும்.

எல்லாவற்றுக்கும் மேலாக இயேசு கிறிஸ்துவை நீங்கள் வைத்துக்கொள்ள உதவுவதற்காக நாங்கள் இருக்கிறோம். ஏதாகிலும் ஒரு வகையில் உங்களுக்கு நாங்கள் உதவ வேண்டுமானால், தயவுசெய்து எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்!

---

Desiring God
OM Books
Logos Bhavan
Jeedimetla Village, Secunderabad - 67
India
Website:www.desiringGod.org.